



MAKKAL KURAL (Independent National Tamil Daily) 8 பக்கம் விலை ரூ.4.00


# மக்கள் குரல்

நடுநிலை நாளேடு

RNI No. 24383/1973 TN/PMG(CCR)/WPP-675/21-23

(மலர் 48 ✱ சென்னை 27–6–2021 ஞாயிறு மாலை ✱ வெளியூர் 28–6–2021 திங்கள் ✱ இதழ் 293)

Regd. No. TN/CC(S)DN/122/21-23



* நாடு முழுவதும் இதுவரை 31 கோடி மக்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது
* தடுப்பூசியால் பாதிப்பில்லை என்பதை வதந்தி பரப்புவோரிடம் விளக்க வேண்டும்

# கிராமங்களில் அனைவரும் கொரோனா தடுப்பூசி போட்டுக் கொள்வதே இலக்கு

## ‘மன் கி பாத்’ நிகழ்ச்சியில் பிரதமர் மோடி அறிவுறுத்தல்

புதுடெல்லி, ஜூன்.27–

**‘கிராமங்களில் அனைவரும் கொரோனா தடுப்பூசிபோட்டுக் கொள்வதே இலக்காக இருக்க வேண்டும் என்று பிரதமர் மோடி அறிவுறுத்தினார்.**

**‘‘நாடு முழுவதும் 31 கோடி மக்களுக்கு கொரோனா தடுப்பூசி போடப்பட்டுள்ளது. என் 100 வயது தாயாரும் போட்டுக் கொண்டுள்ளார்’’ என்று குறிப்பிட்ட மோடி, தடுப்பூசி போட்டுக் கொள்வதால் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்பதை வதந்தி பரப்புவோர்களிடம் விளக்கிச் சொல்ல வேண்டும்’ என்று அறிவுறுத்தினார்.**

‘‘நான் உலகின் பழமையான தமிழ்மொழி மற்றும் தமிழ் கலாச்சாரத்தின் பெரிய அபிமானி. தமிழ் மீதான என் அன்பு என்றும் குறையாது’ எனவும் மோடி மகிழ்ச்சியோடு கூறினார்.

இன்று மன் கி பாத் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசியதாவது:–

வழக்கமான ‘மன் கி பாத்’ நிகழ்ச்சியில் நீங்கள் தான் என்னிடம் கேள்வி எழுப்புவீர்கள். இம்முறை சற்று வித்தியாசமாக சிந்தித்து இருக்கிறேன். நான் உங்களிடம் கேட்கிறேன். கவனமாகக் கேளுங்கள். அதற்கு பதில் தாருங்கள்.

★ ஒலிம்பிக் போட்டியில் தனியாக தங்கப் பதக்கத்தை வென்ற முதல் இந்தியர் யார்?

★ ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் எந்த விளையாட்டில் இந்தியா அதிக எண்ணிக்கையில் பதக்கங்களை குவித்தது?

★ ஒலிம்பிக் போட்டியில் எந்த வீரர் அதிக எண்ணிக்கையில் பதக்கங்களை குவித்தார்?

இந்தக் கேள்விகளுக்கு நீங்கள் பதில் அனுப்பலாம் இல்லை அனுப்பாமல் போகலாம். இந்தக் கேள்விகளுக்கு பதிலளித்தால் என்னுடைய அரசிடமிருந்து பல பரிசுகளை நீங்கள் வெல்லலாம்.

### டோக்யோ செல்ல புதிர்

‘புதிருக்கு பதில்சொல் –– டோக்யோவுக்கு பயணம் செல் என்னும் ‘இந்தப் போட்டிக்குப் பதிலளித்துடோக்யோ செல்லும் வாய்பபைப் வெறுங்கள். இந்த போட்டியில் நீங்கள் அவசியம் பங்கேற்பீர்கள் என்று நம்புகிறேன்.

திறமை, கடமையில் அர்ப்பணிப்பு, விளையாட்டு வீரருக்கான உறுதிப்பாடு, வெற்றி பெற வேண்டும் என்ற உத்வேகம். ஒருவனை சாம்பியனாக உருவாக்கும் நம் நாட்டில் பெரும்பாலான விளையாட்டு வீரர்கள் சிறிய நகரங்கள் கிராமங்களில் இருந்தே உருவாகி வருகிறார்கள். இதற்கு நாம் பலரையும் உதாரணம் காட்டலாம்.

ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் நமது வீரர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும். திறமை அர்ப்பணிப்பு மனதில் உறுதி, நேர்மை எல்லாம் சேரும் போது சாம்பியன் உருவாகிறார். ஒலிம்பிக் போட்டிகள் குறித்து பேசும் போது, மில்கா சிங்கை நம்மால் மறக்க முடியாது. அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது, அவருடன் பேசும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது, டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் வீரர்களுக்கு உற்சாகமும், ஊக்கமும் அளிக்க வேண்டும் எனக் கேட்டு கொண்டேன்.

மஹாராஷ்டிராவை சேர்ந்த கூலி தொழிலாளி மகன் பிரவின் ஜாதவ் வில்வித்தை போட்டியில் பங்கேற்கிறார்.

இந்திய பெண்கள் ஹாக்கி அணியில் பங்கேற்கும் நேகா கோயல், தாயார், சகோதரிகள், சைக்கிள் தொழிற்சாலையில் பணிபுரிந்து குடும்பத்தை நடத்தினர்.

வில்வித்தையில் பங்கேற்கும் தீபிகாவும், வாழ்க்கையில் பல ஏற்றங்கள் மற்றும் தாழ்வுகளை சந்தித்தனர்

டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் ஒவ்வொரு வீரரும், தங்களது வாழ்க்கையில் கடுமையான போராட்டங்கள் சந்தித்தவர்கள். நீண்ட காலம் கடுமையாக உழைத்து உள்ளனர். வீரர்கள், அவர்களுக்காக மட்டும் செல்லவில்லை. நாட்டிற்காக செல்கின்றனர்.

### இந்தியா சுதந்திர தின 75வது ஆண்டு விழா

ஆகஸ்ட் 15– இந்திய சுதந்திரத்தின் 75வது ஆண்டு விழா. நாட்டுக்காக வாழக் கற்றுக் கொள்வோம். சர்வ பதி தியாகங்களைச் செய்த தலைவர்களால் முன்னோடிகளால் நாட்டு மக்களால் கிடைத்திருக்கும் சுதந்திரம்.

இந்தியா தான் நமக்கு முதன்மை என்பதே நமது தாரக மந்திரமாக இருக்க வேண்டும். எந்த ஒரு முடிவெடுத்தாலும் அதன் அடிப்படை இந்தியா முதன்மை என்ற உணர்வே இருக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

### புதிய மைல்கல்

கோவிட்டிற்கு (கொரானா) எதிரான போரில் ஒவ்வொருவரும் தங்களது பங்களிப்பை அளித்து உள்ளனர். கொரோனாவிற்கு எதிரான நாட்டு மக்களின் போராட்டம் தொடர்கிறது. இந்த போராட்டத்தில் நாம் புதிய மைல்கல்லை அடைந்து உள்ளோம். சில நாட்களுக்கு முன்னர், நாம் மிகப்பெரிய சாதனை படைத்து உள்ளோம். தடுப்பூசி மீதான தயக்கத்தில் இருந்து மக்கள் மீண்டு வர வேண்டும். தடுப்பூசி போட்டு கொண்டவர்களுக்கு லேசான காய்ச்சல் வரலாம். அது சில மணி நேரங்கள் மட்டுமே இருக்கும். அனைவரும் தடுப்பூசி போட்டு கொள்வது அவசியம். நீங்கள் தடுப்பூசி போடாவிட்டால், உங்களுக்கு மட்டுமல்லாமல், உங்களது கிராமம் மற்றும் குடும்பத்தினருக்கும் ஆபத்தை உருவாக்குகிறீர்கள்.

### விஞ்ஞானிகள் 24 மணிநேரமும் உழைப்பு

மக்களே, நீங்கள் அனைவரும் அறிவியலை நம்ப வேண்டுகிறேன். நம் விஞ்ஞானிகள் மீது நம்பிக்கை கொள்ளுங்கள். தடுப்பூசியை கண்டுபிடிக்க, நமது விஞ்ஞானிகள்

(5–ம் பக்கம் பார்க்க)



### தமிழ்மொழி கலாச்சாரத்தின் பெரிய அபிமானி நான்

**‘‘பஞ்சாப் சீக்கிய குரு கோவிந்த்ஜி தமிழ் குறித்து பெருமையாக எடுத்துரைத்துள்ளார். திருக்குறளும் புகழ்பெற்றது. உலகிலேயே தமிழ்மொழி சிறந்த மொழி. தமிழ் மொழி எனக்கு மிக பிடிக்கும். இந்த மொழியின் ரசிகன் நான். நான் உலகின் பழமையான தமிழ்மொழி மற்றும் தமிழ் கலாச்சாரத்தின் பெரிய அபிமானி. தமிழ் மீதான என் அன்பு என்றும் குறையாது. தமிழ் குறித்து எனக்கு மிகவும் பெருமிதமாக உள்ளது’’.**

### வாள்வீச்சு வீராங்கனை பவானி தேவிக்கு வாழ்த்து

**சென்னையைச் சேர்ந்த வீராங்கனை சி.ஏ.பவானி. வாள்வீச்சில் வல்லவர். ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கிறார். வாள்வீச்சு போட்டியில் பங்கேற்கும் இந்தியாவின் முதல் வீராங்கனை என்னும் பெருமைக்குரியவர். பயிற்சியைத் தொடர வேண்டும் என்பதற்காக அவருடைய தாயார் தன் நகையைக் கூட அடகு வைத்திருப்பதாக ஒரு தகவலைப் படித்தேன். பவானிக்கு என் இதயப்பூர்வமான வாழ்த்துக்கள்.**




# கோவை, மதுரை உள்ளிட்ட 34 மாவட்டங்களில் பெட்ரோல் விலை ரூ.100

சென்னை, ஜூன் 27–

**பெட்ரோல் விலை கோவை, மதுரை உள்ளிட்ட 34 மாவட்டங்களில் பெட்ரோல் விலை ரூ.100ஐ கடந்துள்ளது.**

கடந்த ஒரு ஆண்டாக கச்சா எண்ணெயின் விலை அதிகரித்து வருவதாலும், மத்திய – மாநில அரசுகளும் பெட்ரோல் டீசல் மீது வரியை விதிப்பதாலும், நாடு முழுவதும் பெட்ரோல் டீசல் விலை கிடுகிடுவென உயர்ந்து வருகிறது.

நாட்டின் பல்வேறு மாநிலங்களில் பெட்ரோல் விலை கடந்த சில நாட்களுக்கு முன்பே 100ஐ கடந்து இருந்தது. இந்த நிலையில் தமிழகத்திலும் தற்போது சென்னை, திருவள்ளூர், திருச்சி, நெல்லை ஆகிய 4 மாவட்டங்களை தவிர 34 மாவட்டங்களிலும் பெட்ரோல் விலை 100ஐ தாண்டியுள்ளது.

சென்னையில் ஒரு லிட்டர் பெட்ரோல் விலை இன்று ரூ.99.53க்கு விற்பனையானது. திருவள்ளூரில் – ரூ.99.81 ஆகவும், திருச்சியில் – 99.94 ஆகவும், நெல்லையில் – 99.99ஆகவும் விற்பனை செய்யப்படட்ன. இந்த 4 மாவட்டங்களிலும் அடுத்த சில நாட்களில் பெட்ரோல் விலை 100ஐ தொடும் நிலை ஏற்பட்டுள்ளது.

கோவை, மதுரை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், விழுப்புரம், கடலூர், அரியலூர், தர்மபுரி, திண்டுக்கல், ஈரோடு, கள்ளக்குறிச்சி, கன்னியாகுமரி, கரூர், கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், நாமக்கல், நீலகிரி, பெரம்பலூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம், ராணிப்பேட்டை, சேலம், சிவகங்கை, தென்காசி, தஞ்சாவூர், தேனி, திருப்பத்தூர், திருவண்ணாமலை, திருவாரூர், தூத்துக்குடி, திருப்பூர், விருதுநகர், மயிலாடுதுறை ஆகிய 34 மாவட்டங்களில் ரூ.100ஐ கடந்துள்ளது.

பெட்ரோல் விலையுடன் டீசல் விலையும் கடுமையாக உயர்ந்துள்ளது. டீசல் விலையும் பல்வேறு மாவட்டங்களில் லிட்டர் ஒன்றுக்கு ரூ.95 அளவுக்கு விற்பனையாகிறது. இதன் காரணமாக லாரி, ஆட்டோ, வாடகை கார் கட்டணங்களின் விலையும் பல மடங்கு உயர்ந்துள்ளது.

# மர்ம நபர் கொடுத்த கொரோனா மாத்திரையை சாப்பிட்ட 3 பேர் உயிரிழப்பு

## 2 பேர் கைது

ஈரோடு, ஜூன் 27–

**ஈரோடு மாவட்டத்தில் கொரோனா மாத்திரை என்று கூறி மர்ம நபர் கொடுத்த மாத்திரையை சாப்பிட்ட 3 பேர் உயிரிழந்தனர். மேலும் ஒருவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இது தொடர்பாக 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

ஈரோடு மாவட்டம் பெருமாள்மலை பகுதியை சேர்ந்தவர் கருப்பணகவுண்டர் (வயது 75) விவசாயி. இவருடைய மனைவி மல்லிகா (58), மகள் தீபா (30). தீபாவுக்கு திருமணம் ஆகி கணவர் பிரபு (வயது 35) என்பவருடன் தனது தந்தை வீட்டிலேயே வசித்து வருகிறார். இவர்களுக்கு லோகித் (4) என்ற மகனும், லட்சிதா (1) என்ற மகளும் உள்ளனர். நேற்று காலை தீபாவின் கணவர் பிரபு சென்னிமலைக்கு சென்று விட்டார். அப்போது வீட்டில் கருப்பணகவுண்டர், அவரது மனைவி மல்லிகா, மகள் தீபா மற்றும் இரு குழந்தைகளும் இருந்தனர்.

அப்போது இவர்களுடன் தோட்டத்தில் வேலை செய்யும் குப்பம்மாள் (65) என்ற பெண் மற்றும் பக்கத்து தோட்டத்தை சேர்ந்த கல்யாணசுந்தரம் (43) ஆகியோரும் இருந்துள்ளனர். நேற்று காலை சுமார் 25 வயதுடைய வாலிபர் ஒருவர் அங்கு வந்து கருப்பணகவுண்டர் வீடு இதுதானே என்று கேட்டுள்ளார். அதற்கு வீட்டில் இருந்தவர்கள் ஆமாம் என கூறியுள்ளனர்.

### கொரோனா பரிசோதனை மோசடி

அப்போது அந்த வாலிபர், நான் உங்களுக்கு கொரோனா பரிசோதனை செய்ய வந்துள்ளேன். பரிசோதனை செய்வதற்கு முன் மாத்திரை சாப்பிட வேண்டும் என்று சில மாத்திரைகளை கொடுத்துள்ளார். பல இடங்களில் கொரோனா பரிசோதனை நடந்து வருவதால் இதனை அவர்கள் நம்பி விட்டனர். அந்த வாலிபர் கொடுத்த கருப்பு நிற மாத்திரைகளை கருப்பணகவுண்டர், மல்லிகா, தீபா மற்றும் குப்பம்மாள் ஆகியோர் சாப்பிட்டுள்ளனர். ஆனால் அங்கிருந்த கல்யாணசுந்தரம் ஏற்கனவே கொரோனா பரிசோதனை செய்துள்ளதால் எனக்கு வேண்டாம் என கூறியுள்ளார். பின்னர் மாத்திரை சாப்பிட்ட 4 பேரையும் ஒரு கருவி மூலம் பரிசோதனை செய்த வாலிபர் யாருக்கும் கொரோனா இல்லை என கூறினார். பின்னர் தன்னை அந்த ஊரின் மெயின்ரோடு வரை கொண்டு சென்று விட்டுவிடுமாறு கல்யாணசுந்தரத்திடம் கூறி உள்ளார். உடனே அவர் மோட்டார் சைக்கிளில் மெயின்ரோடு வரை கொண்டு போய் விட்டுவிட்டு வந்துள்ளார். அந்த வாலிபர் சென்ற சிறிது நேரத்தில் மாத்திரை சாப்பிட்ட 4 பேருக்கும் வாந்தி, மயக்கம் ஏற்பட்டுள்ளது. உடனடியாக அவர்கள் சென்னிமலை அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டனர்.

பின்னர் மேல் சிகிச்சைக்காக ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லும் வழியில் மல்லிகா பரிதாபமாக இறந்தார். குப்பம்மாள் சேலம் அரசு மருத்துவமனையிலும், கருப்பணகவுண்டர், தீபா ஆகியோர் கோவையில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் குப்பம்மாள், தீபா ஆகியோர் சிகிச்சைப் பலனின்றி இன்று காலை உயிரிழந்தனர். இதுகுறித்து, ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சசிமோகன், பெருந்துறை காவல் துணைக் கண்காணிப்பாளர் செல்வராஜ், சென்னிமலை காவல் ஆய்வாளர் சரவணன் ஆகியோர் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை மேற்கொண்டனர். இது தொடர்பாக சபரி, கல்யாணசுந்தரம் ஆகிய 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நல்லவேளையாக குழந்தைகள் இருவருக்கும் மாத்திரை கொடுக்காததால் அவர்கள் தப்பித்தனர்.



# இயக்குனர் ஷங்கர் மகள் திருமணம்: முதல்வர் ஸ்டாலின் நேரில் வாழ்த்து

சென்னை, ஜூன் 27–

பிரபல திரைப்பட இயக்குநர் ஷங்கரின் மகள் ஐஸ்வர்யா –ரோஹித் திருமண விழாவில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.

ஷங்கர்–ஈஸ்வரி ஷங்கர் தம்பதிக்கு இரண்டு மகள்கள், ஒரு மகன் உள்ளனர்.

தொழிலதிபர் தாமோதரன், தமிழ்நாடு ப்ரீமியர் லீக்கில் விளையாடும், மதுரை பேந்தர்ஸ் அணியின் உரிமையாளராவார். இவரது மகன் ரோஹித், புதுச்சேரி ரஞ்சி கிரிக்கெட் அணியின் கேப்டனாக உள்ளார். ஷங்கரின் மூத்த மகள் டாக்டரான ஐஸ்வர்யா ஷங்கருக்கும், கிரிக்கெட் வீரரான ராகவேந்திர குமார் என்கிற ரோஹித்துக்கும் இன்று மாமல்லபுரத்தில் உள்ள ரெசார்ட்டில் திருமணம் நடைபெற்றது.

விழாவில் நெருங்கிய உறவினர்கள் மற்றும் கலையுலக நண்பர்கள் பங்கேற்றனர்.

# ஜம்மு - காஷ்மீரில் விமானப்படை தளத்தில் இன்று அதிகாலை வெடி குண்டுகள் வீச்சு

## தடயவியல் நிபுணர்கள், போலீசார் விசாரணை

ஜம்மு, ஜூன்.27–

**ஜம்மு காஷ்மீரில் விமானப்படை தளத்தின் தொழில்நுட்பப் பிரிவு வளாகத்தில் இன்று அதிகாலை 2 மணியளவில் பயங்கர வெடிப்புச் சத்தம் கேட்டது. இதில் 2 குண்டுகள் வெடித்துள்ளது தெரிய வந்துள்ளது.**

குண்டு வெடிப்பு சம்பவம் குறித்து விமானப் படை தரப்பில் ட்விட்டரில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. அதில், "இன்று அதிகாலை இரண்டு சிறு குண்டு வெடிப்பு ஜம்மு விமானப்படை தளத்தின் தொழில்நுட்பப் பிரிவு வளாகத்தில் நடந்துள்ளது. ஒரு வெடிகுண்டு வெடித்ததில் கூரை சேதமடைந்தது. இன்னொரு குண்டு திறந்தவெளியில் வெடித்தது. எவ்வித பொருள் சேதமும் ஏற்படவில்லை. இரண்டு பணியாளர்களுக்கு லேசான காயம் ஏற்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலுக்கு ஆளில்லா விமானம் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் இருவர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

குண்டு வெடிப்புச் சம்பவத்தையடுத்து, அங்கு தடயவியல் நிபுணர்களும், வெடிகுண்டு அகற்றும் நிபுணர்களும் சென்று ஆதாரங்களை திரட்டினர். பெருமளவில் சேதம் ஏதும் ஏற்படவில்லை என்று போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதி முழுவதும் பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

முதல் வெடிகுண்டு சம்பவம் நள்ளிரவு 1.37 மணிக்கும், 2வது வெடிகுண்டு சம்பவம் 1.42 மணிக்கும் நடந்துள்ளது.

தேசிய பாதுகாப்புப் படையின் வெடிகுண்டு சோதனை படையும், என்.ஐ.ஏ.குழுவும் விரைந்துள்ளன.

### ராஜ்நாத் சிங் விவரம் கேட்டார்

ராணுவ அமைச்சர் ராஜ்நாத் சிங், விமானப்படை துணைத் தளபதி ஹஜீத் சிங் அரோராவை டெலிபோனில் அழைத்தார். குண்டு வெடிப்பு குறித்து விவரம் கேட்டறிந்தார்.

‘ட்ரோனைப் பயன்படுத்தி விமானப்படை தளத்தினுள் குண்டுகளை வீசி இருக்கலாம் என்று போலீசார் சந்தேகிக்கிறார்கள். விமானப்படை தளம், இந்திய பாகிஸ்தான் எல்லையிலிருந்து 14 கி.மீ. தொலைவில் உள்ளது. முந்தைய சம்பவங்களிலும் 12 கி.மீ. தொலைவில் இருந்து இதே போல வெடிகுண்டுகள் ‘ட்ரோன்’ மூலம் வீசப்பட்டுள்ளது.

# பிளஸ்–2 மதிப்பெண் கணக்கீடு எப்படி? ஸ்டாலின் விளக்கம்

சென்னை, ஜூன் 27–

கொரோனா பரவல் காரணமாக பிளஸ் 2 தேர்வு ரத்து செய்யப்பட்டதால், பிளஸ் 2 மாணவர்களுக்கு மதிப்பெண் கணக்கிடும் முறை பற்றி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

கொரோனா பெருந்தொற்றின் காரணமாக 2020–2021ம் கல்வியாண்டில் நடக்கவிருந்த பன்னிரெண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வுகள் ஏற்கெனவே ரத்து செய்யப்பட்டுள்ளன. மாணவர்களுக்கு மதிப்பெண் வழங்கும் முறையை முடிவு செய்வதற்காகப் பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் தலைமையில் உயர் கல்வித் துறை முதன்மைச் செயலாளர், சென்னை பல்கலைக் கழகத் துணைவேந்தர், பள்ளித் தலைமை ஆசிரியர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் அடங்கிய குழு அரசுக்கு தனது அறிக்கையை அளித்துள்ளது.

10, 11ம் வகுப்புப் பொதுத் தேர்வுகளில் பெற்ற மதிப்பெண்கள் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளன. 12ம் வகுப்பு செய்முறைத் தேர்வுகள் நடத்தி முடிக்கப்பட்டு, அதற்கான மதிப்பெண்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில், 12ம் வகுப்புக்கான இறுதி மதிப்பெண்களைக் கீழ்க்கண்ட விகிதாச்சார அடிப்படையில் வழங்க வல்லுநர் குழு பரிந்துரைத்துள்ளது.

### கணக்கீடு எப்படி?

அதன் விபரம் வருமாறு:–

அதன்படி, 10ம் வகுப்பு பொதுத்தேர்வுக்கு (உயர் மதிப்பெண் பெற்ற 3 பாடங்களுடைய சராசரி) 50 சதவீதமும், 11ம் வகுப்பு (பிளஸ்–1) பொதுத் தேர்வுக்கு (ஒவ்வொரு பாடத்திலும் பெற்ற எழுத்துமுறை மதிப்பெண் மட்டும்) 20 சதவீதமும், 12ம் வகுப்பு செய்முறைத்தேர்வு / அக மதிப்பீடு 30 சதவீதமும் என நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது.

★ 12–ம் வகுப்பில் ஒவ்வொரு பாடத்திலும் செய்முறைத் தேர்வு (20) மற்றும் அக மதிப்பீட்டில் (10) என மொத்தம் 30க்குப் பெற்ற மதிப்பெண் முழுவதும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

★ செய்முறைத் தேர்வு இல்லாத பாடங்களில் அக மதிப்பீட்டில் (10) பெற்ற மதிப்பெண் 30 மதிப்பெண்களுக்காக மாற்றப்பட்டு (Extrapolated to 30 Marks) முழுவதும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்

★ கொரோனா பெருந்தொற்று உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக 12ம் வகுப்பு செய்முறைத் தேர்வுகளில் பங்குபெற இயலாத மாணவர்களுக்கு அவர்களின் 11ம் வகுப்பு செய்முறைத் தேர்வுகளில் பெற்ற மதிப்பெண் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

### தனித்தேர்வு எழுத வாய்ப்பு

★ 11ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு செய்முறைத் தேர்வுகள் இரண்டிலும் பங்குபெற இயலாத மாணவர்களுக்கு அவர்களின் 10ம் வகுப்பு மற்றும் 11ம் வகுப்பு எழுத்துத் தேர்வுகளின் அடிப்படையில் 12 ஆம் வகுப்பு செய்முறைத் தேர்வு மதிப்பெண் வழங்கப்படும்.

★ கடந்த ஆண்டு 11ம் வகுப்பு எழுத்துத் தேர்வில் ஏதேனும் பாடங்களில் தோல்வி அடைந்திருந்தாலோ, தேர்வு எழுத இயலாத நிலை இருந்திருந்தாலோ, அம்மாணவர்களுக்கு தற்போது அத்தேர்வுகளை மீண்டும் எழுத வாய்ப்பு இல்லாத நிலையைக் கருத்தில்கொண்டு, 35 விழுக்காடு மதிப்பெண் வழங்கப்படும்.

★ 11ம் வகுப்பு எழுத்துத் தேர்வு, அக மதிப்பீடு, செய்முறைத் தேர்வு மற்றும் 12ம் வகுப்பு அக மதிப்பீடு, செய்முறைத் தேர்வு ஆகிய தேர்வு நிலைகளில் ஒன்றில் கூட கலந்து கொள்ளாத மாணவர்கள் தனித் தேர்வர்களாகத் தேர்வு எழுத வாய்ப்பு வழங்கப்படும்.

★ ஒவ்வொரு மாணவருடைய மதிப்பெண்ணும் மேற்கூறிய முறைகளில் கணக்கிடப்பட்டு, உச்சநீதிமன்ற ஆணைப்படி ஜூலை 31ம் தேதிக்குள் அரசுத் தேர்வுகள் துறை இணையதளத்தில் வெளியிடப்படும்.

★ இம்மதிப்பீட்டு முறையில் கணக்கிடப்படும் மதிப்பெண்கள் தமக்குக் குறைவாக உள்ளதாகக் கருதும் மாணவர்களுக்கு, அவர்கள் விரும்பினால் 12ம் வகுப்பு எழுத்துத் தேர்வெழுத வாய்ப்பு வழங்கப்படும். அவ்வாறு நடத்தப்படும் தேர்வில் அவர்கள் பெறும் மதிப்பெண்ணே அவர்களது இறுதி மதிப்பெண்ணாக அறிவிக்கப்படும்.

★ தனித்தேர்வு எழுதவிருக்கும் மாண வர்களுக்கு கொரோ னா பெருந்தொற்றுப் பரவல் சீரடைந்தவுடன், மேற்குறிப்பிட்டோருடன் சேர்த்து தக்க சமயத்தில் தேர்வு நடத்தப்படும். இத்தேர்விற்கான கால அட்டவணை பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வாறு செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



லைகா புரொடக்க்ஷன்ஸ் சுபாஸ்கரன் சார்பில் முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு ரூ.2 கோடி செக்கை முதல்வர் மு.க. ஸ்டாலினிடம் இதன் தலைமை செயல் அதிகாரி ஜி.கே.எம். தமிழ்குமரன், டைரக்டர் ராஜா சுந்தரம் நிருத்தன், கவுரவ் சச்ரா ஆகியோர் வழங்கினர். உதயநிதி ஸ்டாலின் எம்.எல்.ஏ. உடன் உள்ளார். இதேபோல பெப்சி அமைப்புக்கும் ரூ. 1 கோடி நன்கொடை வழங்கப்பட்டது.

# இந்தியா – இங்கிலாந்து மகளிர் அணிகள் மோதும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டி இன்று ஆரம்பம்

பிரிஸ்டல், ஜூன் 27–

இந்தியா – இங்கிலாந்து மகளிர் அணிகள் மோதும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

இந்தியா இங்கிலாந்து மகளிர் கிரிக்கெட் அணிகள் மோதும் முதல் ஒருநாள் போட்டி, பிரிஸ்டல் கவுன்டி மைதானத்தில் இன்று பிற்பகல் 3.30க்கு தொடங்குகிறது. இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய மகளிர் அணி ஒரு டெஸ்ட், தலா 3 ஒருநாள், டி20 போட்டிகளில் விளையாடுகிறது. டெஸ்ட் போட்டி டிராவில் முடிந்த நிலையில் ஒருநாள் தொடர் இன்று பிரிஸ்டலில் தொடங்குகிறது. தொடர்ந்து 2வது ஒருநாள் ஜூன் 30ம் தேதி டான்டனிலும், 3வது ஒருநாள் ஜூலை 3ம் தேதி வொர்செஸ்டரிலும் நடைபெற உள்ளன. மித்தாலி ராஜ் தலைமையிலான இந்திய அணி, டெஸ்ட் போட்டியில் கடுமையாகப் போராடி டிரா செய்தது அனைவரது பாராட்டுகளையும் அள்ளியது. கொரோனா பரவலுக்கு பிறகு பல மாதங்களாக சர்வதேச போட்டிகளில் விளையாடாதது, போதிய பயிற்சி இல்லாதது என சில பின்னடைவுகள் இருந்தாலும், இந்திய வீராங்கனைகள் சிறப்பாக செயல்பட்டு அசத்தினர். குறிப்பாக ஷபாலி, மந்தனா, டானியா, தீப்தி, ஸ்நேஹ் ராணா ஆகியாரின் ஆட்டம் அமர்க்களமாக இருந்தது.



இந்த நிலையில், ஒருநாள் போட்டித் தொடரை வெற்றியுடன் தொடங்கும் முனைப்புடன் இரு அணிகளும் வரிந்துகட்டுவதால், பிரிஸ்டல் கவுன்டி மைதானத்தில் இன்று நடக்கும் முதல் போட்டியில் அனல் பறப்பது உறுதி. இந்தியா: மித்தாலி ராஜ் (கேப்டன்), ஹர்மான்பிரீத் கவுர் (துணை கேப்டன்), டானியா பாட்டியா, ஏக்தா பிஷ்ட், ஜூலன் கோஸ்வாமி, ஸ்மிரிதி மந்தனா, ஷிகா பாண்டே, பூனம் யாதவ், பிரியா பூனியா, ஸ்நேஹ் ராணா, பூனம் ராவுத், அருந்ததி ரெட்டி, ஜெமிமா ரோட்ரிகியூஸ், இந்திராணி ராய், ஷபாலி வர்மா, தீப்தி ஷர்மா, பூஜா வஸ்த்ராகர், ராதா யாதவ். இங்கிலாந்து: ஹீதர் நைட் (கேப்டன்), நதாலியே ஸ்கிவர் (துணை கேப்டன்), எமிலி அர்லாட், டாமி பியூமான்ட், கேதரின் பிரன்ட், கேத் கிராஸ், பிரெயா டேவீஸ், சோபியா டங்க்லி, சோபி எக்லஸ்டோன், டாஷ் பாரன்ட், சாரா கிளென், ஏமி ஜோன்ஸ், அன்யா ஷ்ரப்சோல், மேடி வில்லியர்ஸ், பிரான் வில்சன், வின்பீல்டு ஹில்.

# விம்பிள்டன் டென்னிஸ் நாளை தொடக்கம்

லண்டன், ஜூன் 27–

உலகின் மிகவும் பழமையான கிராண்ட் சிலாம் டென்னிஸ் போட்டியான விம்பிள்டன் போட்டி கடந்த ஆண்டு கொரோனா வைரஸ் காரணமாக ரத்து செய்யப்பட்டது.

இந்த ஆண்டுக்கான 3வது கிராண்ட்சிலாம் போட்டியான விம்பிள்டன் டென்னிஸ் லண்டன் நகரில் நாளை தொடங்குகிறது. ஜூலை 11ந்தேதி வரை இந்த போட்டி நடைபெறுகிறது.

இந்த போட்டியில் யார், யாருடன் மோதுவது என்பது குலுக்கல் மூலம் முடிவு செய்யப்பட்டது.

இதன்படி ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ‘நம்பர் ஒன்’ வீரரும், நடப்பு சாம்பியனுமான நோவக் ஜோகோவிச் (செர்பியா), ‘வைல்டு கார்டு’ சலுகை மூலம் பிரதான சுற்று வாய்ப்பை பெற்ற இங்கிலாந்து இளம் வீரர் ஜாக் டிராப்பருடன் மோதுகிறார்.

8 முறை சாம்பியனான மூத்த வீரர் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் தனது முதலாவது ரவுண்டில் 42ம் நிலை வீரர் அட்ரியன் மனரினோவை (பிரான்ஸ்) எதிர்கொள்ளும் வகையில் போட்டி அட்டவணை அமைந்துள்ளது. 2ம் நிலை வீரர் ரஷியாவின் மெட்விடேவ், ஜெர்மனியின் லெனர்ட் ஸ்டிரப்புடன் தனது சவாலை தொடங்குகிறார்.



இதே போல் கிரீசின் சிட்சிபாஸ், அமெரிக்காவின் டியாபோவுடன் மோதுகிறார். கணிப்புபடி எல்லாம் சரியாக நகர்ந்தால் கால்இறுதி சுற்றில் ஜோகோவிச், ஆந்த்ரே ரூப்லெவையும் (ரஷியா), பெடரர், மெட்விடோவையும் சந்திக்ககூடும்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் ‘நம்பர் ஒன்’ மங்கை ஆஸ்திரேலியாவின் ஆஷ்லி பார்ட்டி, புற்றுநோய் பாதிப்பில் இருந்து மீண்டு மறுபிரவேசம் செய்துள்ள கார்லா சுவாரஸ் நவரோவையும் (ஸ்பெயின்), முன்னாள் நம்பர் ஒன் வீராங்கனையும், 7 முறை சாம்பியனுமான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் சாஸ்னோவிச்சையும் (பெலாரஸ்) எதிர்கொள்கிறார்கள்.

முன்னணி வீரர்களான ரபெல் நடால் (ஸ்பெயின்), டொமினிக் தீம் (ஆஸ்திரியா) ஆகியோர் இந்த போட்டியில் இருந்து விலகி உள்ளனர். நடப்பு சாம்பியனான ஜோகோவிச் இந்த போட்டியில் 20 வது பட்டம் வென்று ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து), நடால் ஆகியோரின் சாதனையை சமன் செய்வாரா? என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படு கிறது. பெண்கள் பிரிவில் செரீனா வில்லியம்ஸ், ஆஸ்லிபார்டி, சபலென்கோ, சோபியா கெனின் ஆகியோர் பட்டம் பெறுவதற்கு கடுமையாக போராடுவார்கள்.

இதற்கிடையே, ஒற்றையர் பிரிவின் நடப்பு சாம்பியனான ருமேனியா வீராங்கனை சிமோனா ஹாலெப் நேற்று விலகினார். கடந்த மாதம் ரோமில் நடந்த இத்தாலி ஓபன் டென்னிஸ் போட்டியின் போது இடது பின்னங்காலில் காயமடைந்த 3ம் நிலை வீராங்கனையான ஹாலெப் அதில் இருந்து இன்னும் முழுமையாக மீளவில்லை. ‘காயத்தில் இருந்து குணமடையாததால் மிகவும் வருத்தத்துடன் விம்பிள்டனில் இருந்து விலகுகிறேன். ஒரு நடப்பு சாம்பியனாக அழகான இந்த மைதானத்தில் களம் காணும் ஆவலில் இருந்தேன். துரதிர்ஷ்டவசமாக உடல் ஒத்துழைக்கவில்லை’ என்று இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அவர் கூறியுள்ளார்.

## சிறுகதை – எதிர்பாராமல் கிடைத்தது

மு.வெ.சம்பத்

பிரபு தனது கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்து இன்றுடன் 10 வருடங்கள் முடிந்த நிலையில் தன்னை முன்னிறுத்த வழி தெரியாமல் தானும் இந்தக் கம்பெனியில் ஒரு ஆள் என வலம் வந்தான். அன்று அவன் மேஜைக்கு வந்த கோப்பில் உள்ள சிறு தவறுகளைச் சுட்டிக் காட்டி அதை எவ்வாறு சரி செய்தால் கம்பெனிக்கு லாபம் உண்டாகுமெனக் கூறி மேலதிகாரியின் கவனத்திற்குக் கொண்டு செல்ல, அவர் பிரபுவை அழைத்து, பாராட்டி விட்டு மாற்றங்களைச் செய்யச் சொன்னதோடு, தலைமை அலுவலகத்திற்கும் இதைத் தெரிவித்தார். பிறகு அந்த வேலையை எடுத்துச் செய்யும் அந்தக் கம்பெனியின் அதிகாரி பிரபுவிடம் வந்து நன்றி கூறி விட்டு பிறகு சந்திக்கிறேன் என்ற கூறி விடை பெற்றார்.

பின் இரண்டு நாட்கள் கழித்து வந்த அந்த அதிகாரி பிரபுவிடம் நிறைய விஷயங்கள் கலந்து பேசினார். அப்பொழுது பிரபுவுக்கு நிறைய பாடல்கள், கதைகள் எழுதுவது பொழுது போக்கென அறிந்ததும் அந்த அதிகாரி பிரபுவுடம் நாளைக்கு நாம் இருவரும் எனது நண்பர் சினிமாவில் பிரபலமாக உள்ளவரை சென்று பார்ப்போம். அவர் மூலம் உங்களுக்கு வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்படும் என நம்புகிறேன் என்றார். பிரபு மகிழ்வுடன் தலையாட்டினான்.

அடுத்த இரண்டு நாட்களில் பிரபுவை அழைத்துக் கொண்டு அந்த அதிகாரி அவரது நண்பரான சினிமா பிரபலத்தின் வீட்டிற்குச் சென்றார். அங்கு சம்பிரதாய பேச்சுக்கள் முடிந்ததும், பிரபு கொண்டு வந்த கதை மற்றும் பாடல்கள் அடங்கியவற்றை கொடுத்தனர். அவரும் கட்டாயம் ஆவன செய்கிறேன் என்று கூறியதும் இருவரும் அங்கிருந்து புறப்பட்டனர்.

அடுத்த மூன்று மாதம் கழித்து வந்த அதிகாரி பிரபுவிடம் என்ன ஏதாவது நடந்ததா என வினவ அழாக் குறையாக நடந்ததைக் கூறினான் பிரபு. தனது நான்கு பாடல்களை சில மாற்றங்கள் செய்து உபயோகப்படுத்தியுள்ளனர். அந்தப் பாடல்கள் மக்கள் மத்தியில் மிகவும் பிரபலமாகி விட்டது என்றதும் அந்த அதிகாரி சரி நான் நாளை சென்று அவைப் பார்த்துக் கேட்கிறேன் என்றதும் பிரபு வேண்டாம் என்னால் உங்கள் நட்பு பாதிக்கக் கூடாது. அதனால் அப்படியே விட்டு விடுங்கள் என்றான்.

சரியப்பா, என்னால் உனக்கு ஏற்பட்ட மன வருத்தத்திற்கு வருந்துகிறேன் என்று கூறி நகர்ந்தார்.

என்னதான் பலர் ஆறுதல் கூறினாலும் தான் ஏமாந்ததை பிரபுவால் ஜீரணிக்க முடியவில்லை. அலுவலகம் மற்றும் வீட்டில் செயற்கையாகவே வலம் வந்தான்.

அலுவலகப் பணிகளில் தொய்வு ஏற்பட்டு அடிக்கடி மேனேஜரிடம் சங்கடமான நிலைமை ஏற்பட்டது. அன்று மேனேஜர் பிரபுவை அழைத்து, நன்றாக வேலை செய்த நீங்கள் இப்படியாவதற்கு என்ன காரணம் என வினவ பிரபு ஒன்றுமில்லையெனக் கூறும் நேரத்தில், சினிமா பிரபலத்திடம் அழைத்துச் சென்ற அதிகாரி தற்செயலாக, அங்கு வர, அவர் நடந்ததை ஒன்று விடாமல் கூறினார்.

மேனேஜர் பிரபுவை மாலை என்னை வந்து பாருங்கள் என்று கூற, பிரபு அங்கிருந்து நகர்ந்தான்.

மாலை பிரபு மானேஜரைப் பார்க்கச் சென்ற போது, அவர் பிரபுவை அமரச் செய்து அவனைப் பற்றி தான் சேகரித்த விவரங்களைக் கூறினார்.

பிரபு சிறிது நேரம் சென்றவுடன், தன்னைச் சுதாகரித்துக் கொண்டு நடந்ததெல்லாம் உண்மை சார். நான் ஏமார்ந்து போனேனே என்றான். சரி, நடந்ததை நினைத்து வருந்தாதே. இந்த நிகழ்வைச் சற்று தள்ளி வைத்து நடைமுறைக்கு வாருங்கள். அலுவலகப் பணியில் தொய்வு ஏற்படாத வண்ணம் நடந்து கொள்ளுங்கள் என்றதும் சரியெனக் கூறி பிரபு அங்கிருந்து நகர்ந்தான்.

ஞாயிற்றுக் கிழமை காலையில் உறக்கம் கலைந்து பிரபு தனது படைப்புகளை எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

வாயிலில் தூங்கிக் கொண்டிருந்த அழைப்பான் சற்று விழித்து தனது குரலை வெளிப்படுத்தியதும் பிரபு இந்தக் காலை வேளையில் யாரென ஒரு வித படபடப்புடன் வாயிலை நோக்கிச் செல்ல, அங்கு வாயிலில் மானேஜரைக் கண்டதும் வாங்க சார்,வாங்க என்று உள்ளே அழைத்து நாற்காலியில் அமரச் சொன்னான். அப்போது அங்கு வந்த மனைவியை அறிமுகம் செய்து வைத்து விட்டு காலை சிற்றுண்டி அருந்தலாமாவென விண்ணப்பம் வைக்க, மானேஜர் ஒன்றும் வேண்டாமென மறுத்து விட்டார்.

பிரபுவின் மனைவி உள்ளே சென்று காப்பியை கொண்டு வந்து தந்தாள். சில சம்பிரதாய பேச்சுக்கள் முடிந்ததும் மானேஜர்,

பிரபு சில விஷயங்கள் அலுவலகத்தில் பேச முடியாது. அதனால் உன் வீட்டிற்கே வந்தேன் என்றார்.

நாளை முதல் நீங்கள் வேலையில் முழுக் கவனம் செலுத்துங்கள். பல விஷயங்கள் இதில் அடங்கியிருப்பதை நீங்கள் அறிவீர்கள் என்றார்.

மேலும் தாங்கள் எழுதியுள்ள கதைகள் மற்றும் பாடல்கள் சிலவற்றை நான் படிக்கத் தர முடியுமா என வினவ புன் சிரிப்புடன் இரண்டு கதைகள் மற்றும் பாடல்கள் இவற்றைக் கொடுத்தான். மகிழ்வுடன் மானேஜர் விடைபெற்றார்.

அடுத்த சில நாட்களில் பிரபு நன்றாகவே தன்னை வேலையில் ஈடுபடுத்திக் கொண்டான். மெல்ல மெல்ல பழைய நிலைக்குத் திரும்பிக் கொண்டிருந்தான். மானேஜர் பிரபுவை அழைத்து எதுவும் கேட்காமல் நடப்பதைக் கேட்டு கொண்டிருந்தார்.

அன்று மாலை மானேஜர் பிரபுவை அழைத்து நாளை மாலை 5.00 மணிக்கு நீங்களும் உங்கள் மனைவியும் கட்டாயம் எங்கள் இல்லத்திற்கு வாருங்கள். சிறு நிகழ்ச்சியொன்றிற்கு ஏற்பாடு செய்துள்ளேன் என்றார்.

ஆம் என்று தலையாட்டி விட்டு அங்கிருந்து பிரபு நகர்ந்தான்.

மறுநாள் மானேஜர் வீட்டிற்கு சென்ற பிரபு அங்கு அலுவலக நண்பர்கள் குடும்ப சகிதமாய் வந்திருப்பதைக் கண்டு மனதில் என்ன நிகழ்ச்சியென்று அறியாமல் ஒரு குழப்பத்தில் நிற்க மானேஜரும் அவரது மனைவியும் வந்து வரவேற்று இருக்கையில் அமரும்படி கூறினார்கள்.

சிற்றுண்டி, காபி எல்லோரும் அருந்தியதும் மானேஜர் அங்கே அமைக்கப்பட்டிருந்த மேடையில் மற்றும் இருவருடன் வந்தமர்ந்தார். மானேஜர் எல்லோரையும் வரவேற்று பின் மேடையில் அமர்ந்திருந்த ஒருவர் தனது மாமனார் என்றும் இன்னொருவர் தலைமை அலுவலகத்திலிருந்து வந்துள்ளவர் என்று அறிமுகம் செய்தார்.

பின் நாம் இந்த கூட்டத்தில் ஒருவரை கௌரவிக்கப் போகிறோம் என்று கூறியவுடன் வந்திருந்த அனைவருக்கும் யாரது என அறிய ஆவல் பெருகிக்கொண்டே போனது.

பின் மானேஜர் அலுவலகத்தில் சிறப்பாக பணியாற்றிமைக்காக, பிரபு அவர்களுக்கு பதவி உயர்வு மற்றும் அவரது பணியைப் பாராட்டி ஒரு சான்றிதழ் தலைமை அலுவலக பிரதிநிதி வழங்குவார் என்றார்.

மேலும் பிரபு அவர்கள் எழுதிய கதை மற்றும் பாடல்கள் எனது மாமனாரால் தெலுங்கில் படமெடுக்க ஒப்புதல் அளிக்கப்பட்டடுள்ளது. அதற்கான அச்சாரம் எனது மாமனார் வழங்குவார் என்றதும் அங்கு ஏற்பட்ட பாராட்டுக்களை விடவும் பிரபு எதிர்பாராமல் கிடைத்த இந்த இன்ப அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்குள், பிரபுவை மேடைக்கு அழைத்தனர்.

பிரபுவின் மனைவி சீக்கிரம் மேடைக்குச் செல்லுங்கள் என்றதும் சுய நினைவு வந்தவனாய் மேடை நோக்கி நடந்தான் பிரபு.





ஊர் : சிவபுரம் மாவட்டம் தஞ்சாவூர்

**ஸ்தல எண்: 130, கோயில் : சிவகுருநாதர் கோயில்**

காவிரித் தென்கரையில் ஒரு கோயில்!
இது தேவாரப் பாடல் பெற்ற திருக்கோயில்!!
சிவகுருநாதர் சுவாமி உள்ள கவின்கோயில்! அது
சிவபுரம் அருள்மிகு சிவன்கோயில்!!

மூலவர் திருநாமம் சிவகுருநாதர்! இங்கு
அன்னையின் நாமம் ஆர்யாம்பாள்!!
தீர்த்தம் இங்கே சுந்தரதீர்த்தம்! இந்தத்
தலமே அருள்மிகு குபேரபுரம்!!
அழகான நடராஜர் திருவுருவம்! இந்த
அற்புதத் தலம் தானே சிவபுரம்!!

இத்தலமெல்லாம் சிவலிங்கம் – அதனால்
கால் வைக்க மாட்டேன் என்றார் சம்பந்தர்!!
அதனால் அவர் அங்கப்பிரதட்சணம் செய்து
சிவனையும் குபேரனையும் வழிபட்டார்!!

ராவணனுக்குப் பரிந்துபேசி பதவி இழந்தான் குபேரன்!
தன் பதவியிழந்த குபேரன் இத்தலம் வந்தான்!!
சிவனையே குருவாகக் கொண்டு வழிபட்டான்!
சிவன் –சிவகுருநாதனாகி விமோசனம் தந்தான்!
திருமால் வெண்பன்றியாய் பூஜித்த தலமே!
இந்த சிவகுருநாதர் கோயில் திருத்தலம் !!

சித்திரையில் லிங்கம் மீது சூரிய ஒளி படும்!!
புத்திர பாக்கியம் தரும் புனிதத் தலம்!
பூகயிலாயம் என்பதும் இத்தலமே! இங்கு
பூஜை செய்து வழிபட்டால் யாவும் நலமே!!

கவிஞர் எஸ்.ராமகிருஷ்ணன்
சிறுமுகை

## நல வாழ்வுச் சிந்தனைகள் – கண்பார்வைத் திறனை தெளிவாக்கும் பூண்டு

கண்கள் நமது முகத்தில் இருக்கும் முக்கியமான உறுப்பு கண்கள் ஆகும். இந்த கண்கள் பாதிக்கப்படாமல் பார்த்துகொள்வது மிகவும் அவசியமாகும். பூண்டு அதிகம் சாப்பிடுபவர்களுக்கு கண்களில் ஏற்படும் கண் அழுத்த பிரச்சனை நீங்கி, கண்பார்வைத் திறனை தெளிவாக்குகிறது.

கண்களில் கருவிழியின் ஆற்றலை பூண்டில் இருக்கும் ரசாயனங்கள் மேம்படுத்துகிறது.

வாய், பற்கள் நலம் பூண்டு கிருமிநாசினி வேதிப்பொருட்களை தன்னகத்தே அதிகம் கொண்டது. தினமும் பூண்டு சாப்பிடுபவர்களுக்கு வாய் துர்நாற்றம், பற்களில் சொத்தை ஏற்படுவது போன்ற பிரச்சனைகள் ஏதும் ஏற்படாது. ஒவ்வொருநாளும் பூண்டை நன்கு மென்று சாப்பிட பல்வலி, ஈறுகள் வீக்கம் போன்றவை நீங்கும்.

## அறிவியல் அறிவோம்! – புதுமையான கண்டுபிடிப்பு ஆய்வுகளில் வேலூர் விஐடி 3–ம் இடம் பிடித்து சாதனை

புதுமையான கண்டுபிடிப்பு சாதனைகள் குறித்த ஆய்வுகளில் விஐடி வேந்தர் விவநாதனின் வேலூர் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி (விஐடி) மூன்றாம் இடத்தை பிடித்துள்ளது.

நாடு முழுவதும் உள்ள கல்வி நிறுவனங்களில் மத்திய அரசின் நிதி உதவி பெறும் கல்வி நிறுவனங்கள், மாநில அரசு நிதி உதவி பெறும் கல்வி நிறுவனங்கள், மாநில அரசு நிதி அளிக்கும் தன்னாட்சி கல்லூரிகள், தனியார் பல்கலைக்கழகங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட 6 பிரிவுகளின் கீழ் புதுமையான கண்டுபிடிப்பு சாதனைகள் குறித்த ஆய்வுகளின் படி, கல்வி நிறுவனங்களின் தரவரிசை பட்டியல் (ஏஆர்ஐஐஏ) வெளியிடப்பட்டு வருகிறது.

மாநில அரசின் நிதி பெறும் தன்னாட்சி கல்வி நிறுவனங்கள் பட்டியலில் புனேவின் காலேஜ் ஆப் இன்ஜினீயரிங் முதலிடத்தையும் கர்நாடகா பிஇஎஸ் பொறியியல் கல்லூரி 2 ம் இடத்தையும் கோவை இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி 3 ம் இடத்தையும் பெற்றுள்ளன. தனியார் பல்கலைக்கழகங்கள் பட்டியலில் வேலூர் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி (விஐடி) மூன்றாம் இடத்தை பிடித்துள்ளது

# கொளத்தூர் தொகுதியில் பொதுநலச் சங்கங்களுடன் ஸ்டாலின் சந்திப்பு

## கோரிக்கைகளை கேட்டு உடனடியாக நடவடிக்கை எடுப்பேன் என உறுதி



**சென்னை, ஜூன் 27–**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நேற்று (26–ந் தேதி) கொளத்தூர், டெம்பிள் ஸ்கூலில் நடைபெற்ற பொதுநலச் சங்கங்களின் நிர்வாகிகளுடனான ஆலோசனைக்கூட்டம் நடத்தினார்.**

அவர்களிடம் கோரிக்கைகளை கேட்டு, உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி கூறினார்.

இந்த கூட்டத்தில் அவர் பேசியதாவது:–

இன்றோடு நாங்கள் பொறுப்பேற்று 50 நாட்கள் ஆகின்றது. இந்த 50 நாட்களும் நாங்கள் ஆற்றிய பணிகள், செய்து கொண்டு இருக்கின்ற காரியங்கள் என்ன என்பது உங்களுக்கு நன்றாக தெரியும்.

பொறுப்பேற்ற நேரத்திலே கொரோனா என்ற கொடிய தொற்றுநோய், ஏறக்குறைய 50 ஆயிரத்தை தொடக்கூடிய நிலையில் போய் கொண்டிருந்தது. ஆகவே, பொறுப்பேற்ற உடனேயே அதை கட்டுப்படுத்துகின்ற முயற்சியில் தான் நாங்கள் அத்தனைபேரும் முழுமையாக ஈடுபட்டோம். அது உங்களுக்கு தெரியும். நான் வேடிக்கையாக அல்ல, உண்மையாக சொல்ல விரும்புவது, இன்றைக்கு நான் முதலமைச்சராக இருக்கிறேன், சேகர்பாபு அறநிலையத் துறை அமைச்சராக இருக்கின்றார்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் அமைச்சர்களாக இருக்கிறார்கள். பொறுப்பேற்றதும் அந்த துறையை நாங்கள் கவனிக்கவில்லை, எல்லோரும் சேர்ந்து மருத்துவத்துறையை தான் கவனித்தோம். பலபேரிடம் நான் சொன்னது உண்டு. நான் உட்பட எல்லோரும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் வேலையைத் தான் பார்த்துக் கொண்டு இருக்கிறோம். இன்னும் அது முடிந்தபாடு இல்லை. ஓரளவுக்கு கட்டுப்படுத்தி இருக்கிறோம்.

### இரவு பகல் பாராமல்....

சென்னையை பொறுத்தவரைக்கும், நம்முடைய மாநகராட்சி ஆணையர் பொறுப்பேற்று மற்றும் நம்முடைய அரசு துறை அதிகாரிகள் எல்லாம் பொறுப்பேற்றுக் கொண்டு, இரவுபகல் பாராமல் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், எல்லோரும் ஒன்று சேர்ந்து, கட்சியை பார்ப்பது இல்லை, அரசியல் பார்ப்பது இல்லை, என்னுடன் பேசுகிற ஒரு சகோதரர் சொன்னார். வாக்களித்தவர்கள் இவர்களுக்கு ஓட்டு போட்டோமே என்று மகிழ்ச்சி அடைய வேண்டும். அதேபோல வாக்களிக்க தவறியவர்கள் அய்யோ இவர்களுக்கு வாக்களிக்காமல் விட்டுவிட்டோமே என்று கவலைப்பட வேண்டும்.

அப்படி நம்முடைய பணி இருக்கும் என்று உறுதிமொழி சொல்லி அந்த பதவியை நாங்கள் ஏற்றுக் கொண்டோம். இன்னும் சொல்ல வேண்டும் என்றால் அந்த பதவி என்று சொல்ல மாட்டேன், பொறுப்பு, இதுதான் கலைஞர் எங்களுக்கு சொல்லிக் கொடுத்திருக்கிறார். நான் மேயராக இருந்த போதும் அதைத்தான் சொன்னேன், துணை முதலமைச்சராக இருந்த போதும் அதைத்தான் சொன்னேன், எதிர்கட்சி தலைவராக இருந்த போதும் அதைத்தான் சொன்னேன், உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த போதும் அதைத்தான் சொன்னேன், இப்போதும் அதைத்தான் சொல்கிறேன், இது பதவி அல்ல; பொறுப்பு. மக்கள் தந்திருக்கக்கூடிய பொறுப்பு. ஆக அந்த பொறுப்பை உணர்ந்து, நாங்கள் எங்களுடைய கடமையை, உங்கள் ஒத்துழைப்போடு, ஆதரவோடு ஆற்றிக் கொண்டு இருக்கிறோம். அப்படி பட்ட நிலையில் தான் நாங்கள் உங்களை சந்திக்க வந்திருக்கிறோம்.

### வாரம் ஒருமுறை

சட்டமன்ற உறுப்பினராக இருந்த போதும் 10 நாட்களுக்கு ஒருமுறை தான் வந்தேன். இப்போது முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு வாரத்திற்கு ஒருமுறை வருகிறேன். என்னதான் அமைச்சராக இருந்தாலும், கட்சியை பொறுத்தவரை சேகர்பாபு மாவட்ட செயலாளர். அவரை சந்திக்கும் போது எல்லாம் கேட்பேன், நீங்கள் அடிக்கடி தொகுதிக்கு செல்கிறீர்கள், நான் இன்னும் போகாமல் இருக்கிறேனே, எப்போது போகலாம் என்று கேட்பேன்.

நீங்கள் என்றைக்கு சொல்கிறீர்களோ அன்றைக்கு போகலாம் என்று அவர் சொல்வார். அவரும் என்னை கூப்பிட மாட்டார் வாங்கள் என்று, எனக்கு இருக்கக்கூடிய பளு, எனக்கு இருக்கக்கூடிய பணிகள், அது அவருக்கு தெரியும். அதேபோல நானும் அவரிடத்தில் சென்று என்ன இன்னும் என்னை கூப்பிடவில்லை என்று சொல்லமாட்டேன், போகலாம் என்பேன் சரி என்பார். அடுத்த நாளே கிளம்பிவிடுவோம். இந்த 50 நாளில் வாரத்திற்கு ஒருமுறை தொகுதிக்கு வந்து என்னுடைய கடமையை நான் நிறைவேற்றி கொண்டு வருகிறேன். இப்போது மட்டுமல்ல, எதிர்கட்சியாக இருந்த போதும் அப்படித் தான். எதிர்கட்சியாக இருந்த போது, எதிர்கட்சி தலைவர் என்ற பொறுப்பை பயன்படுத்தி நம்முடைய நிர்வாகிகள், இங்கே இருக்கக்கூடிய நாகராஜன், முரளி, வழக்கறிஞர் கிரிராஜன் மற்றும் நிர்வாகிகள் எல்லாம் ஒற்றுமையாக இருந்து, தொடர்ந்து பணியாற்றினார்கள்.

### கோரிக்கைகள் மீது உடனடி நடவடிக்கை

மூன்றாவது முறையாக இந்த தொகுதியில் நான் வெற்றி பெறுகிறேன் என்றால் அதுதான் அதற்கு காரணம். ஆகவே, பல பணிகளை நீங்கள் செய்து கொடுத்திருக்கிறீர்கள், இன்னும் பணிகள் இருக்கத்தான் செய்யும். அது இல்லாமல் இருக்காது. கோரிக்கைகள் வரத்தான் செய்யும். அக்கோரிக்கைகளை பரிசீலித்து உரிய முறையில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உறுதியை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

குறிப்பாக, 200 அடி சாலையில் நெடுஞ்சாலைத் துறையால் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் கால்வாய் செந்தில் நகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் தேங்கக்கூடிய மழைநீர் மேற்படி கால்வாய் மூலமாக வெளியேற்றுவதில் சிரமம் இருக்கின்ற காரணத்தினாலே, இந்தப் பகுதிக்கென தனியாக மழைநீர் வடிகால் கால்வாய் அமைக்கும் பணிக்கு திட்டமதிப்பீடு தயாரிக்கப்பட்டு இருக்கிறது. விரைவில் அந்தப் பணி துவங்கப்படும். இப்பகுதியில் உள்ள குளங்களில் கழிவுநீர் தேங்குவது குறித்து பரிசீலித்து அதை உடனடியாக தீர்க்கும் நடவடிக்கையை, அதை அப்புறப்படுத்தும் முயற்சியிலும் அரசு ஈடுபடும். இப்பகுதியில் சென்னை மாநகராட்சியின் சார்பில் 30–க்கும் மேற்பட்ட பூங்காக்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

### அதிகமான பூங்காக்கள்

இந்தப் பூங்காக்கள் என்று சொல்கின்றபோது, எனக்கு ஒரு பெருமை, கொளத்தூரில் தான் அதிகமான பூங்காக்கள் இருக்கிறது. பூங்காக்கள் மட்டுமல்ல நூல் நிலையங்களும் இங்கே தான் அதிகமாக இருக்கிறது. மாநகராட்சி பள்ளிக்கூடங்களும் இங்கேதான் அதிகமாக இருக்கிறது. ஆக எல்லாமே நம் தொகுதியில் தான் அதிகம். மயானம் கூட நம் தொகுதியில் தான் அதிகம்.

எதற்காக சொல்கிறேன் என்றால், அவை எல்லாம் முறையாக பராமரிக்கப்படுகிறது. பல குளங்கள் கடந்த காலங்களில் எப்படி எல்லாம் ஆக்கிரமிக்கப்பட்டு இருந்தது, குப்பையாக இருந்தது, அந்த குளங்கள் எல்லாம் கூட தூர் வாரப்பட்டு அது மக்கள் பயன்படுத்தும் வகையிலே, காலை மற்றும் மாலை நேரங்களில் நடைபயிற்சி செய்யக்கூடிய வகையிலே, குழந்தைகள், சுற்றுவட்டாரத்தில் இருக்கக்கூடிய மக்கள் பாராட்டக்கூடிய வகையில் இருக்கிறது. நம்மை பார்த்து பல சட்டமன்ற உறுப்பினர்கள் பொறாமைப்படக்கூடிய அளவிற்கு நாம் தொகுதியை உருவாக்கி இருக்கிறோம்.

ஆனால் இது போதாது. இன்னும் வேண்டும். இப்போது அதிகாரம் நம் கையில் இருப்பதால், அதிகாரிகளை பயன்படுத்தி நிச்சயமாக எல்லா பணிகளையும் நிறைவேற்று கின்ற முயற்சிகளில் நிச்சயமாக ஈடுபடுவோம். அதுபோல எல்.டி.எச்.டி. (LTHT) பணிகள் நடைபெற்று கொண்டு இருக்கிறது என்பது உங்களுக்கு தெரியும். தமிழ்நாட்டிலேயே முதல்முதலில் நம் தொகுதியில் தான் நிலத்தடியில் பைப் புதைக்கும் நிலையை நாம் உருவாக்கி இருக்கிறோம். அது இன்னும் நிறைவடையாமல் இருக்கிறது. அதில் பல்வேறு பிரச்சனைகள் இருக்கின்றன, அதை எல்லாம் சரி செய்து, உடனடியாக அதுவும் நிறைவேற்றப்படும் என்று நான் உறுதி தருகிறேன்.

பம்பிங் ஸ்டேஷன் டெண்டர் கோரப்பட்டு இருக்கிறது. மின்சார துணை மின்நிலையம் குளோபல் டெண்டர் கோரப்பட்டு இருக்கிறது, விரைந்து அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்து, ஏற்கனவே நீங்கள் சில மனுக்களை கொடுத்திருக்கிறீர்கள், அதையும் படித்துப் பார்த்து, பரிசீலித்து, உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நம்பிக்கையை சொல்லி, இதை நான் உறுதிமொழி சொல்லித் தான் நம்ப வேண்டும் என்ற அவசியம் இல்லை, அந்த நிலையில் தான் நீங்கள் இருக்கிறீர்கள். இருந்தாலும் நான் உங்களுக்கு அந்த உறுதிமொழியை மட்டும் எடுத்துச் சொல்லி நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு ஸ்டாலின் கூறினார்.

# காஞ்சிபுரம், திருவள்ளூர் உள்ளிட்ட 6 மாவட்டங்களில் கன மழை பெய்யும்

**சென்னை, ஜூன் 27–**

**காஞ்சிபுரம், திருவள்ளூர் உள்ளிட்ட 6 மாவட்டங்களில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

இது குறித்து வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

தமிழ்நாட்டில் வெப்பசலனம் மற்றும் காற்றின் திசை வேக மாறுபாடு காரணமாக இன்று திருவள்ளூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, செங்கல்பட்டு, விழுப்புரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடிமின்னலுடன் கூடிய கன மழையும், கடலோர மாவட்டங்கள், புதுவை, காரைக்கால் பகுதிகள் மற்றும் உள் மாவட்டங்களில் ஒருசில இடங்களில் இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழையும் பெய்யக்கூடும்.

நாளை (28–ந்தேதி) கடலோர மாவட்டங்கள் மற்றும் சென்னை, புதுவை, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

29 மற்றும் 30–ந்தேதிகளில் மேற்கு தொடர்ச்சி மலையை ஓட்டிய நீலகிரி, கோவை, தேனி, திண்டுக்கல், தென்காசி மாவட்டங்கள் மற்றும் அதனை ஓட்டிய உள் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

ஜூலை 1–ந்தேதி அன்று நீலகிரி, தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும், ஏனைய மேற்கு தொடர்ச்சி மலையை ஓட்டிய கோவை, தென்காசி மாவட்டங்கள் மற்றும் அதனை ஓட்டிய உள் மாவட்டங்களில் ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும் பெய்யக்கூடும்.


சென்னையை பொறுத்தவரை அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் சில இடங்களில் இடிமின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும். கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக நடுவட்டம், ஏற்காடு, மேலாளத்தூர், ஜெயம்கொண்டாம், கெங்கவல்லி ஆகிய இடங்களில் தலா 2 செ.மீ.மழையும், ஓசூர், திருப்பூண்டி, சின்னக்கல்லார், போளூர், வேப்பந்தட்டை, திருப்பத்தூர் ஆகிய இடங்களில் தலா 1 செ.மீ. மழையும் பதிவாகி உள்ளது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில், தலைமைச் செயலகத்தில், தொழில்துறை செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர், நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர், தொழில் துறை முதன்மைச் செயலாளர், தகவல் தொழில்நுட்பவியல் துறை முதன்மைச் செயலாளர், தொழில்துறை சிறப்புச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கிராமங்களில் தெருவிளக்குகள், அடிப்படை வசதிகளை சிறப்பாக செயல்படுத்துங்கள்

## அதிகாரிகளுக்கு அமைச்சர் பெரியகருப்பன் அறிவுறுத்தல்



**சென்னை, ஜூன் 27–**

**ஊரகப் பகுதிகளில் குடிநீர், தெருவிளக்குகள், சுகாதாரம் மற்றும் அடிப்படை வசதிகளை சிறப்பாக செயல்படுத்த ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் பெரியகருப்பன் ஆய்வின்போது அறிவுறுத்தினார்.**

ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் பெரியகருப்பன் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களின் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் ஊராட்சிகள் மேம்பாடு சார்ந்த பணிகளின் முன்னேற்றம் குறித்து காணொலி வாயிலாக கூடுதல் ஆட்சியர்கள் (வளர்ச்சி)/ திட்ட இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள்(ஊராட்சி) மற்றும் அனைத்து அலுவலர்களிடமும் சென்னை சைதாப்பேட்டை பனகல் மாளிகையில் அமைந்துள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலகத்தில்ஆய்வு செய்தார்.

ஊரகப்பகுதிகளில் வசிக்கும் மக்களுக்குத் தேவையான குடிநீர், தெருவிளக்குகள், சுகாதாரம், துப்புரவு பணிகள் போன்ற அடிப்படைப் பணிகளில் கூடுதல் கவனம் செலுத்தி, அப்பணிகளை 100 சதவீதம் சிறப்புடன் மேற்கொள்ள வேண்டும் என்று ஆய்வின்போது அலுவலர்களுக்கு அமைச்சர் அறிவுரைகள் வழங்கினார்.

கடந்தாண்டுகளில் எடுக்கப்பட்டு இன்னும் முடிக்கப்படாமல் நிலுவையில் உள்ள தொகுப்பு வீடுகள், சாலைப் பணிகள், குடிநீர் இணைப்புப் பணிகள், கழிப்பறை கட்டும் பணிகள் உள்ளிட்ட பல்வேறு பணிகளை ஆய்வு செய்த அமைச்சர் இப்பணிகளை விரைவுபடுத்தி முடிக்கவேண்டும் என அறிவுரைகள் வழங்கினார். குறிப்பாக, பிரதம மந்திரி வீடுகள் கட்டும் திட்டத்தில் 2016–17–ம் ஆண்டு முதல் 2019–20–ம் ஆண்டு வரை மொத்தம் 2,15,752 வீடுகள் இன்னும் நிலுவையில் உள்ளதை ஆய்வு செய்த அமைச்சர் அதை விரைவாக முடிக்க வேண்டும் என்று அறிவுரைகள் வழங்கினார்.

### வேலை உறுதி திட்டத்தில் 13 லட்சம் பேர்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் இன்றைய நிலவரப்படி 13 லட்சம் தொழிலாளர்கள் பணியில் ஈடுபடுத்த பட்டுள்ளனர். இது ஒரு குறிப்பிடத் தகுந்த சாதனையாகும். ஏனெனில், கோவிட்19 பெருந்தொற்று காரணமாக கடந்த மே மாதம் இறுதியில் 3.25 லட்சம் தொழிலாளர்களே இப்பணியில் ஈடுபட்டிருந்தனர். தற்போது தமிழக அரசின் தீவிர முயற்சியின் காரணமாக கொரோனா தொற்று பெருமளவில் குறைந்து, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் ஊரகப் பகுதிகளில் பணிசெய்யும் தொழிலா ளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதைப் பாராட்டிய அமைச்சர், இது மேலும் உயர வேண்டும் என்று அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார்.

அதுபோலவே, ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் 2020–21–ம் ஆண்டில் எடுக்கப்பட்ட குடிநீர் பணிகள் விரைவுபடுத்தப்பட்டு மக்களுக்கு குடிநீர் வழங்கவும் அறிவுரைகள் வழங்கினார். சாலைப் பணிகளில் பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டத்தில் 2016–17–ம் ஆண்டிலிருந்து 2020–21 ஆண்டு வரை எடுக்கப்பட்டு இன்னும் நிலுவையில் உள்ள சாலைப் பணிகளைக் குறிப்பிட்ட அமைச்சர், அப்பணிகளை முடித்து விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டுவர செயல்திட்டம் தீட்டவும் அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார்.

அதுபோல நபார்டு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி மற்றும் தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிலுவையிலுள்ள பணிகளையும், தூய்மை பாரத இயக்கத்தின்கீழ் நிலுவையிலுள்ள தனிநபர் கழிப்பறைகள் கட்டுதல், சமுதாய சுகாதார வளாகங்கள், நுண்உர உற்பத்தி மையங்கள் ஆகிய பணிகளையும் விரைந்து முடிக்க அறிவுரைகள் வழங்கினார்.

முதலமைச்சரின் ஆணைப்படி, பிற துறைகள் ஒருங்கிணைப்பு மூலமாக ஊரகப் பகுதிகளின் முழுமையான வளர்ச்சிக்கு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் வழி காணவேண்டும் என அமைச்சர் தெரிவித்தார். ஊரக வளர்ச்சித் துறையில் உள்ள பணிகளுடன் விவசாயம், கால்நடை, தோட்டக்கலை, பொதுப்பணித்துறை, சமூகநலம், ஆவின் போன்ற பிற துறைப் பணிகளையும் ஒருங்கிணைத்து செய்யும்போது கிராமங்கள் விரைவான வளர்ச்சியும், தன்னிறைவும் பெறும் என அமைச்சர் அனைத்து அலுவலர்களுக்கும் அறிவுரைகள் வழங்கினார்.

அமைச்சரின் இக்காணொலி ஆய்வுக் கூட்டத்தில் அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் மு.கோபால், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பிரவீன் நாயர் மற்றும் அரசு உயரதிகாரிகள் பங்கேற்றனர்.

# மதுரையில் ரூ.70 கோடியில் கலைஞர் நினைவு நூலகம்: 7 மாடி கட்டிடம் கட்ட இடம் தேர்வு

## 4 அமைச்சர்கள் பார்வையிட்டனர்



**சென்னை, ஜூன் 27–**

**மதுரையில் கலைஞர் நினைவு நூலகம் அமைப்பதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள 6 இடங்களை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மற்றும் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் பார்வையிட்டனர்.**

முதலமைச்சர் ஸ்டாலின், கலைஞரின் பிறந்த நாளன்று அண்ணா நுலகம் சென்னையில் அமைக்கப்பட்டுள்ளதைப் போன்று தமிழ் வளர்த்த மதுரை மாநகரில் கலைஞர் நினைவு நூலகம் அமைக்கப்படும் என்று அறிவித்தார். நூலகம் அமைப்பதற்கு உத்தேசமாக தெரிவு செய்யப்பட்டுள்ள மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் அருகில், உலகத் தமிழ்ச் சங்க வளாகம், சட்டக்கல்லூரி மாணவியர் விடுதி வளாகம், புட்டுத்தோப்பு சாலை பகுதி, எல்லீஸ் நகர் மீனாட்சி அம்மன் கோவில் தேவஸ்தான இடம், மற்றும் எல்லீஸ் நகர் வீட்டுவசதி வாரிய வளாகம் என ஆறு இடங்களை இன்று பார்வையிட்டனர்.

குறிப்பாக கலைஞர் நூலகம் 2 லட்சம் சதுரடி பரப்பளவில் 24 பகுதிகளாக பிரிக்கப்பட்டு, முழு குளிர்சாதன வசதியுடன் ஒரே நேரத்திலே 600 வாசகர்கள் அமர்ந்து படிக்கின்ற வகையில் மிக பிரமாண்டமாக அமையவுள்ளது. முதலமைச்சரிடம் பார்வையிட்ட ஆறு இடங்களின் நிலை குறித்து தெரிவித்து அவர் தேர்ந்தெடுக்கும் இடத்தில் ஓர் ஆண்டுக்குள் 7 தளங்களை கொண்ட கட்டிடமாக கலைஞர் நூலகம் சிறப்பாக அமையவிருக்கிறது.

முன்னதாக பூங்கா முருகன் கோவிலில் அர்ச்சகர்களுக்கு ரூ.4000 மற்றும் மளிகைப் பொருட்களின் தொகுப்பு அடங்கிய நிவாரண உதவிகளை அமைச்சர்கள் வழங்கினார்கள்.

அதனை தொடர்ந்து சிம்மக்கல் பகுதியில் உள்ள கருணாநிதியின் திருவுருவச் சிலைக்கு அமைச்சர்கள் மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

இந் நிகழ்ச்சியில் பொதுப்பணித்துறை அரசு கூடுதல் தலைமைச்செயலாளர் சந்தீப் சக்சேனா, மாவட்ட கலெக்டர் அனீஷ் சேகர், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி (மதுரை வடக்கு), ஆ.வெங்கடேசன் (சோழவந்தான்), மு.பூமிநாதன் (மதுரை தெற்கு), தமிழரசி ரவிக்குமார் (மானாமதுரை), மாவட்ட வருவாய் அலுவலர் கோ.செந்தில்குமாரி, மாநகராட்சி துணை ஆணையாளர் சங்கீதா உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# ‘நீட்’ தேர்வுக்கு மாணவர்கள் தயாராக வேண்டுமா – வேண்டாமா? தமிழக அரசு தெளிவுபடுத்த வேண்டும்

## எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தல்

**சென்னை, ஜூன்.27**

**நீட் தேர்வுக்கு மாணவர்கள் தயாராக வேண்டுமா? வேண்டாமா? என்பது பற்றி தமிழக அரசு தெளிவுபடுத்த வேண்டும் என்று எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.**

முன்னாள் முதலமைச்சரும், எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

நடந்து முடிந்த சட்டசபை பொதுத்தேர்தலில், தி.மு.க. தனது தேர்தல் பிரச்சாரத்தில் அனைத்து இடங்களிலும் பேசும் போது, தாங்கள் தமிழ்நாட்டில் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் நீட் தேர்வு ரத்து செய்யப்படும் என்று தமிழக மாணவர்களுக்கு வாக்குறுதி அளித்தனர். தமிழகத்தைப் பொறுத்தவரை அரசுப் பள்ளி மாணவர்களின் மருத்துவ கல்விக் கனவை நிறைவேற்ற நீட் தேர்வு வேண்டாம் என்பதுதான் அனைவரது நிலைப்பாடு.

நீட் விலக்குக்காக அண்ணா தி.மு.க. அரசு சுப்ரீம் கோர்ட் வரை சென்று போராடியது, விலக்கும் பெற்றது. ஆனால், சுப்ரீம் கோர்ட்டில் மறு சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டு, இந்தியா முழுவதும் நீட் தேர்வு நடைபெறும் என்ற ஆணை பிறப்பிக்கப்பட்டது. நீட் தேர்வை அண்ணா தி.மு.க. கடுமையாக எதிர்த்த போதும், நீட் இருக்கும் வரை, தமிழக அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவியரை அத்தேர்வுக்கு தயார்படுத்தும் பணியையும், அதற்கு ஏற்றார் போன்ற பாடத் திட்டங்களை மாற்றி அமைத்ததோடு, மாவட்டந்தோறும் நீட் தேர்வுக்காக அரசு மேல்நிலைப் பள்ளிகளில் சிறப்புப் பயிற்சியும் அளிக்கப்பட்டது.

மேலும், நீட் தேர்வு குறித்த புரிதலுக்காக வல்லுனர்களைக் கொண்டு ஒரு சிறப்பு கையேடும் தயாரிக்கப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. இவ்வித நடவடிக்கைகள் மட்டுமல்லாமல், அரசுப் பள்ளி மாணவர்கள் பெருமளவு மருத்துவக் கல்லூரியில் சேர வேண்டும் என்பதற்காக அண்ணா தி.மு.க. அரசால் 7.5 சதவீத இட ஒதுக்கீடும் கொண்டு வரப்பட்டது. இதனால், சுமார் 435 மாணவ, மாணவியர் மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் படிப்பில் சேர்ந்து படித்து வருகின்றனர். இவர்களது 5 ஆண்டுக்கான மருத்துவக் கல்விச் செலவினை அண்ணா தி.மு.க. அரசே ஏற்றுக்கொண்டது.

### உண்டா, இல்லையா?

நடந்து முடிந்த சட்டசபை கூட்டத்தில் நான் பேசும்பொழுது, ஆட்சிக்கு வந்தவுடன் நீட் தேர்வை ரத்து செய்வேன் என்று மாணவர்களுக்கு வாக்குறுதி அளித்தீர்களே, என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்று கேட்டதற்கு, ஒய்வு பெற்ற நீதிபதி ஏ.கே.ராஜன் தலைமையில், நீட் தேர்வின் பின் விளைவுகளை அறிவதற்கு கமிஷன் அமைக்கப்பட்டுள்ளது என்றும், கமிஷனின் பரிந்துரைகளின் மீது மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் முதலமைச்சர் ஸ்டாலின் பதில் அளித்தார்.

அதைத்தொடர்ந்து, நான் சட்டசபையில் நேரடியாக, இந்த ஆண்டு நீட் தேர்வு உண்டா? இல்லையா? என்ற கேள்வியை எழுப்பினேன். நீட் இருப்பின் மாணவர்கள் இதற்கு தயார் ஆக வேண்டுமா? வேண்டாமா? என்றும் கேட்டபொழுது, முதலமைச்சர் இதற்கு நேரடியாக பதில் அளிக்கவில்லை.

தற்போதைய அரசின் இந்த முடிவால், நடப்பு ஆண்டு நீட் தேர்வு தமிழகத்தில் நடைபெறுமா? நடைபெறாதா? என்ற குழப்பம் மாணவர்கள் மத்தியிலும், பெற்றோர் மத்தியிலும் எழுந்துள்ளது. நீட் தேர்வுக்கு மாணவர்கள் தயாராக வேண்டுமா? வேண்டாமா? என்று புரியாமல் தவித்து வருகிறார்கள்.

சுப்ரீம் கோர்ட்டின் வழிகாட்டுதலின்படி இந்த ஆண்டு மத்திய அரசு நீட் தேர்வை நாடு முழுவதும் நடத்தியே தீரும் என்று அகில இந்திய மருத்துவக் கல்விக் கழகம் அறிவித்துள்ளது.

தமிழக மாணவர்களுக்கு நீட் தேர்வில் இருந்து விலக்கு பெற்றே தீருவோம் என்று வாக்குறுதி தந்த இந்த அரசு நியமித்துள்ள ஏ.கே. ராஜன் தலைமையிலான கமிஷன் பரிந்துரைகள் வருவதற்கு முன்பு, தமிழக மாணவர்கள் நீட் தேர்வில் பங்கேற்பதா? வேண்டாமா? என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

## கொரோனா நோயால் கணவர், மாமியார் மரணம்

# 2 குழந்தைகளுடன் தவித்த பெண்ணுக்கு நிவாரண நிதி: வேலூர் மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.கே. அப்பு வழங்கினார்



**வேலூர், ஜூன் 27–**

**கொரோனா நோயால் மாற்றுத்திறனாளி கணவர் மற்றும் மாமியார் இறந்தால் வருமானம் இல்லாமல் இரண்டு குழந்தைகளுடன் தவித்த பெண்ணுக்கு வேலூர் மாவட்ட அண்ணா தி.மு.க. செயலாளர் எஸ். ஆர்.கே. அப்பு நிவாரண உதவி வழங்கி, இரண்டு குழந்தைகளின் படிப்பு உதவுவதாக உறுதி அளித்தார்.**

வேலூர் மாநகரில் மாற்றுத்திறனாளியான ஜெயசீலன், வேளாண் விற்பனை குழு அலுவலகம் அருகே காய்கறி கடை வைத்து கொண்டு, தன் அம்மா தாந்தோனி, மனைவி இந்திரா, பத்தாம் வகுப்பு படித்து வரும் ஜனனி, எட்டாம் வகுப்பு படித்து வரும் யஸ்வந்த்துடன் குடும்ப வாழ்க்கை நடத்தி கொண்டிருந்த நிலையில், கடந்த மாதம் ஜெயசீலன் கொரோனா நோய் தொற்றில் சிக்கி அவதிப்பட்டு பின் பலியானர். இந்த நிலையில் அவருக்கு நெகட்டிவ் சான்று அளிக்கப்பட்டன. இதனால் அந்த குடும்பத்தினர் எந்தவித நிவாரண நிதியும் பெற முடியாமல் கஷ்ட்டபட்டு கொண்டு இருந்தனர். அதன்பின் ஜெயசீலன் தயார் தாந்தோனி கொரோனா நோய்யால் இறந்து போனார். அடுத்தடுத்து இரண்டு மரணம் ஏற்பட்டதால் அந்த குடும்பம் நிலை குலைந்து போனது. இதனால் அந்த குடும்பத்தில் உள்ள ஜெயசீலன் மனைவி இந்திரா, மகள் ஜனனி, மகன் யஸ்வந்த், வறுமைக்கு உள்ளானார்கள்.

வேலூர் வேளாண் விற்பனை குழு தலைவரும், அண்ணா தி.மு.க. மாவட்ட கழக செயலாளருமான எஸ்.ஆர்.கே.அப்பு கொரோனா நோய் தடுப்பு பணியில் ஈடுபட்டு வரும் மாநகராட்சி ஊழியர்களுக்கு கடந்த ஒரு மாத காலமாக சுமார் ரூ 10 லட்சம் மதிப்பிலான அரிசி, மற்றும் மளிகை பொருட்களை வழங்கி வரும் நிலையில், ஜெயசீலன் குடும்பத்தினர் நேரில் சென்று உதவி கோரினர். நிலமையை கேட்டு அறிந்த எஸ். ஆர்.கே.அப்பு அந்த குடும்பத்திற்க்கு உடனடியாக ரூபாய் 10 ஆயிரத்தை வழங்கி உதவி செய்தார். மேலும் இரண்டு சிறுவர்களை கல்வியை தொடர செய்ய அறிவுறுத்தி, கல்வி கட்டணத்திற்க்கு உதவி செய்வதாக கூறினார். இந்த நிலையில் அந்த குடும்பத்தினர் உதவிகளை பெற்று கொண்டு எஸ்.ஆர்.கே அப்புவிற்க்கு நன்றி கூறினார். மாவட்ட கழக பொருளாளர் எம்.மூர்த்தி, பகுதி கழக செயலாளர்கள் குப்புசாமி, பேரவை ரவி உட்பட பலர் உடன் இருந்தனர்.

# தமிழகத்தில் வேகம் குறைந்த கொரோனா: நேற்று பாதிப்பு 5,415

**சென்னை, ஜூன்.27**

**தமிழகத்தில் நேற்று ஒரே நாளில் 5,415 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது.**

நேற்றைய கொரோனா பாதிப்பு குறித்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

தமிழகத்தில்நேற்றுபுதிதாக1லட்சத்து 68 ஆயிரத்து 409 பேருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது. இதில் 3,069 ஆண்கள், 2,346 பெண்கள் என மொத்தம் 5 ஆயிரத்து 415 பேருக்கு புதிதாக கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் இதுவரை 3 கோடியே 13 லட்சத்து 55 ஆயிரத்து 230 பேருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. அதில் 14 லட்சத்து 38 ஆயிரத்து 799 ஆண்களும், 10 லட்சத்து 21 ஆயிரத்து 910 பெண்களும், 3ம் பாலினத்தவர் 38 பேரும் உள்பட 24 லட்சத்து 60 ஆயிரத்து 747 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொரோனாவுக்கு அரசு மருத்துவமனையில் 100 பேரும், தனியார் மருத்துவமனையில் 48 பேரும் என 148 பேர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளனர்.

தமிழகத்தில் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுபவர்களில் ஆக்சிஜன் வசதியுடன் கூடிய படுக்கைகளில் 10 ஆயிரத்து 637 பேரும், ஆக்சிஜன் வசதி அல்லாத சாதாரண படுக்கைகளில் 5 ஆயிரத்து 130 பேரும், ஐ.சி.யு படுக்கைகளில் 4 ஆயிரத்து 407 பேரும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அந்தவகையில் நேற்று 38 ஆயிரத்து 251 ஆக்சிஜன் படுக்கைகள், 26 ஆயிரத்து 559 ஆக்சிஜன் வசதி அல்லாத சாதாரண படுக்கைகள், 5 ஆயிரத்து 587 ஐ.சி.யு படுக்கைகள் என மொத்தம் 70 ஆயிரத்து 397 படுக்கைகள் மருத்துவமனைகளில் காலியாக உள்ளது. அதேபோல், கொரோனா பராமரிப்பு மையங்களில் 7 ஆயிரத்து 618 பேர் சிகிச்சையில் உள்ளனர். அங்கு 58 ஆயிரத்து 438 படுக்கைகள் காலியாக இருக்கின்றன.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




# பாரிஸில் இருந்து சென்னைக்கு நேரடி விமான சேவை தொடக்கம்

**சென்னை, ஜூன் 27–**

**பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் இருந்து சென்னைக்கு நேரடி விமான சேவை தொடங்கப்பட்டது.**

'ஏர்பிரான்ஸ்' என்ற விமான நிறுவனத்தின் ஏஎப்108 விமானம் நேற்று பிரான்ஸ் நாட்டின் தலைநகா் பாரிஸில் இருந்து 11.49 (உள்ளூர் நேரப்படி) மணிக்குப் புறப்பட்டு, 9 மணி நேரம் 50 நிமிடங்கள் பயணித்து சென்னை மீனம்பாக்கம் பன்னாட்டு விமான நிலையத்திற்கு நள்ளிரவு 11.55 மணிக்கு வந்தடைந்தது. இதில் 111 பேர் இதில் பயணித்தனர்.

சென்னை விமான நிலைய ட்விட்டர் பக்கத்தில், விமானம் தரையிறங்கிய விடியோவும் வெளியிடப்பட்டுள்ளது. முன்னதாக, பாரிஸில் இருந்து டெல்லி, பெங்களூரு, மும்பைக்கு ஏர் பிரான்ஸ் விமான சேவை இருந்து வரும் நிலையில், சென்னைக்கான நேரடி விமான சேவை நான்காவதாக தொடங்கப்பட்டுள்ளது. வாரத்திற்கு ஒருமுறை இருமார்க்கமாக இயக்க படும் விமானம், ஒவ்வொரு சனிக்கிழமையும் பாரிஸ் சென்னை, ஒவ்வொரு திங்கள்கிழமையும் சென்னை பாரிஸ் இடையே விமான சேவை இருக்கும் என்று தெரிவித்துள்ளது.

அதன்படி, ஜூன் 28 (திங்கள் கிழமை) சென்னையில் இருந்து நள்ளிரவு 1.20க்கு பாரிஸ்க்கு புறப்படும் விமானம், அங்கு 8.15 மணிக்கு (உள்ளூர் நேரப்படி) சென்றடைகிறது. பயணிகளின் கோரிக்கையை ஏற்று பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரிஸில் இருந்து சென்னைக்கு விமான சேவை தொடங்கப்பட்டுள்ளது சுற்றுலாப் பயணிகளிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## மின்மிகை மாநிலம்

## தடையில்லா மின்சாரம் வழங்கினோம்

# அண்ணா தி.மு.க. ஆட்சியில் மின்சாரத்துறையில் எந்த முறைகேடும் நடக்கவில்லை

## முன்னாள் அமைச்சர் பி.தங்கமணி விளக்கம்



**சென்னை, ஜூன்.27**

**அண்ணா தி.மு.க. ஆட்சியில் மின்சாரத்துறையில் எந்த முறைகேடுகளும் நடக்கவில்லை என்று முன்னாள் அமைச்சர் பி.தங்கமணி கூறினார்.**

அண்ணா தி.மு.க. தலைமை கழகத்தில் மின்துறை முன்னாள் அமைச்சர் பி.தங்கமணி, எம்.எல்.ஏ. பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:–

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் செயல்பாடுகள் குறித்து, 2019–ம் ஆண்டுக்கான மத்திய தணிக்கைக் குழுவில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை மிகைப்படுத்தி, ஊடகங்கள் மூலமாக தவறான செய்திகள் பரப்பப்பட்டு வருகின்றன.

மத்திய தணிக்கைத் துறை சமர்ப்பித்துள்ள அறிக்கையில், தமிழ்நாட்டில் உள்ள சட்டமுறைக்கழகம் உட்பட 75 பொதுத்துறை நிறுவனங்களில் மொத்தமாக 20 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பீடு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக மின்சார வாரியத்திற்கு 13 ஆயிரத்து 176 கோடியே 20 லட்சம் ரூபாய் இழப்பீடு என்று சொல்வது, தணிக்கைத் துறையே மின்சார இழப்புக்கு, மின்சாரக் கொள்முதல் உற்பத்தி செலவு, பணியாளர் மற்றும் நிதி செலவினங்களே காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எங்கேயும் தவறு நடைபெற்றதாகச் சொல்லவில்லை.

### இலவச மின்சாரம்

பொதுத்துறை நிறுவனங்களில் மின்சார வாரியமும், போக்குவரத்துத் துறையும் சேவைத்துறைகளாகும். பொதுமக்களுக்கு ஒரு யூனிட் மின்சாரம் எவ்வளவு ரூபாய்க்கு வழங்கப்படுகிறது என்பது தான் முக்கியமே தவிர, மின்சார வாரியத்திற்கு வருமானத்தைக் கூட்டுவது என்பது நோக்கமல்ல. தமிழகத்தில் மட்டும் தான் அனைத்து வீடுகளுக்கும் 100 யூனிட் மின்சாரமும்; அதே போல், அனைத்து விவசாயிகளுக்கும் 24 நேரம் மும்முனை மின்சாரமும் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

மின்சார வாரியத்தின் பணியாளர்களுக்கு உரிய ஊதியத்தை வழங்காமலோ, அனல் மின் நிலையங்களில் மின் உற்பத்திக்குத் தேவையான நிலக்கரியை கொள்முதல் செய்யாமலோ, தமிழகத்தின் மொத்த மின் தேவையை பூர்த்தி செய்யத் தேவையான அளவு மின்சாரத்தை தனியாரிடமிருந்து வாங்காமலோ, மக்களை இருட்டிலிருந்து வெளிச்சத்திற்குக் கொண்டுவர முடியாது.

### தி.மு.க. ஆட்சியில்...

2006–2011 காலகட்டத்தில் இருந்த தி.மு.க. ஆட்சியில், தமிழ்நாடு இருளில் மூழ்கிக் கிடந்தது. தேர்தலில் நாங்கள் தோற்றால் மின்தடையே காரணம் என்று அன்றைய தி.மு.க. மின்துறை அமைச்சர் ஆற்காடு வீராசாமியே தெரிவித்திருந்தார்.

தி.மு.க. ஆட்சியில் அதிக விலை கொடுத்து மின்சாரம், நிலக்கரி போன்றவைகளை வாங்கியதில் பல்லாயிரம் கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்று 2010–ம் ஆண்டு தணிக்கைத் துறை தெரிவித்துள்ளது.

★ தரம் குறைந்த நிலக்கரியை அனல்மின் நிலையங்களில் பயன்படுத்தியதால் தான் 2014, 2019 காலக்கட்டத்தில் 171.57 கோடி ரூபாய் அளவிற்கான மின்உற்பத்தி இழப்பு ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதேபோல, கடந்த கால தி.மு.க. ஆட்சியிலும் அதிக விலை கொடுத்து வாங்கியதாக தணிக்கைத் துறை தெரிவிக்கின்றது.

நிலக்கரி தர பரிசோதனை

★கடந்த10ஆண்டுகளில்அம்மாவின் அரசு, தரம் குறைந்த நிலக்கரியை எங்கிருந்தும் வாங்கியதில்லை. நிலக்கரி எங்கிருந்து வருகிறதோ, அது ஏற்றப்படும் இடத்திலும் தரம் பரிசோதிக்கப்படுகிறது; தமிழகத்தில் இறக்கப்படும் துறைமுகங்களிலும் தரம் பரிசோதிக்கப்படுகிறது. ஆகையால், தரம் குறைந்த நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டது என்ற குற்றச்சாட்டுக்கு எந்தவித ஆதாரமும் இல்லை.

★ வட சென்னை அனல்மின் நிலையத்தில் இருந்து மேட்டூர் வரை ரெயில்கள் மூலம் நிலக்கரியை அனுப்பியதில், 55.37 கோடி ரூபாய் இழப்பீடு ஏற்பட்டுள்ளது என்றும், ரெயில் சரக்கு பெட்டிகளின் கொள்ளளவை விட குறைத்து நிலக்கரியை ஏற்றியதால் பயனற்ற சரக்குக் கட்டணமாக 101.35 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது என்றும் சி.ஏ.ஜி. அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

★ அனல்மின் நிலையங்களுக்கு தேவைப்படும் நிலக்கரி உடனுக்குடன் அனுப்பப்பட வேண்டும். நிலக்கரி கையிருப்பிற்கு ஏற்ப சென்னையில் இருந்து நிலக்கரி அனுப்பப்படுகிறது. மத்திய ரெயில்வே துறை சரக்கு வேகன்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட தொகையை செலுத்தினால் தான் நிலக்கரியை கொண்டுசெல்ல முடியும். வேகனின் கொள்ளளவுக்கு ஏற்ப நிலக்கரி சேர்ந்த பிறகு அனுப்பலாம் என்று இருந்தால், அனல்மின் நிலைய மின் உற்பத்தி பாதிக்கப்பட்டு மின் பற்றாக்குறை ஏற்படும்.

★ மேலும், நிலக்கரியை அனுப்புவதற்கு உண்டான தொகையை தனியாருக்கு மின்சார வாரியம் செலுத்தவில்லை. மத்திய ரெயில்வே துறைக்குத் தான் செலுத்தியுள்ளது. இதை பயனற்ற சரக்குக் கட்டணமாக ஏற்க இயலாது.

### குறைந்த விலை மின்சாரம் கொள்முதல்

★ மின்சாரம் கொள்முதல் செய்ய 8 தனியார் நிறுவனங்களிடம் நீண்ட காலம் ஒப்பந்தம் போட்டதில் 712 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த காலக்கட்டத்தில், மற்ற மாநிலங்களில் 5.50 ரூபாய்க்கு மின்சாரம் வாங்கப்பட்டது. தமிழகத்தில் அதைவிட குறைவாக 4.91 ரூபாய்க்கு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.

★ தனியார் நிறுவனமான ஜி.எம்.ஆர். பவர் கார்ப்பரேஷன் என்ற நிறுவனத்திடம் மின்சாரம் வாங்க போடப்பட்ட ஒப்பந்தம் 1999–ம் ஆண்டு முதல் 2014–ம் ஆண்டு வரையாகும். ஓராண்டு நீட்டித்ததற்குக் காரணம் மின்தேவை அதிகமாக தேவைப்படுகின்றபோது மட்டும் (டீசல் மூலமாக) உற்பத்தி செய்யப்பட்டது. ஜி.எம்.ஆர். தனியார் நிறுவனத்திற்குக் கொடுப்பது நிலையான செலவு மட்டும், 56 பைசா மட்டும் தான் அவர்களுக்கு கொடுக்கப்படும். மத்திய அரசின் ஆயில் நிறுவனங்களுக்கு 11.44 பைசா அவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. இதில் என்ன முறைகேடு நடந்துள்ளது?

★ ஜி.எம்.ஆர். நிறுவனத்திடம் இருந்து மின்சாரம் வாங்கியதில் வாரியத்திற்கு 424.43 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டுக்கும், அம்மாவின் அரசுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

★ 2006–2011 காலக்கட்டத்திலான தி.மு.க. ஆட்சியின் செயல்பாடுகள் குறித்து பல்வேறு மத்திய தணிக்கைக் குழு அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

★ குறிப்பாக, அந்த காலக்கட்டத்தில் மின்சாரத் துறை தி.மு.க. ஆட்சியாளர்களின் தவறான மற்றும் முறைகேடான செயல்பாடுகளால் நேரடியாக மின்சார வாரியத்திற்கு பல்லாயிரம் கோடிகள் இழப்பு ஏற்பட்டுள்ளது.

### தடையில்லா மின்சாரம்

★ தனியாரிடமிருந்து மின்சாரம் வாங்கியதிலும், நிலக்கரி வாங்கியதிலும் 10 ஆயிரத்து 294 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ 2001–2006 காலகட்டத்திலான அம்மாவின் ஆட்சியில், தமிழக மக்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்கியது மட்டுமல்ல, தமிழகத்தின் தேவை போக, உபரியாக இருந்த மின்சாரத்தை வெளி மாநிலங்களுக்கும் வழங்கினோம்.

★ 2006–ல் அண்ணா தி.மு.க. ஆட்சியைவிட்டுச் செல்லும்போது, மின்வாரியத்தின் கடன் தொகை 9 ஆயிரத்து 583 கோடி ரூபாயாகத் தான் இருந்தது. அதற்குப் பின்னால், ஐந்து ஆண்டுகள் கழித்து, அம்மா ஆட்சிக் கட்டிலில் ஏறுகின்றபோது, 10 முதல் 18 மணி நேரம் மின்தடை இருந்த போது, கூடுதலாக 36 ஆயிரம் கோடி ரூபாயை கடனாக விட்டுச் சென்றுள்ளது. இதில் மொத்த கடன் 45 ஆயிரம் கோடி ரூபாய் ஆகும்.

★ இன்றைக்கு, அம்மாவின் ஆட்சிக் காலத்தில் தமிழக மின்துறையில் முறைகேடுகள் நடந்ததாகவோ, மக்கள் மின்வசதி இன்றி தவிப்பதாகவோ எந்தக் குறையும் கூறப்படவில்லை. இருந்தாலும், 13 ஆயிரத்து 176 கோடியே 20 லட்சம் ரூபாய் நஷ்டம் என்று தணிக்கைத் துறை சொல்லி இருக்கிறது.

### யூகத்தின் அடிப்படையில்...

★ அம்மாவின் அரசிற்கு மக்கள் சேவை தான் முக்கியமே தவிர, மின்கட்டணத்தை உயர்த்தி மக்கள் தலையில் பாரத்தை சுமத்த விரும்பாத அரசுகள், அம்மாவின் அரசும், அண்ணன் எடப்பாடியாரின் அரசும். ஆகையால் தணிக்கைத் துறை அறிக்கை என்பது, எந்த ஆட்சி நடந்தாலும் யூகத்தின் அடிப்படையில் இதுபோன்ற கருத்துக்கள் சொல்லப்படுகின்றன.

★ 2010ல் வெளியிடப்பட்ட தணிக்கைத் துறை அறிக்கையில், ஒவ்வொரு யூனிட்டுக்கும் கூடுதலாக 2.17 ரூபாய் செலவு செய்ததாக தணிக்கைத் துறை அறிக்கை கூறுகின்றது.

★ சூரியஒளி மின்சாரம் 7.01 ரூபாய்க்கு வாங்கியதாக குற்றச்சாட்டு கூறியுள்ளார்கள். சில மாநிலங்களில் 15 ரூபாய்க்குக்கூட ஒப்பந்தம் போடப்பட்டது. காரணம், சூரியஒளி மின்சாரம் நிறுவ ஒரு மெகா வாட்டிற்கு 8 முதல் 10 கோடி ரூபாய் வரை செலவானது. ஆனால், இன்றைய காலக்கட்டத்தில் ஒரு மெகாவாட் நிறுவ 3 கோடி ரூபாய் செலவாகிறது. அதனால், இன்றைய தினம் சூரிய ஒளி மின்சாரம் குறைவாக கிடைக்கின்றது. அதுமட்டுமல்லாமல், சூரியஒளி மின்சாரம் நிறுவ தமிழகத்தில் நிலமும் கொடுப்பதில்லை; நிலையான விலையும் கொடுப்பதில்லை. மற்ற மாநிலங்களில் இடமும்; நிலையான விலையும் கொடுக்கின்றார்கள்.

★ பொதுவாக, மத்திய அரசு, மாநில அரசு எதுவாக இருந்தாலும் தணிக்கைத் துறை இதுபோன்ற கருத்துகளைத் தான் தெரிவிக்கும். ஆக, இது முறைகேடு கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இவ்வாறு பி.தங்கமணி, எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.



**திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி அம்பூர்பேட்டை பகுதியை சார்ந்த வெங்கடேசன்பானுமதி ஆகியோர் தம்பதியரின் கண்பார்வையற்ற மகன், எம்.ஏ பட்டதாரி இளைஞரான சீனிவாசனுக்கு அண்ணா தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் கோ. செந்தில்குமார் மற்றும் வாணியம்பாடி நகர செயலாளர் சதாசிவம் ஆகியோர் 2 மாதத்திற்கான மளிகை பொருட்கள் தொகுப்பினை வீட்டிற்கு நேரில் சென்று வழங்கினார். முன்னாள் கவுன்சிலர்கள் குமார், பாரதிதாசன், கோவிந்தசாமி, முன்னாள் ஊராட்சி செயலாளர் செல்வராஜ் மற்றும் மாவட்ட வர்த்தக அணி செயலாளர் ஆர். வி. குமார், நகர பொருளாளர் தன்ராஜ், பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த சிவப்பிரகாசம் உட்பட பலர் உடன் இருந்தனர்.**

# நாளை முதல் 50 சதவிகித பயணிகளுடன் 27 மாவட்டங்களில் 9,333 பேருந்து இயக்கம்

## அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் தகவல்

சென்னை, ஜூன் 27–

**நாளை (28–ந் தேதி) முதல் 50 சதவிகித பயணிகளுடன் 27 மாவட்டங்களில் 9,333 பேருந்து இயக்கப்படும் என்று போக்குவரத்துத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் தெரிவித்தார்.**

இதுகுறித்து அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் கூறியதாவது:–

முதலமைச்சர், கொரோனா நோய்த் தொற்றின்காரணமாக அமுலில் உள்ள, தளர்வுகளுடன் கூடிய ஊரடங்கினை, நாளை (28–ந் தேதி) முதல் 5.7.2021 வரை நீட்டித்து உத்தரவிட்டுள்ளார். இந்த உத்தரவில், வகை 2–ல் குறிப்பிட்டுள்ளவாறு, அரியலூர், கடலூர், தருமபுரி, திண்டுக்கல், கள்ளக்குறிச்சி, கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, மதுரை, பெரம்பலூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம், ராணிப்பேட்டை, சிவகங்கை, தேனி, தென்காசி, திருநெல்வேலி, திருப்பத்தூர், திருவண்ணாமலை, தூத்துக்குடி, திருச்சி, விழுப்புரம், வேலூர் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களுக்குள்ளும், மாவட்டங்களுக்கிடையேயும் பொதுப் பேருந்து போக்குவரத்தினை, நிலையான வழிகாட்டு நடைமுறைகளைப் பின்பற்றி, குளிர் சாதன வசதி இல்லாமல், 50 சதவிகித இருக்கைகளில் மட்டும் பயணிகள் அமர்ந்து பயணிக்க அனுமதி அளித்துள்ளார்.

ஏற்கனவே, முதலமைச்சர், வகை 3–ல் குறிப்பிட்டுள்ளவாறு, சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களுக்கிடையே பொதுப்பேருந்து போக்குவரத்தினை, நிலையான வழிகாட்டு நடைமுறைகளைப் பின்பற்றி, குளிர் சாதன வசதி இல்லாமல், 50 சதவிகித இருக்கைகளில் மட்டும் பயணிகள் அமர்ந்து பயணிக்க அனுமதி அளித்து தற்போது இயக்கப்பட்டு வருகிறது.

### கிருமிநாசினி தெளித்து சுத்தம்

அதனடிப்படையில், ஏற்கனவே அனுமதித்துள்ள 4 மாவட்டங்களுடன், கூடுதலாக 23 மாவட்டங்கள் என ஆகமொத்தம் 27 மாவட்டங்களில், வரும் 28–ந் தேதி காலை 6 மணி முதல், 50 சதவிகித இருக்கைகளுடன், மாவட்டங்களுக்குள்ளும், மாவட்டங்களுக்கு இடையேயும் இயக்கப்படுகின்றன.

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக்கழகங்களில் உள்ள மொத்தம் 19 ஆயிரத்து 290 பேருந்துகளில், மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் 2,200 பேருந்துகளும், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் 365 பேருந்துகளும், விழுப்புரம் அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் 2,210 பேருந்துகளும், சேலம் அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் 513 பேருந்துகளும், கும்பகோணம் அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் 1,592 பேருந்துகளும், மதுரை அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் 1,300 பேருந்துகளும் மற்றும் திருநெல்வேலி அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் 1,153 பேருந்துகள் என மொத்தமாக 9,333 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. பயணிகளின் வருகைக்கு ஏற்ப கூடுதல் பேருந்துகள் இயக்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இயக்கப்படுகின்ற பேருந்துகளை உரிய முறையில் கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்து, அரசு விதித்துள்ள நெறிமுறைகளைப் பின்பற்றி இயக்கிடுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. பொதுமக்கள் அரசு விதித்துள்ள வழிக்காட்டு முறைகளான, கட்டாய முகக்கவசம் அணிந்து, சமூக இடைவெளியினைப் பின்பற்றி பயணித்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் தெரிவித்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், சிஎஸ்ஐ புத்துயிர் சிறப்பு பள்ளி, ஸ்ரீ அருணோதயம், எஸ்ஜபி மெமோரியல் டிரஸ்ட், லிங்கம் சிறப்புப் பள்ளி மற்றும் ஷேப் இந்தியா ஆதரவற்றோர் இல்லம் ஆகிய ஆதரவற்றோர் இல்லங்களுக்கு தலா ரூ. 10 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அமைச்சர் பி.கே. சேகர்பாபு, கலாநிதி வீராசாமி எம்.பி., தாயம் கவி எம்.எல்.ஏ. ஆகியோர் உடனிருந்தனர்.

# கிராமங்களில் அனைவரும் கொரோனா தடுப்பூசி...

(1–ம் பக்கத் தொடர்ச்சி)

கடுமையாக உழைத்தனர். விஞ்ஞானிகள் 24 மணிநேரமும் உழைத்தனர். அவர்கள் மீது நாம் நம்பிக்கை வைக்க வேண்டும். தடுப்பூசியை ஏராளமானவர்கள் செலுத்தி கொண்டு உள்ளனர். அவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என வதந்தி பரப்புவோரிடம் விளக்க வேண்டும். நாடு முழுவதும் 31 கோடிக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டு உள்ளது. 100 வயதாகும் எனது தாயாரும் தடுப்பூசி போட்டு கொண்டார்.

### இந்தியாவிலேயே தடுப்பூசி உற்பத்தி

கடந்த ஆண்டு தடுப்பூசி எப்போது வரும் என்பதே அனைவரின் சந்தேகமாக இருந்தது. தற்போது. லட்சக்கணக்கானோருக்கு இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட தடுப்பூசிகள் இலவசமாக கொடுக்கப்பட்டு உள்ளன. தடுப்பூசி செலுத்திக் கொள்வதால் மட்டுமே கொடிய உயிர்க்கொல்லி நோயில் இருந்து நம்மை நாம் தற்காத்துக் கொள்ள முடியும். தடுப்பூசிக்கு எதிராக சிலர் வதந்திகளைப் பரப்பலாம். அவர்கள் பரப்பட்டும். நாம் நமது வேலையைச் செய்வோம். கொரோனா தொற்றின் பேராபத்து இன்னும் ஓய்ந்துவிடவில்லை. ஆகையால் இப்போது நாம் அனைவரும் தடுப்பூசியில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும். கிராமங்களில் அனைவரும் தடுப்பூசி செலுத்தி கொள்ள வேண்டும் என்பதே நமது இலக்காக இருக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

மத்திய பிரதேச மாநிலம் பீடல் மாவட்டத்தில் உள்ள துலேரியா கிராமத்தை சேர்ந்த ராஜேஷ் கிஷோரிவால் உள்ளிட்ட பலருடன் பிரதமர் மோடி கலந்துரையாடுகையில், தடுப்பூசி போடுவதன் அவசியத்தை விளக்கியதுடன், தடுப்பூசி குறித்த சந்தேகங்களை நீக்கினார்.

அப்போது பிரதமர் கூறுகையில், தடுப்பூசி மீதான பயத்தில் இருந்து மக்கள் வெளியே வர வேண்டும். இந்தியாவில், 100 சதவீதம் பேருக்கு தடுப்பூசி போடப்பட்ட பல கிராமங்கள் உள்ளன. வதந்திகள் தொடர்ந்து பரப்பப்படும். ஆனால், மக்களின் உயிரையும், நாட்டையும் நாம் பாதுகாக்க வேண்டும்.

கொரோனா முடிந்து விட்டது என யாரும் நினைக்க வேண்டாம். வைரஸ் தொடர்ந்து உருமாற்றம் அடையும் வகையிலான நோய் இது.

தடுப்பூசி குறித்து சமூக வலைதளங்களில் ஏராளமான வதந்திகள் பரவுகிறது. அதனை மக்கள் நம்ப வேண்டும். அறிவியல் மற்றும் நமது விஞ்ஞானிகள் மீது நம்பிக்கை வைக்க வேண்டும்.பருவமழை காலம் துவங்க உள்ளது. இதனால், தண்ணீரை சேகரிப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

# தனியார் மருத்துவமனைகளில் பயன்படுத்தாமல் உள்ள தடுப்பூசிகளை தமிழக அரசு பயன்படுத்த வேண்டும்

## ஓ.பன்னீர்செல்வம் வேண்டுகோள்

சென்னை, ஜூன்.27

தனியார் மருத்துவமனைகளில் பயன்படுத்தாமல் உள்ள கொரோனா தடுப்பூசிகளை தமிழக அரசு பயன்படுத்த வேண்டும் என்று ஓ.பன்னீர்செல்வம் கூறியுள்ளார். அண்ணா தி.மு.க. ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் முதலமைச்சருமான ஓ.பன்னீர்செல்வம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தற்போது உலகம் முழுவதும் பரவி உள்ள கொரோனா கொடுந்தொற்று நோயை முற்றிலும் ஒழிக்கும் வகையில் தடுப்பூசி செலுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒருவருக்கு 2 முறை தடுப்பூசி என்பதன் அடிப்படையில், தமிழ்நாட்டில் உள்ள அனைவருக்கும் தடுப்பூசி செலுத்தப்பட வேண்டுமென்றால் குறைந்தபட்சம் 16 கோடி தடுப்பூசி மருந்துகள் தேவைப்படுகின்றன.

26ந்தேதி நிலவரப்படி மொத்தம் 1 கோடியே 44 லட்சத்து 83 ஆயிரத்து 205 தடுப்பூசிகள் தமிழ்நாட்டு மக்களுக்கு செலுத்தப்பட்டு இருக்கின்றன. அதாவது 10 சதவீதத்துக்கும் குறைவாகத்தான் தடுப்பூசி செலுத்தப்பட்டு இருக்கிறது. இந்த சூழ்நிலையில் தனியார் மருத்துவமனைகளுக்கு மே மற்றும் ஜூன் மாதங்களில் வினியோகிக்கப்பட்ட 13.9 லட்சம் மருந்துகளில் 8 லட்சத்துக்கும் மேற்பட்ட மருந்துகள் பயன்படுத்தப்படாமல் உள்ளன என்றும், ஜூலை மாதத்துக்கு 71.5 லட்சம் மருந்துகளை தமிழ்நாட்டுக்கு மத்திய அரசு ஒதுக்கியிருக்கிறது என்றும், இதில் 17.75 லட்சம் மருந்துகள் தனியார் மருத்துவமனைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் புள்ளி விவரங்கள் தெரிவிப்பதாக பத்திரிகைகளில் செய்திகள் வருகின்றன.

ஏற்கனவே 8 லட்சத்துக்கும் மேற்பட்ட தடுப்பூசி மருந்துகள் பயன்படுத்தப்படாமல் இருக்கின்ற சூழ்நிலையில் ஜூலை மாதத்துக்கு என மேலும் 17.75 லட்சம் தடுப்பூசிகள் தனியார் மருத்துவமனைகளுக்கு ஒதுக்கப்பட்டு இருப்பதால் 25 லட்சத்துக்கும் மேற்பட்ட மருந்துகள் தனியார் மருத்துவமனைகள் வசம் உள்ளன.

பொதுமக்கள் அரசு மருத்துவமனைகளை நாடி செல்வதற்கு காரணம் அங்கு இலவசமாக தடுப்பூசி செலுத்தப்படுவதும், இணைய தளத்துக்கு சென்று எந்தவிதமான பதிவும், முன்னேற்பாடும் இல்லாமல் நேரடியாக தடுப்பூசி செலுத்துகின்ற வசதி உள்ளதும் தான். இதுமட்டும் அல்லாமல் பள்ளி–கல்லூரிகள், சமுதாய நலக்கூடங்கள் போன்றவற்றில் இலவச தடுப்பூசி முகாம்களை உள்ளாட்சி அமைப்புகள் ஏற்படுத்தி இருப்பதும் இதற்கு முக்கிய காரணம்.அதே சமயத்தில் தனியார் மருத்துவமனைகளில் ஒரு தடுப்பூசிக்கு ரூ.850 முதல் ரூ.1,500 வரை பணம் செலுத்தக் கூடிய நிலை இருக்கிறது. இதுதவிர முன்பதிவு அவசியம் என்ற நிலைமையும் உள்ளது. பெரும்பாலான இடங்களில் தனியார் மருத்துவமனைகளுக்கு நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருக்கிறது. இந்த காரணங்களால் தனியார் மருத்துவமனைகளில் பயன்படுத்தாத தடுப்பூசி மருந்துகள் லட்சக்கணக்கில் தேங்கி இருக்கின்றன. இந்த சூழ்நிலையில் தனியார் மருத்துவமனைகளில் உள்ள பயன்படுத்தப்படாத மருந்துகளை பயன்படுத்த அரசு நடவடிக்கை எடுப்பது அவசியம் ஆகும். எனவே முதலமைச்சர் இதில் தனிக்கவனம் செலுத்தி, தனியார் மருத்துவமனைகளில் பயன்படுத்தாமல் உள்ள தடுப்பூசி மருந்துகளை தமிழ்நாடு அரசு பயன்படுத்தி கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன்மூலம் தமிழ்நாட்டின் தேவை விரைவில் பூர்த்தி செய்யப்படும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# இந்த ஆண்டு இறுதிக்குள் அனைவருக்கும் கொரோனா தடுப்பூசி செலுத்தப்படும்: சுப்ரீம் கோர்ட்டில் மத்திய அரசு விளக்கம்

புதுடெல்லி, ஜூன் 27

நாட்டில் இந்த ஆண்டு இறுதிக்குள் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கொரோனா தடுப்பூசி செலுத்தப்படும் என சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்த பிரமாண பத்திரத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கொரோனா பேரிடர் காலத்தில் அத்தியாவசிய மருந்து பொருட்கள் வினியோகம், சேவைகள் தொடர்பாக சுப்ரீம் கோர்ட் தாமாக முன்வந்து பதிவு செய்த வழக்கை நீதிபதிகள் டி.ஒய். சந்திரசூட், எல்.நாகேஸ்வரராவ், எஸ். ரவீந்திர பட் ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்து வருகிறது.

இந்த வழக்கில் மத்திய சுகாதார அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் மனோகர் அக்னானி சார்பில் 380 பக்கங்கள் கொண்ட விரிவான பிரமாண பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில், கொரோனா தடுப்பூசிக்கான தேசிய திட்டத்தை மத்திய அரசு மே மாதம் தொடங்கி தொடர்ந்து மீளாய்வு செய்து வருகிறது. கொரோனா தடுப்பூசி திட்டத்துக்கான ஜூன் 21 ந் தேதி அன்றைய திருத்தப்பட்ட வழிகாட்டுதலின்படி, நாட்டில் தயாரிக்கப்படும் தடுப்பூசிகளின் 75 சதவீதத்தை மத்திய அரசு வாங்கி அதை மாநிலங்களுக்கு இலவசமாக வழங்கும்.

நாட்டில் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் சுமார் 94 கோடி பேர் உள்ளனர். அவர்களுக்கு 2 தவணை கொரோனா தடுப்பூசிகளை செலுத்த 186 முதல் 188 கோடி வரையிலான தடுப்பூசிகள் தேவைப்படுகின்றன.

ஆகஸ்ட் முதல் டிசம்பருக்குள் மேலும் 135 கோடி தடுப்பூசிகள் கிடைக்கும். அவற்றைக் கொண்டு இந்த ஆண்டு டிசம்ப ருக்குள், அனைவருக்கும் தடுப்பூசி செலுத்தமுடியும்.



# இணையதளத்தில் மாநகராட்சி, நகராட்சி சொத்துக்கள் விவரம்: அமைச்சர் நேரு துவக்கி வைத்தார்

சென்னை, ஜூன் 27–

**நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு சொந்தமான அசையும் மற்றும் அசையா சொத்துக்களை விடுதலின்றி பட்டியலிட்டு பராமரிக்க மின் ஆளுமையின்கீழ் புதிய இணையவழி தளத்தினை நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கே.என்.நேரு துவக்கி வைத்தார்.**

நகராட்சிகளின் இயக்குநரகம், அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப்பணிகள் தொடர்பாக ஆய்வுக்கூட்டம் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கே.என். நேரு தலைமையில் ரிப்பன் மாளிகை வளாக கூட்டரங்கில் நடைபெற்றது.

முன்னதாக, அமைச்சர் கே.என். நேரு, நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு சொந்தமான அசையும் மற்றும் அசையா சொத்துக்களை விடுதலின்றி பட்டியலிட்டு பராமரிக்க மின் ஆளுமையின்கீழ் புதிய இணையவழி தளத்தினை துவக்கி வைத்தார்.

### 29 சேவைகள்

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் முக்கிய சேவைகளான பிறப்பு, இறப்பு பதிவு மற்றும் சான்றிதழ் வழங்குதல், வரிவசூல், குடிநீர், பாதாள சாக்கடை இணைப்பு, சிறு வணிக உரிமம், கட்டிட வரைபட அனுமதி போன்ற 29 சேவைகள் மின் ஆளுமை மூலம் படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அமைச்சர் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு சொந்தமான அசையும் மற்றும் அசையா சொத்துக்களை உரிய முறையில் பாதுகாக்க உத்தரவிட்டதன் பேரில் 14 மாநகராட்சிகள் மற்றும் 121 நராட்சிகளிலும் உள்ள அனைத்து அசையும் மற்றும் அசையா சொத்துக்களை விடுதலின்றி பட்டியலிட்டு பராமரிக்க மின் ஆளுமையின்கீழ் புதிய இணையவழி தளம் தயார் செய்யப்பட்டுள்ளது.

### திருச்சியில்

முதற்கட்டமாக திருச்சி மாநகராட்சியின் சொத்துக்களை பதிவேற்றம் செய்யும் இணையவழி மென்பொருள் சேவையினை அமைச்சர் கே.என்.நேரு தொடங்கி வைத்துள்ளார். ஒரு மாத காலத்திற்குள் அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் இச்சேவை ஏற்படுத்தப்பட்டு மேலாண்மை செய்யப்படுவதோடு விரைவில் பொதுமக்கள் அனைவரும் அறியும் வண்ணம் இணையதளத்தில் வெளியிடப்பட உள்ளது.

தொடர்ந்து, தமிழகத்தில் உள்ள 14 மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் 121 நகராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்து நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில், சீர்மிகு நகரத் திட்டம், அம்ரூத் திட்டம், தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (TNSUDP), திடக்கழிவு மேலாண்மைப் பணிகள், பாதாள சாக்கடை திட்டம், குடிநீர் திட்டப்பணிகள், சாலைப்பணிகள், மழைநீர் வடிகால் பணிகள், தெருவிளக்கு பணிகள், பாலப் பணிகள் உட்பட பல்வேறு வளர்ச்சிப் பணிகள் குறித்து நகராட்சி நிர்வாக உயர் அலுவலர்கள், மாநகராட்சி ஆணையாளர்கள், நகராட்சி ஆணையாளர்களுடன் அமைச்சர் விரிவாக கேட்டறிந்தார்.

அதனை தொடர்ந்து அனைத்து மாநகராட்சி, நகராட்சிகளிலும் நடைபெற்று வரும் பணிகளை துரிதப்படுத்தவும், துவங்க வேண்டிய பணிகளை விரைவில் துவங்கவும் அலுவலர்களுக்கு அமைச்சர் கே.என். நேரு அறிவுறுத்தினார்.

முன்னதாக அமைச்சர், ஆவடி மாநகராட்சியின் சார்பில் பொது மக்களுக்கு கோவிட் தடுப்பூசி செலுத்த செயல்படுத்தப்படவுள்ள தற்காலிக தடுப்பூசி முகாம்களின் மாதிரி வடிவத்தை பார்வையிட்டு தடுப்பூசி செலுத்தப்படுவதை ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் நகராட்சி நிர்வாக துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவன கூடுதல் தலைமைச் செயலாளர் சாய்குமார், முதன்மைச் செயலாளர், சென்னை மாநகராட்சி கமிஷனர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவன முதன்மைச் செயலாளர் பி.ஸ்வர்ணா, புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு திட்ட முதன்மை செயலாளர் சந்திரகாந்த் காம்ப்ளே, நகராட்சி நிர்வாக இயக்குநர் பி.பொன்னையா, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் வி.தக்சிணாமூர்த்தி, நகராட்சி நிர்வாக துறை இணை செயலாளர் கே. மெகராஜ், நகராட்சி நிர்வாகம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்கள், மாநகராட்சி, நகராட்சி ஆணையாளர்கள், நகராட்சிகளின் மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் பொறியாளர்கள்உட்பட பலர் கலந்து கொண்டனர்.


## இஆர்பி சாப்ட் சிஸ்டம்ஸ் லிமிடெட்

10ஏ, டிராங்குல் நெஸ்ட், காமகோடி நகர், 3வது பிரதான சாலை, பள்ளிக்கரணை, சென்னை - 600 100 | CIN: L67120TN1994PLC029563

**31.03.2021 அன்றுடன் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட ஒருங்கிணைந்த முடிவுகள் சுருக்கம்**

(ரூபாய் லட்சங்களில்)

| வ. எண். | விவரங்கள் | முடிந்த காலாண்டு 31.03.2021 | முடிந்த இதே 3 மாதங்கள் 31.03.2020 | முடிந்த ஆண்டு 31.03.2021 | முடிந்த ஆண்டு 31.03.2020 |
|---|---|---|---|---|---|
| | | தணிக்கைசெய்தது | தணிக்கைசெய்தது | தணிக்கைசெய்தது | தணிக்கைசெய்தது |
| 1. | செயல்பாடுகள் மூலம் வருவாய் | 515.68 | 218.76 | 1276.23 | 1015.10 |
| 2. | காலத்திற்கான நிகர லாபம் /(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்கள் முன்#) | 12.05 | -3.96 | 42.78 | 20.43 |
| 3. | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம் /(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்கள் பின்#) | 12.05 | -3.96 | 42.78 | 18.87 |
| 4. | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்கள் பின்#) | 4.34 | -4.54 | 36.11 | 14.26 |
| 5. | காலத்திற்கான மொத்த பரிபூரண வருமானம் /(நஷ்டம்) (காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர பரிபூரண வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது) | 4.34 | -4.54 | 36.11 | 90.31 |
| 6. | செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் | 396.00 | 396.00 | 396.00 | 396.00 |
| 7 | கடந்த ஆண்டு தணிக்கை செய்யப்பட்ட இருப்புநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி ரிசர்வுகள் (மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலாக) | - | - | 1210.93 | 1217.59 |
| 8. | ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் ரூ.10/- ) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள் 1. அடிப்படை 2. பலமிழந்தது | 0.11<br>0.11 | -0.11<br>-0.11 | 0.91<br>0.91 | 0.04<br>0.04 |

**Note**

a) SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட தனியான நிதிநிலை முடிவுகளின் வருவாய் ரூ.32.82 லட்சம். வரிக்கு முந்தைய லாபம் ரூ.1.33 லட்சம் மற்றும் வரிக்கு பிந்தைய நஷ்டம் ரூ.4.37 லட்சம். காலாண்டு முடிவுகளின் முழு வடிவம் ஸ்டாக் எக்சேஞ்ச் இணையதளம் மற்றும் கம்பெனியின் இணையதளம் (www.erpssoft.com)ல் கிடைக்கும்.

b) மேற்கண்ட தணிக்கை செய்யப்பட்ட தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள் கம்பெனியின் சட்ட தணிக்கையாளர்களால் குறுகிய மறுபரிசீலனை செய்யப்பட்டு 25.06.2021 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

இஆர்பி சாப்ட் சிஸ்டம்ஸ் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/-
K. பார்வதி
நிர்வாக இயக்குனர்

இடம் : சென்னை
தேதி : 25.06.2021



**ஆவணம் காணவில்லை**

விற்பனை பத்திர ஆவணம் எண்.2179/2012, தேதியிட்ட 30.03.2012 சொக்கிக்குளம் எஸ்.ஆர்.ஓ, மதுரை,எஸ். லீனஸுக்கு ஆதரவாக பதிவு செய்யப்பட்டுள்ளது.இதைக் கண்டறிந்த எவரும் எல். வால்டர் பால், L -6, MIG Block, பட்டினப்பாக்கம் சென்னை - 600028 ஐ தொடர்பு கொள்ளலாம்.

94 44 04 34 39



**ENROLLMENT**

B.K. Geetha
D/o. B. Kamala Kannan
40 years No. 64 B AVM Avenue,
1st main road,Virugambakkam,
Chennai 600 092.
Intend having my Enrollment as an Advocate moved before the Bar Council Of Tamilnadu, Bar Council Buildings High Court Campus, Chennai -104. Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

B.K.GEETHA



## Kumbhat Financial Services Limited

Regd. Office : 5th Floor , Kumbhat Complex, No : 29 Ratan Bazaar, Chennai - 600 003.
Phone Number : 044-2533 2173. Email Id : cs@kumbhatfinancialserviceslimited.com
CIN : L65991TN1993PLC024433

**AUDITED FINANCIAL RESULTS FOR THE YEAR ENDING 31.03.2021**

(Rs.in Lakhs)

| Sl. No. | Particulars | Quarter Ended | | | Year Ended | |
|---|---|---|---|---|---|---|
| | | 31.03.2021 | 31.12.2020 | 31.03.2020 | 31.12.2021 | 31.03.2020 |
| | | Unaudited | | | Audited | |
| 1 | Total Income from Operations | (1.49) | 1.29 | 6.44 | 16.97 | 50.97 |
| 2 | Net Profit / (Loss) for the period (before Tax and Exceptional items) | (98.58) | (2.13) | (5.98) | (87.05) | 21.70 |
| 3 | Net Profit / (Loss) for the period before tax (after Exceptional items) | (98.58) | (2.13) | (5.98) | (87.05) | 21.70 |
| 4 | Net Profit / (Loss) for the period after tax (after Exceptional items) | (95.14) | (2.66) | (7.34) | (87.76) | 21.77 |
| 5 | Total Comprehensive Income for the period [Comprising Profit / (Loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax)] | (95.14) | (2.66) | (7.34) | (87.76) | 21.77 |
| 6 | Equity Share Capital | 475.00 | 475.00 | 475.00 | 475.00 | 475.00 |
| 7 | Reserves (excluding Revaluation Reserve) as shown in the Audited Balance Sheet of the current year | -49.55 | | | | |
| 8 | Earnings Per Share (of Rs.10/- each) (for continuing and discontinued operations): (Not Annualised) 1) Basic: 2) Diluted: | (2.00)<br>(2.00) | (0.06)<br>(0.06) | (0.15)<br>(0.15) | (1.85)<br>(1.85) | 0.46<br>0.46 |

**Notes:**

a. The above is an extract of the detailed format of Quarterly / Annual Financial Results filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing and Other Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Quarterly / Annual Financial Results are available on the websites of the Stock Exchange(s) and the listed entity. (www.kumbhatfinancialserviceslimited.com )

b. The financial statements have been prepared under Ind-As from 01.04.2019 as required by section 133 of Companies Act, 2013.

for Kumbhat Financial Services Limited
**SANJAY KUMBHAT**
**Managing Director**

Place : Chennai
Date : 26.06.2021

# செஞ்சி ஊராட்சியில் வளர்ச்சித் திட்டப் பணிகள்: அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆய்வு

விழுப்புரம், ஜூன் 27–

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பாலப்பட்டு ஊராட்சியில் ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித்துறை சார்பாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் ரூ.4.60 லட்சம் மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணியினையும் மற்றும் பொதுநிதி திட்டத்தின்கீழ் ரூ.4.66 லட்சம் மதிப்பீட்டில் சின்டெக்ஸ் டேங்குகள் பழுது நீக்கம் செய்தல் பணியினை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து செஞ்சி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தென்புதுப்பட்டு ஊராட்சியில் ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித்துறை சார்பாக பொதுநிதி திட்டத்தின்கீழ் ரூ.16 லட்சம் மதிப்பீட்டில் ஊராட்சிய ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் புதியதாக இரண்டு வகுப்பறை கட்டப்பட்டுள்ள கட்டடத்தினையும் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் ரூ.5.90 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியினை அமைச்சர் ஆய்வு செய்தார். செஞ்சி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் வடிகால் வாய்க்கால் அமைப்பது தொடர்பாக அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், மாவட்ட கலெக்டர் த.மோகன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

இதனை தொடர்ந்து விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித்துறை சார்பாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் நடைபெற்று வரும் பணிகளை ஆய்வு செய்தனர். இதனை தொடர்ந்து செஞ்சி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட காரை ஊராட்சியில் ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித்துறை சார்பாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் ரூ.7,48,000 மதிப்பீட்டில் தனிநபருக்கு திறந்தவெளி கிணறு அமைத்தல் பணியினையும் மற்றும் ரூ.7 லட்சம் மதிப்பீட்டில் வாய்க்கால் தூர்வாரும் பணியினை (சங்கன் பாண்டு) கலெக்டர் த.மோகன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பு.காஞ்சனா, ஊரக வளர்ச்சித்துறை செயற்பொறியாளர் ராஜா, உதவி இயக்குநர் ஊராட்சிகள் (பயிற்சி) சூர்யா, செஞ்சி வட்டாட்சியர் ராஜன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கேசவலு, பழனி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

# வாலாஜாபாத் அருகே கருங்கற்களை வெட்டி கடத்துவதாக கிராம மக்கள் புகார்: அதிகாரி ராஜலட்சுமி நேரில் ஆய்வு

காஞ்சீபுரம், ஜூன் 27–

வாலாஜாபாத் ஒன்றியம் பழைய சீவரம் ஊராட்சிக்கு உட்பட்டது சங்கராபுரம் கிராமம். இந்த கிராமப் பகுதியில் அமைந்துள்ள மலைக்குன்றுகளில் உள்ள கருங்கற்கள் சாமி சிலைகள் மற்றும் சிற்பங்களை செய்வதற்கு ஏற்றதாக உள்ளது.



இந்த நிலையில் அரசு அனுமதி இல்லாமல் சமூக விரோதிகள் கருங்கற்களை வெட்டி மாமல்லபுரம் மற்றும் வெளி மாநிலங்களில் உள்ள சிற்பக் கூடங்களுக்கு இரவு நேரங்களில் லாரிகளில் கடத்துவது தெரியவந்தது.

இது குறித்து வாலாஜாபாத்தில் நடைபெற்ற ஜமாபந்தி கூட்டத்தில் சங்கராபுரம் கிராம மக்கள் வருவாய் ஆர்டிஓ ராஜலட்சுமியிடம் புகார் தெரிவித்தனர்.

கிராம மக்களின் புகாரைத் தொடர்ந்து ஆர்டிஓ ராஜலட்சுமி சங்கராபுரம் கிராமத்திற்கு நேரில் சென்று மலைக்குன்று பகுதிகளை ஆய்வு செய்தார். அப்போது பல்வேறு இடங்களில் இருந்த குன்றுப் பகுதிகளில் சாமி சிலைகளை செய்வதற்காக அரிய வகை கருங்கற்கள் வெட்டி கடத்துவதற்கு தயாராக வைக்கப்பட்டிருந்ததை கண்டுபிடித்தார்.

இதுகுறித்து மாவட்ட கலெக்டர் ஆர்த்திக்கு தகவல் தெரிவித்துள்ளார். அரசுக்கு அதிக வருவாய் தரக்கூடிய கருங்கற்கள் என்பதால் மாவட்ட கலெக்டரின் உத்தரவின்படி சம்பந்தப்பட்ட கனிமவளத் துறை அதிகாரிகளுக்கும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பரிந்துரைத்தார்.

மேலும் அரசு அனுமதியின்றி கற்களை வெட்டி கடத்த முயன்றவர்களை கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்குமாறும், வெட்டி வைக்கப்பட்டுள்ள கருங்கற்களை கடத்த முடியாதபடி போலீசார் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட வேண்டும் என சாலவாக்கம் போலீசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கிராம மக்களின் புகாரை ஏற்று உடனடியாக காஞ்சீபுரம் ஆர்டிஓ ராஜலட்சுமி மேற்கொண்ட ஆய்வின் காரணமாக கடத்தப்பட தயார் நிலையில் இருந்த பல லட்சம் ரூபாய் மதிப்பிலான அரியவகை கருங்கற்கள் பி டி ப ட் டு ள் ள து குறிப்பிடத்தக்கது.

## பெயர் மாற்றம்

Rizwan Ahamed Kambathu Sabur Alam, தந்தை பெயர்: Kambathu Habib Sabur Alam, பிறந்த தேதி: 12.11.1996, நெ.124/259, 2வது மாடி, லிங்கி செட்டி தெரு, முத்தியால்பேட் பெண்கள் பள்ளி அருகில், மண்ணடி, சென்னை – 600 001, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **RIZWAN AHAMED,** என்று அழைக்கப்படுகிறேன்.

Rizwan Ahamed Kambathu Sabur Alam

## பெயர் மாற்றம்

Shoba Kottapotta Subramani, கணவர் பெயர்: Suresh Hariharan Nair, பிறந்த தேதி: 30.10.1978, F7A, பேஸ்–1, 1வது மாடி, Ruby Avenue, அருள் நகர், இரும்புலியூர், கிழக்கு தாம்பரம், சென்னை– 600 059, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **New Name: SHOBHA, Sur Name: SURESH NAIR,** என்று அழைக்கப் படுகிறேன்.

Shoba Kottapotta Subramani

## பெயர் மாற்றம்

VAIDEHI SRINIVASAN, தந்தை பெயர்: Srinivasan Iyengar, பிறந்த தேதி: 29.05.2003, ப்ளாட் நெ.8, கிருஷ்ணா ப்ளாட்ஸ், விவேகானந்தபுரம் 1வது தெரு, ஆர்யகௌடா, மேற்கு மாம்பலம், சென்னை – 600 017, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **Vaidehi Srinivasan Iyengar,** என்று அழைக்கப்படுகிறேன்.

VAIDEHI SRINIVASAN

## பெயர் மாற்றம்

Hassan Sherieff Adam, தந்தை பெயர்: Adam Sheriff, பிறந்த தேதி: 05.07.1965, நெ.10, ஆதிசேஷ நகர், 6வது தெரு, பெரம்பூர் ஹை ரோடு, மங்களாபுரம், சென்னை– 600 012, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **HASSAN SHERIFF,** என்று அழைக்கப் படுகிறேன்.

Hassan Sherieff Adam

## பெயர் மாற்றம்

MOHAMED ISMAIL – MOHAMED NABIEEL, பிறந்த தேதி: 26.04.2004, ப.நெ.11, பு.நெ.14, அபிராமி அபார்ட்மெண்ட்ஸ், ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை, சென்னை – 600 014, என்ற முகவரியில் வசிக்கும் எனது மகன் இனி **ISMAIL – MOHAMED NABIEEL,** என்று அழைக்கப்படுகிறார்.

**Mohamed Ismail,**
தந்தை

**சீட்டு நிதிசட்டம் 1982ன் கீழ் சிதம்பரம் துணைச்சீட்டு பதிவாளர் நீதிமன்றம்**
முன்னிலை
திருமதி M.சுகந்தி
சீட்டு சார்பதிவாளர்,சிதம்பரம்.
**மத்தியஸ்தர் வழக்கு எண். 42/2021**
ஜெயப்பிரியா சிட்பண்டஸ் (பி) லிமிடெட், புவனகிரி ...மனுதாரர்
எதிர்
1.S. தனசேகரன், த/பெ. சொக்கலிங்கம், நெ.28, தில்லை நகர், மேல்புவனகிரி.
2.S.பாண்டியன், த/பெ.A.சம்மந்தம், நெ.17, 2 வது தெரு, டிரான்ஸ்போர்ட் நகர், வடலூர்.
3.M. செல்வராஜ், த/பெ.P. மாயகிருஷ்ணன், திருவேங்கடம் நகர், வல்லம்படுகை. (Shair paid)
4.P.பாலமுருகன், த/பெ. J. பன்னீர்செல்வம், நெ.135, பொிய தேவங்கர் தெரு, கீழ்புவனகிரி.(Shair paid)
5.J. ஜெயபிரகாஷ், த/பெ.ஜெயபால், லால் நகர், கீழ் புவனகிரி, புவனகிரி தாலுக்கா. (Shair paid)
6.D.ராஜசேகரன், த/பெ.M. துரை, பிளாட் நெ.45, லிங்கா பைரவி நகர், புவனகிரி.
7.R.ஜெய்சங்கர், த/பெ. ராமமூர்த்தி, நெ.48, அங்காளம்மன் தெரு, தேத்தாம்பாளையம், B.முட்லூர். (Shair paid)
8.L.சக்திவேல்பாண்டியன், த/பெ.லட்சுமணன், நெ.164, லிங்காபாய் ரவி நகர், கீழ்புவனகிரி.

1 முதல் 8ம் எதிர்மனுதாரர்கள் ஜெயப்பிரியா சிட்பண்டஸ் (பி) லிமிடெட் சீட்டு நிதி நிறுவன வழக்கில் JLTF1003/33ன் சந்தாதாரர் S. தனசேகரன்,செலுத்த வேண்டிய தொகையில் ரூ.7,96,932/ பாக்கியுள்ளது என்று தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் வாய்தா நாளான 02.07.2021காலை 11.00 மணிக்கு என் முன் ஆஜராகி உமக்கு இந்த வழக்கு குறித்து ஆட்சேபணை இருந்தால் தொிவித்துக் கொள்ளலாம். தவறினால் தோன்றாத் தரப்பினராக கருதப்பட்டு மத்தியஸ்தர் வழக்கில் உள்ள விஷயம் குறித்து முடிவு செய்யப்படும் என்பதை அறியவும் உத்தரவுப்படி.

**சீட்டு சார்பதிவாளர்**, சிதம்பரம்.

**சீட்டு நிதிசட்டம் 1982ன் கீழ் சிதம்பரம் துணைச்சீட்டு பதிவாளர் நீதிமன்றம்**
முன்னிலை
திருமதி M.சுகந்தி
சீட்டு சார்பதிவாளர்,சிதம்பரம்.
**மத்தியஸ்தர் வழக்கு எண். 33/2021**
ஜெயப்பிரியா சிட்பண்டஸ் (பி) லிமிடெட், புவனகிரி ...மனுதாரர்
எதிர்
1.S.ரேவதி, க/பெ.சண்முகம், நெ.5/8, ரங்கப்பிள்ளை மண்டபம், பரங்கிப்பேட்டை, புவனகிரி.
2.E. சாந்தகுமார், த/பெ. ஏகாம்பரம், நெ.43, திருவள்ளுவர் நகர், நெல்லிக்குப்பம், கடலூர்.
3.K. சண்முகம், த/பெ.கலியபெருமாள், நெ.5/18, ரங்கப்பிள்ளை மண்டபம், பரங்கிப்பேட்டை, புவனகிரி.
4.D. ராஜேஷ், த/பெ.தனராஜ், வடக்கு தெரு, பாளையங்கோட்டை, மேல்பாதி அஞ்சல், ஸ்ரீமுஷ்ணம் தாலுக்கா, கடலூர் மாவட்டம்.

1 முதல் 4ம் எதிர்மனுதாரர்கள் ஜெயப்பிரியா சிட்பண்டஸ் (பி) லிமிடெட் சீட்டு நிதி நிறுவன வழக்கில் JLP1008/24ன் சந்தாதாரர் S.ரேவதி, செலுத்த வேண்டிய தொகையில் ரூ.3,28,867/ பாக்கி யுள்ளது என்று தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் வாய்தா நாளான 02.07. 2021 காலை 11.00 மணிக்கு என் முன் ஆஜராகி உமக்கு இந்த வழக்கு குறித்து ஆட்சேபணை இருந்தால் தொிவித்துக் கொள்ளலாம். தவறினால் தோன்றாத் தரப்பினராக கருதப்பட்டு மத்தியஸ்தர் வழக்கில் உள்ள விஷயம் குறித்து முடிவு செய்யப்படும் என்பதை அறியவும் உத்தரவுப்படி.

**சீட்டு சார்பதிவாளர்**, சிதம்பரம்.

## காணவில்லை

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், புது கருவாட்சி கிராமத்தை சேர்ந்த ராஜேந்திரன் மகன் பிரகாஷ் ஆகிய நான் கடந்த 10/9/2020 அன்று எனக்கு சொந்தமான கிரைய பத்திரம் (சர்வே எண், 132, 133) அனந்தபுரம் ஜெராக்ஸ் கடையில் நகலெடுக்க சென்றபோது தொலைந்து விட்டது.மேற்படி பத்திரத்தை எவரேனும் கண்டெடுத்தால் கீழ்க்கண்ட என்னுடைய முகவரிக்கு தகவல் தெரிவிக்கவும்.இது சம்பந்தமாக ஆன்லைனில் அனந்தபுரம் காவல் நிலையத்தில் புகார் மனு தரப்பட்டுள்ளது புகார் மனு எண் CAP: 20102578/ 12.9.2020.

பிரகாஷ், S/O.ராஜேந்திரன்
புது கருவாச்சி கிராமம், விக்கிரவாண்டி வட்டம்
விழுப்புரம் மாவட்டம்
cell..7358579821.

## ENROLLMENT NOTICE

After 10 days of the publication of this notice and within three months there after I N.RAMASAMY S/O V.NARAYANAN Aged 32 years, permanently residing No 41/1,127, BAJANAI KOVIL STREET , DEVANUR &(POST), MELMALAYANUR (TALUK), VILLUPURAM (DISTRICT) PINCODE-604208 Intend having my Enrollment as an advocate moved before the bar council of Tamil Nadu,bar council building, High Court Campus, Chennai-600104. Those who have any valid objection may notify the same to the bar Council with in ten days.


**N.RAMASAMY**

**வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம்.**
**செங்கல்பட்டு மாவட்டம்.**
**ந.க.எண்.381/2021**

கீ.ஜெயராமன்,
த/பெ.திரு. சி.கிருஷ்ணப்ப நாயக்கர்
துலுக்கானத்தம்மன் கோயில் தெரு,
நெ.94, வளவந்தாங்கல் கிராமம்,
திருப்போரூர் வட்டம்,
திருப்போரூர் வட்டம்.
செங்கல்பட்டு மாவட்டம்.
...மனுதாரர்
வட்டாட்சியர்,
செங்கல்பட்டு மாவட்டம்.
...எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரரின் தந்தை



சி.கிருஷ்ணப்ப நாயக்கர், த/பெ.சின்னையா நாயக்கர் என்பவர் 16.08.1980ம் தேதியன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை பதிவு செய்து கொண்டு இறப்பு சான்றிதழ் வழங்கிட வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளார். இதில் எவருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியான ஒருவார காலத்திற்குள் மேற்படி நீதிமன்றத்தில் ஆஜராகி தமது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம். தவறும்பட்சத்தில் மேற்படி மனுதாரரின் மனு மீது ஒருதலைப்பட்ச முடிவு பிறப்பிக்கப்படும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**கீ.ஜெயராமன்,** மனுதாரர்

## ENROLLMENT

**M. Gayathri**
**D/O N.Manogaran**
**No,3/93, palla street, Kollar (village & post), Tindivanam tk, Villupuram dt,604206.**
**Intend having my Enrollment as an Advocate moved before the Bar Council Of Tamilnadu, Bar Council Buildings High Court Campus, Chennai - 104.**
**Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.**

**M.Gayathri**

**சீட்டு நிதிசட்டம் 1982ன் கீழ் சிதம்பரம் துணைச்சீட்டு பதிவாளர் நீதிமன்றம்**
முன்னிலை
திருமதி M.சுகந்தி
சீட்டு சார்பதிவாளர்,சிதம்பரம்.
**மத்தியஸ்தர் வழக்கு எண். 34/2021**
ஜெயப்பிரியா சிட்பண்டஸ் (பி) லிமிடெட், புவனகிரி ...மனுதாரர்
எதிர்
1.S. மேகலா, க/பெ. R. ஸ்ரீதரன், நெ.268, மெயின் ரோடு, தம்பிக்குணாளன் பட்டினம், புவனகிரி தாலுக்கா.
2.R. ஸ்டாலின், த/பெ.V. ராமசந்திரன், நெ.D270, தந்தை பொியார் நகர், பிளாக்3.
3.G. ஸ்ரீதரன், த/பெ.V. ஞானசேகரன், வண்டுராயன்ப்பட்டு, அழிச்சக்குடி அஞ்சல், புவனகிரி தாலுக்கா.
4.A. மனோகரன், த/பெ.S. அருணாசலம், நெ.75 F, டைப் I, பிளாக்5, நெய்வேலி3

1 முதல் 4ம் எதிர்மனுதாரர்கள் ஜெயப்பிரியா சிட்பண்டஸ் (பி) லிமிடெட் சீட்டு நிதி நிறுவன வழக்கில் JLK1002/17ன் சந்தாதாரர் S. மேகலா, செலுத்த வேண்டிய தொகையில் ரூ.2,18,314/ பாக்கி யுள்ளது என்று தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் வாய்தா நாளான 02.07. 2021காலை 11.00 மணிக்கு என் முன் ஆஜராகி உமக்கு இந்த வழக்கு குறித்து ஆட்சேபணை இருந்தால் தொிவித்துக் கொள்ளலாம். தவறினால் தோன்றாத் தரப்பினராக கருதப்பட்டு மத்தியஸ்தர் வழக்கில் உள்ள விஷயம் குறித்து முடிவு செய்யப்படும் என்பதை அறியவும் உத்தரவுப்படி.

**சீட்டு சார்பதிவாளர்**, சிதம்பரம்.

## ENROLMENT NOTICE

After 10 days of the publication of this notice and within three months there after. I, GUNASEELAN V, S/o.A.Vijayakumar, aged 34 years, permanently residing at No.124/27–1, Andal Nagar, 2nd Street, Avalurpet Road, Tiruvannamalai – 606601. Intend having my enrolment as an Advocate moved before the bar council of tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**GUNASEELAN V**

********

After 10 days of the publication of this notice and within three months there after. I, CHAMUNDEESWARI.R, Father Name: Raman.K, aged 29 years, permanently residing at No.7/4, Periyandavar 2nd Cross Street, Gandhinagar, Oragadam, Ambattur, Chennai – 600 053. Intend having my enrolment as an Advocate moved before the bar council of tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**CHAMUNDEESWARI.R**

********

After 10 days of the publication of this notice and within three months there after. I, T.LAKSHMI PRIYA, D/o.T.Tamilvendan, aged 24 years, permanently residing at No.104, Perumal Kovil Street, Valathodu Post, Alanjeri, Kancheepuram District, Valathodu – 603107. Intend having my enrolment as an Advocate moved before the bar council of tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**T.LAKSHMI PRIYA**

********

After 10 days of the publication of this notice and within three months there after. I, A.PREETHA, S/o.J.Anandaraj, aged 24 years, permanently residing at No.281/3, Senthil Nagar, Senji Post, Senji, Thiruvallur District – 631 203. Intend having my enrolment as an Advocate moved before the bar council of tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**A.PREETHA**

********

After 10 days of the publication of this notice and within three months there after. I, ARAVIND R, S/O.RAGHURAM KAUSHIK, aged 32 years, permanently residing at No.31, Srinivas Apartments, Lakshmi Avenue, Ambal Nagar, Behind DRR Eye Hospital, Kumananchavadi, Chennai – 600 056. Intend having my enrolment as an Advocate moved before the bar council of tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**ARAVIND R**

********

After 10 days of the publication of this notice and within three months there after. I, MOSHINA.D, D/o. K.Dhanasekaran, aged 29 years, permanently residing at No.30, Loganathan Street, Krishnapuram, Ambattur, Chennai – 600 053. Intend having my enrolment as an Advocate moved before the bar council of tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**MOSHINA.D**

********

After 10 days of the publication of this notice and within three months there after. I, T.SIDDHARTHAN, S/o.PE. Thamizhiniyan, aged 30 years, permanently residing at No.262, 9th Block, Parvathy Kakkan Nagar, Puliyanthope, Chennai –600 012. Intend having my enrolment as an Advocate moved before the bar council of tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**T.SIDDHARTHAN**

********

After 10 days of the publication of this notice and within three months there after. I, JAYAPRIYA.M, D/o. Mathew John, aged 26 years, permanently residing at No.3/47, Periyar Street, Athur Village, Sholavaram Post, Ponneri Taluk, Thiruvallur District, Chennai – 600 067. Intend having my enrolment as an Advocate moved before the bar council of tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**JAYAPRIYA.M**

********

After 10 days of the publication of this notice and within three months there after. I, P.M.NAVANEETHA PANDIAN, Father Name: S.P.Muthu, aged 24 years, permanently residing at No.18/93, 11th Avenue, Banu Nagar, Pudur, Ambattur, Chennai – 600 053. Intend having my enrolment as an Advocate moved before the bar council of tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**P.M.Navaneetha Pandian**

********

After 10 days of the publication of this notice and within three months there after. I, R.KALIDASS, S/o. R.Ravi, aged 30 years, permanently residing at No.89, Main Road, Vikravandi, Vikravandi Taluk, Villupuram District – 605 652. Intend having my enrolment as an Advocate moved before the bar council of tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**R.KALIDASS**

********

## ENROLMENT NOTICE

After 10 days of the publication of this notice and within three months there after. I, P.BALACHANDER, S/o.R.Purushothaman, aged 33 years, permanently residing at No.3/2, Munuswamy Subedhar Street, Saidapet, Vellore – 632012. Intend having my enrolment as an Advocate moved before the bar council of tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**P.BALACHANDER**

********

After 10 days of the publication of this notice and within three months there after. I, C.ELANGOVAN, S/o.P.Chinnakannappan, aged 29 years, permanently residing at No.204, Bajanai Kovil Street, Pullur Village, Vaniyambadi TK, Tirupattur District –635 801. Intend having my enrolment as an Advocate moved before the bar council of tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**C.ELANGOVAN**

********

**சீட்டு நிதிசட்டம் 1982ன் கீழ் சிதம்பரம் துணைச்சீட்டு பதிவாளர் நீதிமன்றம்**
முன்னிலை
திருமதி M.சுகந்தி
சீட்டு சார்பதிவாளர்,சிதம்பரம்.
**மத்தியஸ்தர் வழக்கு எண். 35/2021**
ஜெயப்பிரியா சிட்பண்டஸ் (பி) லிமிடெட், புவனகிரி ...மனுதாரர்
எதிர்
1.R. ஜோதிராஜ், த/பெ. ராமலிங்கம், நெ.14B, மஞ்சக்குழி, மஞ்சக்குழி அஞ்சல், சிதம்பரம் தாலுக்கா.
2.K. சண்முகம், த/பெ. கல்யாணசுந்தரம், நெ.117/2, நெல்சன்மண்டேலா தெரு, தெற்கு பொியார் நகர், பூதாமூர் அஞ்சல், விருத்தாசலம் தாலுக்கா.
3.G. ரவிசந்திரன், த/பெ. கோவிந்தராஜன், B.S. பலூன் தெரு, பிளாக்3, நெய்வேலி1.
4.V.G.சங்கர், த/பெ.கணேசன், மெயின் ரோடு, வல்லம்படுகை அஞ்சல், சிதம்பரம் தாலுக்கா.
5.S. ரங்கராசு, த/பெ.சிங்காரவேலு, நெ.5, கிழக்கு தெரு, மாரியம்மன் கோயில் தெரு, வீணங்கேனி, சேப்பளாநத்தம் அஞ்சல், நெய்வேலி வழி, விருத்தாசலம் தாலுக்கா.
6.M. பழனி, த/பெ.முத்துலிங்கம், நெ.17, கிழக்கு தெரு, வீணங்கேனி, முலகுப்பம் அஞ்சல், நெய்வேலி வழி, விருத்தாசலம் தாலுக்கா.

1 முதல் 6ம் எதிர்மனுதாரர்கள் ஜெயப்பிரியா சிட்பண்டஸ் (பி) லிமிடெட் சீட்டு நிதி நிறுவன வழக்கில் JLTL1002/25ன் சந்தாதாரர் R. ஜோதிராஜ், செலுத்த வேண்டிய தொகையில் ரூ.7,41,875/ பாக்கியுள்ளது என்று தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் வாய்தா நாளான 02.07.2021காலை 11.00 மணிக்கு என் முன் ஆஜராகி உமக்கு இந்த வழக்கு குறித்து ஆட்சேபணை இருந்தால் தொிவித்துக் கொள்ளலாம். தவறினால் தோன்றாத் தரப்பினராக கருதப்பட்டு மத்தியஸ்தர் வழக்கில் உள்ள விஷயம் குறித்து முடிவு செய்யப்படும் என்பதை அறியவும் உத்தரவுப்படி.

**சீட்டு சார்பதிவாளர்**, சிதம்பரம்.

**சீட்டு நிதிசட்டம் 1982ன் கீழ் சிதம்பரம் துணைச்சீட்டு பதிவாளர் நீதிமன்றம்**
முன்னிலை
திருமதி M.சுகந்தி
சீட்டு சார்பதிவாளர்,சிதம்பரம்.
**மத்தியஸ்தர் வழக்கு எண். 36/2021**
ஜெயப்பிரியா சிட்பண்டஸ் (பி) லிமிடெட், புவனகிரி ...மனுதாரர்
எதிர்
1.T.முத்துகிருஷ்ணன், த/பெ. விநாயகமூர்த்தி, நெ.258, புதுத் தெரு, மேலமணக்குடி & அஞ்சல், புவனகிரி தாலுக்கா.
2.K. குமார், த/பெ. கனகசபை, நெ.97, மெயின் ரோடு, மேலமணக்குடி அஞ்சல், புவனகிரி தாலுக்கா.
3.K. செந்தில்குமார், த/பெ.K. கிருஷ்ணசாமி, வடக்கு தெரு, B. சித்தோி, புவனகிரி தாலுக்கா.

1 முதல் 3ம் எதிர்மனுதாரர்கள் ஜெயப்பிரியா சிட்பண்டஸ் (பி) லிமிடெட் சீட்டு நிதி நிறுவன வழக்கில் JFP 1007/16ன் சந்தாதாரர் T.முத்துகிருஷ்ணன், செலுத்த வேண்டிய தொகையில் ரூ.2,67,494/ பாக்கியுள்ளது என்று தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் வாய்தா நாளான 02.07.2021காலை 11.00 மணிக்கு என் முன் ஆஜராகி உமக்கு இந்த வழக்கு குறித்து ஆட்சேபணை இருந்தால் தொிவித்துக் கொள்ளலாம். தவறினால் தோன்றாத் தரப்பினராக கருதப்பட்டு மத்தியஸ்தர் வழக்கில் உள்ள விஷயம் குறித்து முடிவு செய்யப்படும் என்பதை அறியவும் உத்தரவுப்படி.

**சீட்டு சார்பதிவாளர்**, சிதம்பரம்.

**சீட்டு நிதிசட்டம் 1982ன் கீழ் சிதம்பரம் துணைச்சீட்டு பதிவாளர் நீதிமன்றம்**
முன்னிலை
திருமதி M.சுகந்தி
சீட்டு சார்பதிவாளர்,சிதம்பரம்.
**மத்தியஸ்தர் வழக்கு எண். 30/2021**
ஜெயப்பிரியா சிட்பண்டஸ் (பி) லிமிடெட், புவனகிரி ...மனுதாரர்
எதிர்
1.M.மோகன்தாஸ், த/பெ.மாயவன், நெ.14, ராகவேந்திரா நகர், புவனகிரி.
2.V. இந்திராணி நிர்மலா, க/பெ. A.விக்டர் ஜொ்மியாஸ், நெ.11, வெற்றி நகர், பள்ளிப்படை, வண்டிகேட், சிதம்பரம் தாலுக்கா.
3.A. விக்டர் ஜொ்மியாஸ், த/பெ.அமிர்தநாதன், நெ.11, வெற்றி நகர், பள்ளிப்படை, வண்டிகேட், சிதம்பரம் தாலுக்கா.
4.D.சதிஷ்குமார், த/பெ.தர்மராஜ், நெ.12, சிவசண்முகம் தெரு, முதல் வார்டு, சிதம்பரம்.
5.C.அறிவரசு, த/பெ. சின்னப்பன், நெ.18, அமுதசுரபி நகர், ஊ.கொத்தங்குடி, அண்ணாமலை நகர்.
6.T.சமரசம், த/பெ. தங்கவேல், நெ.10, வெற்றி நகர், வண்டிகேட், பள்ளிப்படை, சிதம்பரம்.
7.E.விமலா, த/பெ.S.பாலசுப்ரமணியன், நெ.14, ராகவேந்திரா நகர், புவனகிரி

1 முதல் 7ம் எதிர்மனுதாரர்கள் ஜெயப்பிரியா சிட்பண்டஸ் (பி) லிமிடெட் சீட்டு நிதி நிறுவன வழக்கில் JLTF1002/19ன் சந்தாதாரர் M.மோகன்தாஸ், செலுத்த வேண்டிய தொகையில் ரூ.8,56,211/ பாக்கியுள்ளது என்று தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் வாய்தா நாளான 02.07.2021 காலை 11.00 மணிக்கு என் முன் ஆஜராகி உமக்கு இந்த வழக்கு குறித்து ஆட்சேபணை இருந்தால் தொிவித்துக் கொள்ளலாம். தவறினால் தோன்றாத் தரப்பினராக கருதப்பட்டு மத்தியஸ்தர் வழக்கில் உள்ள விஷயம் குறித்து முடிவு செய்யப்படும் என்பதை அறியவும் உத்தரவுப்படி.

**சீட்டு சார்பதிவாளர்**, சிதம்பரம்.

## IN LOVING MEMORY



**Smt B. Parimala**
**13.06.1939 - 06.06.2021**
**Prolific Vionlinist**
**Devotional Singer**
**Passionate and Dedicated music guru**
**Former All India Radio Graded Artist**

**Shri S. Balasubramanian**
**19.11.1931 - 21.05.2021**
**Retired Chief Auditor, Simpsons Group**
**Recipient of 'Guru Kainkarya Mani' from Sri Sri Sri Jayendra Saraswati Swamigal of Kanchi Mutt**
**Former trustee of "Sankaralayam" Perambur**
**Recipient of 'Advaita Samrakshaka' Virudu from TAMBRAS**
**Former President, Perambur Sangeetha Sabha**
**Lifetime Achievement Award, ICAI**

**Both attained the lotus feet of Mahaperiyava**
**Their warmth, grace, affection and love will always live in Our hearts and in the numerous lives they guided and touched.**
**Deeply moumed by : Family, Friends and Students**
**Email : nallursbiyer@gmail.com**

## பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரர்கள் திருமதி. D. மாலினி, திருமதி. D. வனிதா மற்றும் பலர், திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தாலுக்கா, கிராண்ட்லைன் கிராமம், விஷ்ணு நகர் லேஅவுட், புஞ்சை சர்வே எண்.17/7 மற்றும் பட்டாப்படி உப பிரிவு சர்வே எண்.17/17A1D, மனை எண்.198-ல் உள்ள 1800 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட நிலத்திற்கு உரிமையாளர்கள் ஆவார்கள். பொன்னேரி தாலுக்கா, கிராண்ட்லைன் கிராமம், விஷ்ணு நகர் லேஅவுட், சர்வே எண்.17/7, மனை எண்.198-ல் உள்ள 1800 சதுர அடி விஸ்தீரணம் நிலம் கொண்ட இந்த சொத்து முதலில் 24.02.1988 தேதியிட்ட விற்பனை பத்திரம் மூலம், ரெட்ஹில்ஸ் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1218/1988 என்று பதிவு செய்யப்பட்டு திருமதி. D. மாலினி, க/பெ. திரு. P. துரை அவர்களால் வாங்கப்பட்டது. எந்தவித வில்லங்கமும் இல்லாமல் அவர் மேற்கண்ட சொத்தை அனுபவித்து வந்தார் என்று இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் திருமதி. D. மாலினி தனது கணவர் மீது வைத்திருந்த அன்பு மற்றும் பாசம் காரணமாக தீர்வு பத்திரம் மூலம் இந்த சொத்தை தனது கணவர் திரு. P. துரை பெயருக்கு மாற்றிக் கொடுத்தார். இது ரெட்ஹில்ஸ் சார் பதிவாளர் அலுவலகத்தில் 30.12.2009 தேதியிட்ட 9382/2009 என்ற ஆவண எண் கொண்டு பதிவு செய்யப்பட்டது. இந்நிலையில் மேற்கண்ட திரு. P. துரை அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள சொத்தை கையகப்படுத்தி எந்தவித வில்லங்கமும் இல்லாமல் தனது வாழ்நாள் வரை அனுபவித்து வந்தார். அதற்காக அவர் பட்டா மற்றும் அவரது பெயரில் பெற்ற பட்டா எண்.4259-க்கு இதர வருவாய் பதிவுகளையும் பெற்றிருந்தார். தற்போது அந்த மேற்கண்ட காலி நிலத்திற்கான உப பிரிவு சர்வே எண்.17/17A1D ஆகும். மேற்கண்ட திரு. P. துரை அவர்கள் கடந்த 15.06.2019 அன்று காலமானார். இதனைத் தொடர்ந்து மேற்கண்ட சொத்திற்கு எனது கட்சிக்காரர்கள் திருமதி. D. மாலினி, திருமதி. D. வனிதா ஆகியோரை சட்ட வாரிசுகளாக நியமனம் செய்துள்ளார். இதில் இறந்துபோன சட்ட வாரிசுகளின் ஒருவரின் மகளான திருமதி. D. துர்காதேவியும் மேற்கண்ட சொத்திற்கு சட்ட வாரிசாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், கடந்த 14.12.2009 அன்று வீட்டை மாற்றும்போது, அசல் தாய் பத்திரமான 24.02.1988 தேதியிட்டு 1218/1988 என்ற ஆவணம் எண் கொண்டு பதிவு செய்யப்பட்ட விற்பனை பத்திரம் காணாமல் போய்விட்டது. கடும் முயற்சி மேற்கொண்டு அசல் தாய் பத்திரத்தை எங்கு தேடியும் அது கிடைக்கவில்லை. ரெட்ஹில்ஸ், சார் பதிவாளர் அலுவலகத்தில் 1218/1988 என்ற ஆவண எண் கொண்டு பதிவு செய்யப்பட்ட காணாமல் போன தாய் பத்திரம் குறித்து ரெட்ஹில்ஸ் சார்பதிவாளர் அலுவலகத்தில் 30.12.2009 தேதியிட்ட 9382/2009 என்ற ஆவண எண் கொண்டு பதிவு செய்யப்பட்ட தீர்வு பத்திர கோப்பின் பக்கம் எண். 5-ல் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்மூலம் இந்த சொத்து எந்தவித வில்லங்கத்திற்கும் உட்படவில்லை என்பது தெரிய வருகிறது.

மேற்கண்ட சூழ்நிலையில், யாரேனும் இந்த ஆவணத்தை கையகப்படுத்தி இருந்தால் அது குறித்து இந்த விளம்பரம் வெளியான 15 நாட்களுக்குள் ஒப்படைக்குமாறு எனது கட்சிக்காரர்கள் கேட்டுக்கொள்கிறார்கள். ரெட்ஹில்ஸ், சார் பதிவாளர் அலுவலகத்தில் 24.02.1988 தேதியிட்ட 1218/1988 என்ற ஆவண எண் கொண்டு பதிவு செய்யப்பட்ட அசல் ஆவணத்தின் அடிப்படையில் யாரேனும் உரிமை கோரினால் அது குறித்து கீழ்க்கையொப்பமிட்டவரிடம் 15 நாட்களுக்குள் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இந்தக் காலத்தில் எந்தவித கோரிக்கையும் பெறப்படாவிட்டால், எனது கட்சிக்காரர்கள் இந்த சொத்தை சட்டப்படி முறையாக கையாள்வார்கள். அதனைத் தொடர்ந்து இந்த சொத்து தொடர்பான தாய் பத்திரத்தை வைத்து யாரேனும் வில்லங்கம் செய்ய முற்பட்டால் அது எந்தவிதத்திலும் எனது கட்சிக்காரர்களை பாதிக்காது.

**M. Selvam, Advocate**
No.371, New Additional Law Chambers
Hight Court Buildings, Madras 600 104.

Date : 27.06.2021

## ரவி குமார் டிஸ்டிலரீஸ் லிமிடெட்

CIN:L51909PY1993PLC008493
பதிவு அலுவலகம் : C-9, C-10 இன்டஸ்டிரீயல் எஸ்டேட், 2வது மெயின் ரோடு, தட்டாஞ்சாவடி, புதுச்சேரி - 605 009. போன் : 0413-2244007, 2248888, 2248887,
E-mail: cs@ravikumardistilleries.com Web site : www.ravikumardistilleries.com

**31.03.2021 அன்றுடன் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகள் பற்றிய அறிவிப்பு**

(ரூபாய் லட்சங்களில்)

| வ. எண் | விவரங்கள் | முடிந்த காலாண்டு 31.03.2021 (த.ஆனது) | முடிந்த காலாண்டு 31.03.2020 (த.ஆனது) | முடிந்த ஆண்டு 31.03.2021 த.ஆனது | முடிந்த ஆண்டு 31.03.2020 த.ஆனது |
|---|---|---|---|---|---|
| 1 | செயல்பாடுகளில் இருந்து மொத்த வருமாணம் | - | 4451.13 | 60.06 | 18481.82 |
| 2 | நடப்பு காலத்துக்கான நிகர லாபம் / நஷ்டம் (வரி, விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்களுக்கு முந்தையது*) | (115.08) | 3.21 | (536.61) | 78.09 |
| 3 | வரிக்கு பிந்தைய நடப்பு காலத்திற்கான நிகரலாபம் | (115.08) | 3.21 | (736.61) | 67.81 |
| 4 | வரிக்கு பின் விரிவான வருமாணம் | (110.00) | (37.32) | (730.58) | 21.06 |
| 5 | சமபங்கு மூலதனம் | 2400.00 | 2400.00 | 2400.00 | 2400.00 |
| 6 | EPS | | | | |
| | அடிப்படை | (0.46) | (0.16) | (3.04) | 0.09 |
| | திட்பம் | (0.46) | (0.16) | (3.04) | 0.09 |

குறிப்பு : 1) மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 33-வது விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனங்களில் தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளின் விரிவான படிவத்தின் சுருக்கமான அறிக்கையாகும். 31.03.2021 அன்றுடன் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான கம்பெனியின் தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளின் முழுபடிவத்தையும் பங்கு வர்த்தக நிறுவனங்களின் இணையதளங்களிலும் மற்றும் கம்பெனியின் இணையதளமான **www.ravikumardistilleries.com** காணலாம்.

இயக்குனர்கள் குழுவின் ஆணைப்படி
ரவி குமார் டிஸ்டிலரீஸ் லிமிடெடுக்காக
**R.V. ரவிகுமார்**
நிர்வாக இயக்குனர், DIN : 00336646

இடம் : புதுச்சேரி
தேதி : 25-06-2021

## படிவம் எண். INC–25A

பிராந்திய இயக்குனர் முன்பாக, கம்பெனி விவகாரங்கள் துறை அமைச்சகம், தென்பிராந்தியம்

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 14 மற்றும் கம்பெனிகள் (துவக்கம்) விதிகள் 2014, விதி 41 விஷயத்தில்

மற்றும்

M/s. சந்திரகலா ரிசார்ட் ஹோட்டல்ஸ் லிமிடெட் விஷயத்தில், பதிவு அலுவலகம், எண். 29, திலக் தெரு, தி.நகர் சென்னை 600 017, மனுதாரர்

29 ஜனவரி, 2021 அன்று நடைபெற்ற அசாதாரண பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சிறப்பு தீர்மானத்தின்படி, கம்பெனியை பிரைவேட் லிமிடெட் கம்பெனியாக மாற்றுவதற்காக கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 14 மற்றும் மேற்சொன்ன விதிகளின் கீழ் மத்திய அரசுக்கு விண்ணப்பம் ஒன்றை தாக்கல் செய்ய கம்பெனி திட்டமிட்டு அத்தகைய மாற்றத்திற்கான அனுமதி பெற உறுதி ஆக்கம் கோருகிறது என்று பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கம்பெனியின் அந்தஸ்தை மாற்ற/திட்டமிட்டுள்ள மாற்றத்தினால் எவரது நலமேனும் பாதிக்கப்படுவதாக கருதுவாராயின், பாதிக்கப்படும் நலன் மற்றும் எதிர்ப்பதற்கான காரணத்தை அபிடவிட்டுடன் இணைத்து சம்பந்தப்பட்ட பிராந்திய இயக்குனர் (பிராந்திய இயக்குனரின் முழு முகவரி அளிக்கப்படும்) அவர்களுக்கு இந்த அறிவிப்பு வெளியான பதினான்கு நாட்களுக்குள் நேரடியாக அளிக்கலாம் அல்லது பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம். அதன் நகல் ஒன்றை கீழ்குறிப்பிட்டுள்ள முகவரியில் உள்ள மனுதாரர் கம்பெனியின் பதிவு அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும்.

எண். 29, திலக் தெரு, தி.நகர், சென்னை 600 017

மனுதாரர் சார்பாக
ஸ்ரீநிஷா ஜெகத்ரட்சகன்
இயக்குனர்
DIN: 01728749

இடம்: சென்னை
தேதி: 07/06/2021

## படிவம் எண். INC–25A

பப்ளிக் கம்பெனியை பிரைவேட் கம்பெனியாக மாற்ற செய்தித்தாளில் வெளியிடப்பட வேண்டிய விளம்பரம்

பிராந்திய இயக்குனர் முன்பாக, கம்பெனி விவகாரங்கள் துறை அமைச்சகம், தென்பிராந்தியம்

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 14 மற்றும் கம்பெனிகள் (துவக்கம்) விதிகள் 2014, விதி 41 விஷயத்தில்

மற்றும்

M/s. போப்புடி லாஜிஸ்டிக்ஸ் அண்ட் ஷிப்பிங் இந்தியா லிமிடெட் (முன்னர் போப்புடி லாஜிஸ்டிக்ஸ் வைசாக் லிமிடெட் என்றழைக்கப்பட்டது) பதிவு அலுவலகம், யூனிட் ''இ'', 4வது மாடி, ஈஸ்ட் கோஸ்ட் சேம்பர்ஸ், எண். 92, ஜி.என்.செட்டி ரோடு, தி.நகர், சென்னை, தமிழ்நாடு–600 017, மனுதாரர்

வெள்ளிக்கிழமை, 28 மே 2021 அன்று நடைபெற்ற அசாதாரண பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சிறப்பு தீர்மானத்தின்படி, கம்பெனியை பிரைவேட் லிமிடெட் கம்பெனியாக மாற்றுவதற்காக கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 14 மற்றும் மேற்சொன்ன விதிகளின் கீழ் மத்திய அரசுக்கு விண்ணப்பம் ஒன்றை தாக்கல் செய்ய கம்பெனி திட்டமிட்டு அத்தகைய மாற்றத்திற்கான அனுமதி பெற உறுதி ஆக்கம் கோருகிறது என்று பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கம்பெனியின் அந்தஸ்தை மாற்ற/திட்டமிட்டுள்ள மாற்றத்தினால் எவரது நலமேனும் பாதிக்கப்படு வதாக கருதுவாராயின், பாதிக்கப்படும் நலன் மற்றும் எதிர்ப்பதற்கான காரணத்தை அபிடவிட்டுடன் இணைத்து பிராந்திய இயக்குனர், தென் பிராந்தியம், 5வது தளம், சாஸ்திரி பவன், 26, ஹாடோஸ் சாலை, சென்னை–600 006, தமிழ்நாடு அவர்களுக்கு இந்த அறிவிப்பு வெளியான பதினான்கு நாட்களுக்குள் நேரடியாக அளிக்கலாம் அல்லது பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம். அதன் நகல் ஒன்றை கீழ்க்குறிப்பிட்டுள்ள முகவரியில் உள்ள மனுதாரர் கம்பெனியின் பதிவு அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும்.

மனுதாரர் சார்பாக

ஒப்பம்/– சுஹாசினி போப்புடி
இயக்குனர் (DIN: 01291575)

யூனிட் ''இ'', 4வது மாடி, ஈஸ்ட் கோஸ்ட் சேம்பர்ஸ், எண். 92, ஜி.என். செட்டி ரோடு, தி.நகர், சென்னை, தமிழ்நாடு 600 017.

தேதி : 26.06.2021
இடம் : சென்னை

# இந்தியாவிலேயே முதன் முறையாக ரேலா மருத்துவமனையில் ஒரு மாத குழந்தைக்கு கல்லீரல் மாற்று ஆபரேஷன்

## டாக்டர்.முகமது ரேலாவுக்கு காணொளி மூலம் 2–வது பிறந்த நாளில் பெற்றோர்கள் நன்றி




சென்னை, ஜூன். 27–

பிறந்த குழந்தைக்கு கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை என்பது மிகவும் அரிதானது ஆகும். இதுவே ஆர்யன் என்னும் குழந்தைக்கு 2019 – ஆம்ஆண்டில் நடந்தது. பிறந்தபோதே மிகவும் அரிதான வளர்சிதை மாற்ற பிரச்சினையால் அவதியுற்ற இந்தகுழந்தை, பிறந்து 4 வாரங்களே ஆன நிலையில் சென்னை ரேலா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை, இந்தக் குழந்தை பிறந்த 42 –வது நாளில் வெற்றிகரமாக செய்யப்பட்டது என்று இதன் சேர்மன் டாக்டர்.முகமது ரேலா தெரிவித்தார்.

கல்லீரல் தானம் அளிப்பவர்களின் விவரங்களை சோதித்தனர். அப்போது, குழந்தையின் தாயாருக்கு சிசேரியன் (அறுவை சிகிச்சை) செய்திருப்பதாலும், தந்தையின் உடல்நிலை காரணமாகவும் கல்லீரல் தானம் செய்ய முடியாத சூழ்நிலையில் அந்த குழந்தையின் மாமா தனது ஒரு பகுதி கல்லீரலை கொடுத்து அந்த குழந்தையின் அறுவை சிகிச்சைக்கு உதவினார்.

தற்போது அந்த குழந்தை தனது 2–வது பிறந்த நாளை குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக கொண்டாடியது. பிறந்த நாள் அன்று அந்த குழந்தையின் குடும்பத்தினர் காணொளி காட்சி மூலம் ரேலா மருத்துவமனை தலைவரும் நிர்வாக இயக்குநருமான முகமது ரேலா மற்றும் டாக்டர். நரேஷ் சண்முகம் ஆகியோருக்கு நன்றி தெரிவித்தனர்.

தங்கள் குழந்தைக்கு சிறப்பாக அறுவை சிகிச்சை செய்து அனைவரையும் போல இயல்பாக வாழும் வாழ்க்கையை தந்தமைக்காக தங்களது நன்றியையும் தெரிவித்துக் கொண்டனர். தற்போது இந்தியாவிலேயே சிறு வயதில் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்ட இளம் வயது குழந்தை ஆர்யன்தான்.

இது குறித்து டாக்டர்.முகமது ரேலா கூறுகையில், அந்த குழந்தைக்கு ஒரு மாதம் இருக்கும்போது எங்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது. அப்போது அந்த குழந்தையை பரிசோதித்ததில் அந்த குழந்தைக்கு அதிக அமோனியா காரணமாக யூரியா சுழற்சி குறைபாடு இருப்பது கண்டறியப்பட்டது.

நமது உடலில் உள்ள கல்லீரலானது பலவேலைகளை செய்வதோடு நமது உடலில் உள்ள நச்சுகளை வெளியேற்றும் முக்கியமான பணியையும் செய்கிறது. மேலும் ரத்தத்தில் உள்ள அமோனியாவை யூரியாவாக மாற்றுகிறது. அந்த யூரியாவை சிறுநீரகம் வெளியேற்றும். இதில் ஆர்யனைப் பொறுத்தவரை அமோனியாவை யூரியாவாக மாற்றும் நொதி அவனது கல்லீர லில்காணப்படவில்லை என்பதே இதற்கு காரணம் என்றார்.

இந்த நிலையில் இதற்கு ஒரே தீர்வு அறுவை சிகிச்சைதான் என்று முடிவு செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து அறுவை சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. இந்தியாவிலேய இளம் வயதில் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்ட குழந்தை ஆர்யன்தான். மிகவும் சிறிய குழந்தைகளுக்கு கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்ய முடியாது என்று பல டாக்டர்கள் நம்பி வருகின்றனர். மேலும் குழந்தையின் எடையானது 3 கிலோ இருந்தபோதிலும் எங்கள் மருத்துவமனை டாக்டர்கள் இந்த அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக செய்து, அந்த குழந்தையையும் மற்ற குழந்தைகளைப்போல இயல்பான வாழ்க்கை வாழ வழி வகுத்துக் கொடுத்துள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

# ரெப்கோ ஹோம் பைனான்ஸ் நிறுவனத்தில் லாபம் ரூ. 63.2 கோடியாக உயர்வு

சென்னை, ஜூன் 27–

மத்திய அரசின் ரெப்கோ வங்கியின் அங்கமான ரெப்கோ ஹோம் பைனான்ஸ், வீட்டுவசதி கடன் வழங்குவதில் முன்னணியில் உள்ளது. வங்கி துவங்கியது முதல் தனி நபர் கடனில் அக்கறை செலுத்தி வீட்டுவசதி கடன் வழங்கி திறமையாக கடனை வசூலித்து சாதனை படைத்து வருகிறது. கொரோனா வைரஸ் பிரச்சினை காலத்திலும் கடுமையான சவால்களை சந்தித்து வந்தாலும் இதன் லாபம் 32% அதிகரித்து ரூ.63.2 கோடியாக உயர்ந்துள்ளது என்று இதன் நிர்வாக இயக்குனர் யஷ்பால் குப்தா தெரிவித்தார்.

ரெப்கோ ஹோம் பைனான்ஸ் கடந்த மார்ச் 31–ஆம் தேதியுடன் முடிவடைந்த நான்காவது காலாண்டில் மொத்த வருவாயாக ரூ.340.3 கோடி சம்பாதித்துள்ளது. இது முந்தைய ஆண்டை காட்டிலும் 32% அதிகமாகும். இது இதே காலத்தில் ரூ.645.9 கோடிக்கு கடன் அனுமதித்துள்ளது. ரூ.640.4 கோடிக்கு கடன்களை வழங்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.



நிர்வாக இயக்குனர் யஷ்பால் குப்தா

கடந்த மார்ச் மாதத்துடன் முடிவடைந்த முழு ஆண்டிற்கான செயல்பாட்டில் மொத்த வருமானம் 3% அதிகமாக ரூ.1392.2 கோடி சம்பாதித்துள்ளது. நிகர லாபமாக 3% அதிகரித்து ரூ.287.6 கோடி சம்பாதித்துள்ளது. இது அனுமதித்த கடன் ரூ.1985.1 கோடியாக உள்ளது. இது ரூ.1840.9 கோடிக்கு கடன்கள் வழங்கியுள்ளது என்றும் தெரிவித்தார்.

மொத்தமாக வழங்கியுள்ள வீட்டு வசதி கடன் அளவு 2% அதிகரித்து ரூ.12 ஆயிரத்து 121.5 கோடியாக உயர்ந்துள்ளது. சுய வேலைவாய்ப்பு நபர்களுக்கு வழங்கிய கடன் மொத்த கடனில் 51.5% ஆக பாதுகாப்பாக உள்ளது. காலதாமதமாகும்வரவேண்டிய சொத்துக்களின் மதிப்பு 4.3%லிருந்து 3.7% ஆக குறைந்துள்ளது.

மத்திய அரசின் கணக்கீடுகளின் படி எதிர்பார்க்கப்படும் கடன் நஷ்டத்திற்காக மொத்த கடன் தொகையில் ரூ.288.6 கோடி அளவுக்கு இந்த நிறுவனம் ஒதுக்கீடு செய்துள்ளது. மத்திய வீட்டுவசதி வங்கியின் தேவையான மூலதன அளவான 12 சதவிகிதத்தை விட ரெப்கோ ஹோம் பைனான்ஸ் 28.5% ஆக பாதுகாப்பாக உள்ளது. இந்த நிறுவனத்துக்கு 153 கிளைகள் 24 தூர விநியோக மையங்கள் உள்ளன என்றும் யஷ்பால் குப்தா தெரிவித்தார்.


இது பற்றி அறிய வலைத்தளம் www.repcohome.com மைப் பார்க்கலாம்.

# நடுக்கடலில் தவிக்கும் மீனவர்கள் அவசர உதவி கோர உதவும் ஸ்கைலோ சாதனம்: பி.எஸ்.என்.எல்.கூட்டோடு அறிமுகம்

சென்னை, ஜூன் 27–

வாழ்வாதாரத்துக்காக, அனுதினமும் கடலில் போராடும் மீனவர்களுக்கு, திடீரென ஏற்படும் ஆபத்துகளின்போது, தங்களது உயிரைக் காக்கும்படி கரையில் இருப்போருக்கு கோரிக்கை அனுப்பும், நம்பகமான, செலவு குறைந்த புதிய தொழில்நுட்பம் தமிழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பொதுத்துறை நிறுவனமான பி.எஸ்.என்.எல். செயற்கைக் கோள் தரைக் கட்டுப்பாட்டு கட்டமைப்பைப் பயன்படுத்தி இயந்திரங்களை இணையத் தொடர்பு மூலம் இணைக்க வைக்கும் உத்தியைக் கொண்டு ஸ்கைலோ டெக்னாலஜீஸ் தயாரித்துள்ளது.

இதில் இருவழி தகவல் தொடர்பும் சாத்தியமாவதுடன், இதைச் செயலாக்குவதும் எளிது. இதற்காக இந்நிறுவனம் வடிவமைத்துள்ள 'ஸ்கைலோ ஹப்' என்ற கச்சிதமான வடிவ சாதனத்தை மீனவர்களின் படகில் நிறுவினால் போதுமானது. இதன் இயக்கத்துக்குத் தேவையான மின்சாரத்தை பேட்டரிகளின் மூலமே வழங்கலாம்.



ஸ்கைலோ கருவி பொருத்தப்பட்ட படகு.

இதிலிருக்கும் நுண்ணலை கதிர் உணர்வு சாதனம் மீனவர்கள் அனுப்பும் தகவல்களை கரைக்கு எடுத்துச் செல்வதோடு, தரைக் கட்டுப்பாட்டு அலுவலகத்தில் இருந்து படகுக்கு அனுப்பப்படும் அவசரத் தகவல்களையும் மீனவர்களுக்கு கொண்டு சேர்க்கும் திறன் பெற்றுள்ளது. ஒட்டுமொத்த இந்திய தீபகற்பத்தின் 3 திசைகளின் கடல் பகுதி முழுமைக்கும் ஸ்கைலோ தொழில்நுட்பம் செயல்படும். இதன் தொழில்நுட்ப சாதனமான, 'ஸ்கைலோ ஹப்'பைபொது மற்றும் தனிப்பட்ட தேவைகளின்போது எப்படி பயன்படுத்துவது என பயிற்சி வழங்கப்பட உள்ளது. மேலும், மீன்பிடி படகுகளின் உரிமையாளர்கள் மற்றும் தனிநபர்கள் என ஒவ்வொரு தரப்புக்கும் ஏற்ற, கட்டுபடியாகும் விலையில் சந்தா செலுத்தி இந்த வசதியைப் பயன்படுத்திக் கொள்ளும் முறையையும் ஸ்கைலோ அறிமுகப்படுத்தவுள்ளது என்று இந்நிறுவனத்தின் மீனவர் நலத்திட்ட இயக்குனர் கணேஷ் நாக்காவா தெரிவித்தார்.

# கொரோனா தடுப்பு பாதுகாப்புடன் உள்நாட்டு சுற்றுலா திட்டங்கள்: தாமஸ் குக், எஸ்ஓடிசி நிறுவனம் அறிமுகம்

## நிர்வாக இயக்குனர் மாதவன் மேனன் தகவல்

சென்னை, ஜூன், 27–

**2வது கொரோனா (கோவிட் –19) நோய்தொற்று அலை குறைந்து, தடுப்பூசிகளின் வரவு காரணமாக இந்தியாவில் மக்கள் பயணங்களில் ஆர்வம் காட்டுகிறார்கள். இருப்பினும், உடல்நலம் பற்றிய கவலைகள் மற்றும் பயண நெறிமுறைகளில் தொடரும் மாற்றங்கள் ஆகியவை மக்களிடையே பயணம் குறித்த தயக்கத்தை உருவாக்குகிறது.**

மக்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்குவதற்கும், மீண்டும் பயணம் செய்வது பாதுகாப்பானது என்ற நம்பிக்கையை வளர்ப்பதற்கும், தாமஸ் குக் இந்தியா & எஸ்ஓடிசி டிராவல் நிறுவனம் டிராவ்ஷீல்ட் மற்றும் ஹாலிடே பர்ஸ்ட் என்னும் 2 புதிய திட்டங்களை அறிவித்துள்ளது என்று நிர்வாக இயக்குனர் மாதவன் மேனன் தெரிவித்தார்.

நுகர்வோர் நடத்தைகள் மற்றும் பயணத் தேவைகளை நன்கு புரிந்துகொள்ள, தாமஸ் குக் இந்தியா மற்றும் எஸ்ஓடிசி கடந்த ஜூனில் 4000 வாடிக்கையாளர்களிடம் ஒரு கணக்கெடுப்பு நடத்தியது. இந்த தரவு பகுப்பாய்வுகளை ஆராய்ந்தததில் தளர்வுகளுக்கு பிறகு பயணம் செய்ய விருப்படுபவர்கள் 69% ஆக இருந்தனர், அதில் உடனடியாக பயணம் செய்ய 18% பேரும், 3 முதல் 6 மாதங்களுக்குள் பயணம் செய்ய 51% பேரும் விருப்பம் தெரிவித்து இருந்தனர். மேலும், பதிலளித்தவர்களில் சுமார் 81% பேர் திரும்பப் பெறக்கூடிய அல்லது கட்டணமின்றி ரத்து செய்யும் பயண திட்டங்களை வலியுறுத்தினர். மேலும் முழுமையாக மறு சுகாதார சீரமைக்கப்பட்ட அறைகளை 52% பேர் தேர்ந்தெடுத்தனர். முழுமையாக தடுப்பூசி போடப்பட்ட ஓட்டல் ஊழியர்கள் மற்றும் ஓட்டுநர்கள் ஆகியோரை முறையே 48% மற்றும் 34% பதிலளித்தவர்களால் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.



இந்நிறுவனம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள திட்டம் டிராவ்ஷீல்ட். அப்பல்லோ கிளினிக்குகளுடன் இணைந்து, முழுமையான சுகாதார மற்றும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப் பட்ட பயண திட்டம் டிராவ்ஷீல்டில் கட்டமைக்கப்பட்டுள்ளது. ட்ராவ்ஷீல்ட் ஆன்லைன் கட்டணம் மற்றும் சேவை இடைவினைகள், சுத்திகரிக்கப்பட்ட கிளைகள் மற்றும் தடுப்பூசி போடப்பட்ட பயண ஆலோசகர்கள் உள்ளிட்ட பல்வேறு வகையான வாடிக்கையாளர் நன்மைகளை வழங்குகிறது. இலவச மறு திட்டமிடல் மற்றும் ரத்துசெய்தல், (கொரோனா) கோவிட் –19 காப்பீட்டுத் தொகை, எந்நேரமும் அவசர தொடர்பு உதவி மற்றும் டாக்டர்–ஆன்–கால் ஆகியவை இதில் அடங்கும். வாடிக்கையாளர்களுக்கு மிகவும் தேவையான நிதி உதவியை வழங்கும் விதமாக பயணம் முடிந்த பிறகு கட்டணம் செலுத்தும் ஹாலிடே பர்ஸ்ட் திட்டத்தை இந்நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. டிராவ்ஷீல்ட் மற்றும் ஹாலிடே பர்ஸ்ட் பயண திட்டங்கள் பயணவாசிகளின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பிற்கான உறுதிப்பாட்டை ஒருங்கிணைத்து, பயண அனுபவத்தை எளிதாக்குகிறது மற்றும் குறிப்பிடத்தக்க சேமிப்புகளை வழங்குகிறது.

இது குறித்து நிர்வாக இயக்குனர் மாதவன் மேனன் கூறுகையில், "தாமஸ் குக் மற்றும் எஸ்ஓடிசி ஆகியவற்றில், எங்கள் வாடிக்கையாளர்களின் பாதுகாப்பை நாங்கள் மிகவும் மதிக்கிறோம், மேலும் எங்கள் பயண சேவைகள் உலகளாவிய பாதுகாப்புத் தரங்களை பூர்த்தி செய்வதை உறுதிசெய்ய அதிக முயற்சி செய்கிறோம். பயணர்கள் பாதுகாப்பாக பயணிப்பதற்கான நம்பிக்கையை எங்கள் வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்காக, இந்நிறுவனத்தின் உறுதியான பயண பாதுகாப்பு உறுதிப் பாடான டிராவ்ஷீல்ட்ஐ முன்வைப்பதில் நான் பெருமிதம் கொள்கிறேன். டிராவ்ஷீல்ட் வாடிக்கையாளர் பயணத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் துல்லியமான உடல்நலம் மற்றும் பாதுகாப்பு நெறிமுறைகளை உறுதிசெய்து, தற்போது நடைமுறையில் உள்ள எங்கள் பாதுகாப்பான பயணத் திட்டத்தை உள்ளடக்கியது. எங்கள் வாடிக்கையாளர்களின் நிதிச் சுமையைக் குறைக்கும் விதத்தில் அவர்களின் பயணம் முடிந்து தீரும் போது கட்டணம் செலுத்தும் தனித்துவமான திட்டதையும் அறிமுகப்படுத்தியுள்ளோம் என்று கூறினார்.

மேலும் தகவல்களுக்கு thomascook.in மற்றும் sotc.in வலைதளத்தைப் பார்க்கலாம்.

# புத்தகங்களை எழுத்தாளர்கள் ஆன்லைனில் இலவசமாக வெளியிட்டு விற்பனை செய்ய நோஷன் பிரஸ் ஏற்பாடு

சென்னை, ஜூன். 27–

**நோஷன் பிரஸ் நிறுவனத்தில், 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட எழுத்தாளர்கள்தங்கள்புத்தகங்களை வெளியிட்டு இன்று வரை 50 கோடி ரூபாய் மதிப்புள்ள புத்தகங்களை விற்றுள்ளனர். நோஷன் பிரஸ், ஒரு மாதத்திற்கு 2,000 புத்தகங்களை பதிவு செய்கிறது. ஒவ்வொரு இருபத்தைந்து நிமிடங்களுக்கும் ஒரு புதிய புத்தகம் வெளியிடப்படுகிறது.**

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நாங்கள் தளத்தை அறிமுகப்படுத்தியதிலிருந்து எழுத்தாளர்கள் தங்களுக்கென தனி பெயரை உருவாக்க மற்றும் அவர்களின் ஆர்வம் / நிபுணத்துவத்தை வருவாயாக மாற்ற இதைப் பயன்படுத்துகின்றனர். எங்கள் சிறந்த ஆசிரியர்கள் நோஷன் பிரஸ்சில் தங்கள் புத்தகங்களை விற்பனை செய்வதிலிருந்து 10 லட்சம் ரூபாய்க்கு மேல் சம்பாதிக்கின்றனர். இந்த தளத்தில் படைப்பாளிகள் அர்த்தமுள்ள வருவாயைப் பெற முடியும், நோஷன் பிரஸ் நிறுவனத்தின் இணை நிறுவனரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான நவீன் வல்சகுமார்.

"எங்கள்தளத்தின்ஒருபகுதியாகவும், அவர்களின் புத்தகங்களை எழுதும் பல்வேறு கட்டங்களிலும் 3 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட எழுத்தாளர்கள் எங்களிடம் உள்ளனர்" என்று நோஷன் பிரஸ் மூலம் வெளியிடும் சிராஜ் அப்துல் கூறினார்.

"இது விரைவானது, எளிதானது மற்றும் இலவசம். புத்தகத்தின் ஒவ்வொரு பதிப்பிற்கும் ஒரு அடையாள எண் வழங்குகிறோம், எங்கள் புத்தகங்களை உலகம் முழுவதும் விநியோகிக்கிறோம். நோஷன் பிரஸ் எழுத்தாளர்கள் தங்கள் புத்தக விற்பனைத் தகவலை உடனடியாக பெறுகின்றனர். யார் தங்கள் புத்தகத்தை வாங்குகின்றனர், எங்கு பிரபலமாக உள்ளது என்பதைப் புரிந்துகொள்ள உதவுகிறது. நாங்கள் 70% லாபத்தை எங்கள் எழுத்தாளர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம், "என்று அவர் மேலும் கூறினார்.

இது பற்றி அறிய www.notionpress.com என்ற வலைதளத்தைப் பார்க்கலாம்.

# கொரோனா சிகிச்சை மருத்துவத்துக்கு 'க்யூமின்' தொண்டு நிறுவனம் மூலம் 12 லட்சம் உணவு பொட்டலம் சப்ளை

சென்னை, ஜூன் 27–

தெற்கு ஆசியாவில் மிகப்பெரும் ஓட்டல் குழுமமாக திகழும் டாடா குரூப் இந்தியன் ஓட்டல்ஸ் கொரோனாவுக்கு எதிராக அயராது பாடுபடும் மருத்துவப் பணியாளர்களுக்கு உணவு வழங்கி வருகிறது. இதுவரையில் 10 லட்சம் உணவுப் பொட்டலங்களை விநியோகித்துள்ளதாகவும், இது க்யூமின் தளம் மூலம் விநியோகிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை யானது தாஜ் ஓட்டல் பொது சேவை நல அறக்கட்டளை மூலம் செயல்படுத்தப்பட்டுள்ளது என்றார்.

இந்தியன் ஓட்டல்ஸ் நிறுவன மூத்த துணைத்தலைவர் கவுரவ் பொக்ரியால், மருத்துவப் பணியாளர்களுக்கு உணவுப் பொட்டலங்களை வழங்கும் நடவடிக்கையானது 10 மாநிலங்களில் அகமதாபாத், பெங்களூரு, சென்னை, கோவா, ஐதராபாத், கொல்கத்தா, லக்னோ, மும்பை, மைசூரு, புதுடெல்லி, வாராணசி, விசாகப்பட்டினம் உள்ளிட்ட 12 நகரங்களில் மேற்கொள்ளப்பட்டது. மருத்துவ சமூகத்துக்கு உறுதுணையாக இந்தியன் ஹோட்டல்ஸ் கம்பெனி நிறுவனம் செயல்பட்டது என்று கஸ்தூர்பா மருத்துவமனை டாக்டர் சந்திரகாந்த் பவார் தெரிவித்துள்ளார்.

**சீட்டு நிதிசட்டம் 1982ன் கீழ் சிதம்பரம் துணைச்சீட்டு பதிவாளர் நீதிமன்றம்**
முன்னிலை
திருமதி M.சுகந்தி
சீட்டு சார்பதிவாளர்,சிதம்பரம்.
**மத்தியஸ்தர் வழக்கு எண். 44/2021**
ஜெயப்பிரியா சிட்பண்டஸ் (பி) லிமிடெட், புவனகிரி ...மனுதாரர்
எதிர்
1.R. கலைவாணன், த/பெ. ராமானுஜம், நெ.34, தோனித்துரை, பரங்கிப்பேட்டை.
2.M. ரவி, த/பெ.N. மாணிக்கம், நெ.6, மெயின் ரோடு, அண்ணாமலை நகர், சிதம்பரம்.
3.M. ராஜேந்திரன், த/பெ. N. மாணிக்கம், மெயின் ரோடு, ஜம்பு குளம், அண்ணாமலை நகர், சிதம்பரம் தாலுக்கா.
4.K. பாலசுப்ரமணியன், த/பெ.கண்ணையன், நெ.6, அரியநட்டு, கிழக்கு தெரு, பரங்கிப்பேட்டை.(Shair paid)

1 முதல் 4ம் எதிர்மனுதாரர்கள் ஜெயப்பிரியா சிட்பண்டஸ் (பி) லிமிடெட் சீட்டு நிதி நிறுவன வழக்கில் JFP 1007/35ன் சந்தாதாரர் R. கலைவாணன், செலுத்த வேண்டிய தொகையில் ரூ.1,42,565/ பாக்கியுள்ளது என்று தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் வாய்தா நாளான 02.07.2021காலை 11.00 மணிக்கு என் முன் ஆஜராகி உமக்கு இந்த வழக்கு குறித்து ஆட்சேபணை இருந்தால் தொிவித்துக் கொள்ளலாம். தவறினால் தோன்றாத் தரப்பினராக கருதப்பட்டு மத்தியஸ்தர் வழக்கில் உள்ள விஷயம் குறித்து முடிவு செய்யப்படும் என்பதை அறியவும் உத்தரவுப்படி.

**சீட்டு சார்பதிவாளர்**, சிதம்பரம்.

**பொது அறிவிப்பு**

எனது கட்சிக்காரர், சென்னை 14, இராயப்பேட்டை, ஸ்ரீகிருஷ்ணாபுரம் 8/14, Rapid Skyline அபார்ட்மெண்ட்ஸ், எண். 101ல் வசித்து வரும் திரு. R. இராமசாமி கவுண்டர் அவர்கள் குமாரர், K.R.அப்பாவு அவர்கள் அளித்த தகவலின் அடிப்படையில் இந்த பொது அறிவிப்பினை பின்வருமாறு அளிக்கிறேன்.

மேற்படி எனது கட்சிக்காரர் திரு.K.R. அப்பாவு அவர்கள் தனக்குச் சொந்தமான சொத்தின் பொருட்டு வங்கியில் அடைமானம் வைக்க வேண்டியும், வங்கியில் அனைத்து ஆவணங்களின் நகல்கள் கொண்டு விண்ணப்பிக்க வேண்டியும், சொத்தின் பொருட்டுள்ள அனைத்து அசல் தஸ்தாவேஜுக்களுடன் கடந்த 22.06.2021 அன்று பகல் 11.00 மணியளவில், மேற்படி தனது வீட்டின் அருகில் உள்ள நகலகத்திற்குச் சென்று நகல் எடுத்துவிட்டு வீட்டிற்கு திரும்பியபோது, சம்மந்தப்பட்ட சொத்தின் தாயாதிப் பத்திரங்களான கடந்த 27.11.1992ம் தேதி, ஆயிரம் விளக்கு சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திர எண். 329/1993 என்ற பத்திரமும்; கடந்த 19.08.1991ம் தேதி மத்திய சென்னை பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பொது அதிகாரப் பத்திர எண்.271/1991 என்ற பத்திரமும்; கடந்த 29.11.1990ம் தேதி தியாகராய நகர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பொது அதிகாரப் பத்திர எண்.1091/1990 என்ற பத்திரமும்; கடந்த 03.12.1985ம் தேதி மத்திய சென்னை பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் பத்திர எண்.1154/1985 என்ற பத்திரமும்; கடந்த 27.09.1985ம் தேதி மத்திய சென்னை பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் பத்திர எண்.915/1985 என்ற பத்திரமும்; கடந்த 27.09.1985ம் தேதி மத்திய சென்னை பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் பத்திர எண்.914/1985 என்ற பத்திரமும்; கடந்த 29.08.1979ம் தேதி தியாகராய நகர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட விடுதலைப் பத்திர எண். 1553/1979 என்ற பத்திரமும் மற்றும் கடந்த 04.10.1972ம் தேதி தியாகராய நகர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திர எண். 1384/1972 என்ற பத்திரமும் ஆகிய எட்டு பத்திரங்களின் அசலும் தொலைந்து போனதை அறிந்து, மேற்படி எனது கட்சிக்காரர் மிகுந்த அதிர்ச்சிக்குள்ளானார். தொலைந்து போன அசல் பத்திரங்களை பல இடங்களில் தேடியும் பயனில்லை.

இதனால் சகலமானவருக்கும் தெரிவிப்பது, மேற்குறிப்பிட்ட எட்டு அசல் பத்திரங்களைக் கண்டெடுக்கும் நபர், சென்னை 600021,பழைய வண்ணாரப்பேட்டை, பாலு தெரு, கதவிலக்கம் 13/6ல் உள்ள எனது அலுவலகத்திற்கு கொண்டு வந்து சேர்க்கும்படி கேட்டுக் கொள்ளப் படுகிறது. மேற்படி அசல் சான்றிதழ்களை சட்டவிரோதமான வகையில் பயன்படுத்தினால், ஏற்படும் எவ்வித விளைவுகளும் மேற்படி எனது கட்சிக்காரரை கட்டுப்படுத்தாது.

**J.வைத்தியநாதன்.M.Sc., M.L.,**
**வழக்கறிஞர்**
எண்.13/6, பாலு தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை - 600 021.

**பாஃப்னா பார்மசூட்டிகல்ஸ் லிமிடெட்**
**CIN : L24294TN1995PLC030698**
பதிவு அலுவலகம்: புதிய எண்.299, தம்பு செட்டி தெரு, சென்னை-600 001 Tel: 044 - 2526 7517 / 2527 0992 4267 7555, E-mail: info@bafnapharma.com, Website: www.bafnapharma.com

**31.03.2021-ல் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்**

(ரூபாய் லட்சத்தில்) ஒரு பங்கு சம்பாத்தியம் தவிர

| வ.எண். | விவரங்கள் | 31.03.2021 முடிந்த 3 மாதங்கள் | 31.12.2020 முடிந்த 3 மாதங்கள் | 31.03.2020 தொடர்புடைய முடிந்த 3 மாதங்கள் | 31.03.2021 முடிந்த ஆண்டு | 31.03.2020 முன்னர் முடிந்த ஆண்டு |
|---|---|---|---|---|---|---|
| | | தணிக்கையானது | தணிக்கை செய்யாதது | தணிக்கையானது | தணிக்கையானது | தணிக்கையானது |
| 1 | மொத்த வருமானம் | 2214.81 | 1751.44 | 1246.23 | 7196.72 | 4272.78 |
| 2 | மொத்த செலவுகள் | 1951.21 | 1661.40 | 943.33 | 6614.05 | 4460.58 |
| 3 | செயல்பாடுகளிலிருந்து வரிக்கு பின் நிகர லாபம்/ (நஷ்டம்) | 263.60 | 90.04 | (15.67) | 582.67 | (2520.36) |
| 4 | சமபங்கு மூலதனம் | 2365.56 | 2365.63 | 236.56 | 2365.63 | 236.56 |
| 5 | ஒரு பங்கு சம்பாத்தியம் அடிப்படை : பலமிழந்தது : | 1.11 | 0.38 | (0.66) | 2.46 | (106.54) |

குறிப்பு: SEBI (பட்டியலிடுதல் மற்றும் இதர வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தணிக்கையான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் கம்பெனியின் இணையதளம் மற்றும் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் இணையதளத்தில் உள்ளது.

பா.'.ப்னா பார்மசூட்டிக்கல்ஸ் லிமிடெட்-க்காக
ஒப்பம்/- S.ஹேமலதா
Whole Time Director
DIN No: 02714329

இடம் : சென்னை
தேதி : 25.06.2021

**சம்பந்தம் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட்**
பதிவு அலுவலகம்: மில் வளாகம், காமராஜ் நகர் காலனி, சேலம் 636 014
Phone 0427 2240790 Fax 0427 2240169 Website : www.sambandam .com
CIN : L17111TZ1973PLC000675 email : corporate@sambandam.com

**மார்ச் 31, 2021ல் முடிந்த காலாண்டு /ஆண்டுக்கான தணிக்கையான (ஒருங்கிணைந்த) நிதிநிலை முடிவுகள் சுருக்கம்**

(ரூ. லட்சத்தில்)

| வ எண் | விவரங்கள் | முடிந்த காலாண்டு 31.03.2021 | முடிந்த காலாண்டு 31.12.2020 | முடிந்த காலாண்டு 31.03.2020 | முடிந்த ஆண்டு 31.03.2021 | முடிந்த ஆண்டு 31.03.2020 |
|---|---|---|---|---|---|---|
| | | தணிக்கையாகாதது | தணிக்கையாகாதது | தணிக்கையாகாதது | தணிக்கையானது | தணிக்கையானது |
| 1 | செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் | 8,083.68 | 7,004.61 | 4,512.03 | 23,106.91 | 19,117.59 |
| 2. | காலத்திற்கான நிகர லாபம் (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்கள் முன்) | 1,157.38 | 467.34 | (111.27) | 1,046.07 | 278.76 |
| 3. | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம் (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்கள் பின்) | 1,157.38 | 467.34 | (111.27) | 1,046.07 | 278.76 |
| 4. | தொடரும் செயல்பாடுகளிலிருந்து வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் | 920.60 | 386.14 | (130.97) | 811.79 | 230.56 |
| 5. | கைவிடப்பட்ட செயல்பாடுகளிலிருந்து வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் | – | – | – | – | – |
| 6. | காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம் (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது) | 888.50 | 362.24 | (103.79) | 740.96 | 185.94 |
| 7. | ஈக்விடி பங்கு மூலதனம் | 427.55 | 427.55 | 427.55 | 427.55 | 427.55 |
| 8. | கடந்த ஆண்டு தணிக்கையான நிதிநிலை அறிக்கையில் உள்ளபடி நிகர மதிப்பு | – | – | – | 9,657.23 | 8,916.27 |
| 9. | ஒரு பங்கு சம்பாத்தியம் (தொடரும் மற்றும் கைவிடப்பட்ட செயல்பாடுகளிலிருந்து (ஒன்று ரூ.10–) (வருடாந்திரமல்ல) (ஏ) அடிப்படை | 21.59 | 9.05 | (3.07) | 19.03 | 5.41 |
| | (பி) டைலூட்டட் | 21.59 | 9.05 | (3.07) | 19.03 | 5.41 |

**மார்ச் 31, 2021ல் முடிந்த காலாண்டு /ஆண்டுக்கான தணிக்கையான (தனியான) நிதிநிலை முடிவுகள் சுருக்கம்**

(ரூ. லட்சத்தில்)

| வ எண் | விவரங்கள் | முடிந்த காலாண்டு 31.03.2021 | முடிந்த காலாண்டு 31.12.2020 | முடிந்த காலாண்டு 31.03.2020 | முடிந்த ஆண்டு 31.03.2021 | முடிந்த ஆண்டு 31.03.2020 |
|---|---|---|---|---|---|---|
| | | தணிக்கையாகாதது | தணிக்கையாகாதது | தணிக்கையாகாதது | தணிக்கையானது | தணிக்கையானது |
| 1 | செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் | 8,083.68 | 7,004.61 | 4,512.03 | 23,106.91 | 19,117.59 |
| 2. | காலத்திற்கான நிகர லாபம் (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்கள் முன்) | 1,160.27 | 442.94 | (106.90) | 1,041.32 | 275.67 |
| 3. | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம் (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்கள் பின்) | 1,160.27 | 442.94 | (106.90) | 1,041.32 | 275.67 |
| 4. | தொடரும் செயல்பாடுகளிலிருந்து வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் | 923.49 | 361.44 | (126.60) | 807.04 | 227.47 |
| 5. | கைவிடப்பட்ட செயல்பாடுகளிலிருந்து வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் | – | – | – | – | – |
| 6. | காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம் (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது) | 891.39 | 337.54 | (99.42) | 736.21 | 182.85 |
| 7. | ஈக்விடி பங்கு மூலதனம் | 427.55 | 427.55 | 427.55 | 427.55 | 427.55 |
| 8. | கடந்த ஆண்டு தணிக்கையான நிதிநிலை அறிக்கையில் உள்ளபடி இதர ஈக்விடி | – | – | – | 9,677.30 | 8,941.09 |
| 9. | ஒரு பங்கு சம்பாத்தியம் (தொடரும் மற்றும் கைவிடப்பட்ட செயல்பாடுகளிலிருந்து (ஒன்று ரூ.10–) (வருடாந்திரமல்ல) (ஏ) அடிப்படை | 21.65 | 8.47 | (2.97) | 18.92 | 5.33 |
| | (பி) டைலூட்டட் | 21.65 | 8.47 | (2.97) | 18.92 | 5.33 |

குறிப்புகள்:

1. SEBI (பட்டியலிடுதல் மற்றும் இதர வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஒருங்கிணைந்த மற்றும் தனியான தணிக்கையான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. ஒருங்கிணைந்த மற்றும் தனியான தணிக்கையான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் கம்பெனியின் இணையதளம் www.sambandam.com மற்றும் மும்பை ஸ்டாக் எக்சேஞ் இணையதளம் www.bseindia.comல் உள்ளது.

குழுவின் சார்பாக
S. தேவராஜன்
சேர்மன் மற்றும் நிர்வாக இயக்குனர்

இடம் : சேலம்
தேதி : 26.06.2021

## தருமபுரி அருகே சரக்கு ரெயில் தடம் புரண்டது

தருமபுரி, ஜூன் 27–

**தருமபுரி மாவட்டம் பொம்மிடி அருகே சரக்கு ரெயில் தடம் புரண்டது.**

சேலத்திலிருந்து இன்று காலை (27ம் தேதி) சரக்கு ரயில் ஒன்று ஜோலார்பேட்டை நோக்கி சென்று கொண்டிருந்தது. தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் பொம்மிடி அருகே சென்றபோது எதிர்பாராதவிதமாக இந்த ரெயிலின் ஒரு பெட்டியின் சக்கரம் தண்டவாளத்தில் இருந்து தடம்புரண்டது. இதை அறிந்த சரக்கு ரெயிலின் ஓட்டுநர் உடனடியாக ரெயிலை நிறுத்தினார்.

பின்னர் தடம்புரண்ட ரெயில் பெட்டியை தொழில்நுட்பப் பணியாளர்கள் மூலம் சரி செய்யும் பணி தற்போது தீவிரமாக நடந்து வருகிறது. சரக்கு ரயில் தடம் புரண்ட காரணத்தால் அவ்வழியே செல்லும் இதர சரக்கு மற்றும் பயணிகள் ரெயில்களை இயக்குவதில் சிறு தாமதம் ஏற்பட்டுள்ளது.

## வாக்குறுதிகளை நிறைவேற்றாத ஜெகன்மோகன்: எதிர்க்கட்சிகள் விமர்சனம்

அமராவதி, ஜூன் 27–

ஆந்திர முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி தனது தேர்தல் வாக்குறுதியில், தான் ஆட்சிக்கு வந்ததும் ஆண்டுக்கு 2 லட்சம் அரசு வேலை வழங்குவதாக வாக்குறுதி அளித்தார். அதன்படி வழங்காததால், எதிர்க்கட்சியினர் உட்பட பட்டதாரிகள், பெற்றோர் என பலத்தரப்பினர் ஜெகன் அரசை விமர்சிக்க தொடங்கினர். இதனால், சமீபத்தில் 10,200 அரசுப் பணியிடங்களை நிரப்புவதாக அறிவித்து, அதற்கான அட்டவணையையும் முதல்வர் வெளியிட்டார்.

இந்நிலையில், குரூப் 1 வேலை முதற்கொண்டு அனைத்து அரசு பணிகளுக்கும் எழுத்து தேர்வுகள் மட்டுமே நடத்தப்படும் என்றும், நேர்முகத் தேர்வுகள் நடத்தப்படாது எனவும் புதிய அரசாணையை ஆந்திர அரசு நேற்று வெளியிட்டுள்ளது. அப்படியெனில், பணிக்கான ஆட்களை எப்படி தேர்வு செய்வர் என மக்கள் குழப்பம் அடைந்துள்ளனர்.

## பாலியல் புகாரில் கைதான தடகள பயிற்சியாளர் நாகராஜன் மீது குண்டர் சட்டம் பாய்ந்தது

சென்னை, ஜூன் 27–

**பாலியல் புகாரில் கைதான தடகள பயிற்சியாளர் நாகராஜன் மீது குண்டர் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.**

சென்னை, பாரிமுனை, பிராட்வேயில் பச்சையப்பன் பள்ளி வளாகத்தில், நாகராஜன் "பிரைம் ஸ்போர்ட்ஸ் அகாடமி"என்ற தடகள பயிற்சி மையத்தை நடத்தி வந்தார். தடகள பயிற்சிக்கு வந்த வீராங்கனைகளுக்கு பாலியல் தொந்தரவு அளித்ததாக காவல்துறையினரிடம் புகார் அளிக்கப்பட்டது. இந்த புகாரின் பேரில் தடகள பயிற்சியாளர் நாகராஜன் மீது போக்சோ, கொலை மிரட்டல் உள்ளிட்ட 5 பிரிவுகளின் கீழ் மீது பூக்கடை போலீசார் வழக்குப்பதிவு கைது செய்து செய்தனர்.

இந்நிலையில்,சென்னை மாநகர காவல் ஆணையர் சங்கர் ஜிவால் உத்தரவுப்படி நாகராஜன் மீது குண்டாஸ் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## பெண் உதவியாளரை முத்தமிட்ட இங்கிலாந்து அமைச்சர் ராஜினாமா

லண்டன், ஜூன் 27–

**பெண் உதவியாளரை கட்டியணைத்து முத்தமிட்ட இங்கிலாந்து சுகாதார அமைச்சர் மாட் ஹான்க் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.**

இங்கிலாந்தில் அண்மையில் கொரோனா கட்டுப்பாடுகளில் தளர்வுகள் அறிவிக்கப்படுவதற்கு முன்பு வரை சமூக இடைவெளியை உறுதி செய்யும் வகையில் பொது இடங்களில் கை குலுக்குதல், கட்டித்தழுவுதல் போன்றவற்றுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. இந்த சூழலில் அந்த நாட்டின் சுகாதாரத்துறை அமைச்சர் மாட் ஹான்க் கொரோனா சமூக இடைவெளி விதிமுறைகளை மீறி தனது அலுவலகத்தில் வைத்து பெண் உதவியாளரை கட்டி அணைத்து முத்தம் கொடுத்த சம்பவம் பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளது. சமூக இடைவெளி விதிமுறைகள் அமலில் இருந்த சமயத்தில் மாட் ஹான்க் தனது உதவியாளருக்கு முத்தம் கொடுத்த காட்சி அங்குள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவான நிலையில், அந்த நாட்டின் பிரபல தினசரி பத்திரிகை ஒன்று இது தொடர்பான புகைப்படங்களை வெளியிட்டது.

இதனை தொடர்ந்து சுகாதார அமைச்சர் மாட் ஹான்க் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்ததோடு, பிரதமர் போரிஸ் ஜான்சனிடம் இது தொடர்பாக மன்னிப்பும் கோரினார். இதையடுத்து மாட் ஹான்க்கின் மன்னிப்பை ஏற்றுக்கொண்டதாகவும், இந்த பிரச்சினை முடிந்து விட்டதாகவும் போரிஸ் ஜான்சன் அறிவித்தார். எனினும் இந்த விவகாரத்தில் சுகாதார அமைச்சர் மாட் ஹான்க் பதவி விலக வேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. இந்நிலையில், சுகாதார அமைச்சர் மாட் ஹான்க் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

# வண்ண மீன்கள் விற்பனையகம் அமைத்து தரப்படும்: முதல்வர் ஸ்டாலின் உறுதி

சென்னை, ஜூன் 27–

**வண்ண மீன்கள் விற்பனையகம் அமைத்து தரப்படும் என்று முதல்வர் ஸ்டாலின் உறுதி அளித்தார்.**



சென்னை கொளத்தூரில் நடைபெற்ற வண்ணமீன் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்களுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பேசியதாவது:– வண்ணமீன்கள் விற்பனை செய்யக்கூடிய சுமார் 200–க்கும் மேற்பட்ட கடைகள் கொளத்தூர் பகுதியில் இருக்கிறது. இதில் 150 வகையான மீன்கள் விற்பனை செய்யப்படுகிறது. இதன்மூலம் கொளத்தூரில் மட்டும் நேரடியாகவும், மறைமுகமாகவும் 15 ஆயிரம் நபர்களுக்கும் மேல் வேலைவாய்ப்பை பெறக்கூடிய வாய்ப்பு அமைந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அதனால் தான் வண்ணமீன் பூங்கா அமைக்க வேண்டும் என்று 2017–ம் ஆண்டு, தேதியும் சொல்ல வேண்டும் என்றால் 19.6.2017 அன்று சட்டமன்றத்தில் உங்களுடைய சட்டமன்ற உறுப்பினராக நான் கோரிக்கை வைத்தேன் என்பது உங்களுக்கு தெரியும். சட்டமன்றத்தில் கோரிக்கை வைத்த நான், அமைச்சர் சேகர்பாபுவும், கழக நிர்வாகிகளும் அதற்கான எல்லா முயற்சிகளையும் எடுத்து, வண்ணமீன்கள் வானவில் தொழில்நுட்ப பூங்கா தற்போது மாதவரத்தில் அமைக்கப்பட்டு செயல்பட்டு கொண்டிருக்கிறது என்பது உங்களுக்கு எல்லாம் நன்றாக தெரியும்.

இப்போது இன்னும் சில கோரிக்கைகளை வைத்திருக்கிறீர்கள். எதிர்கட்சியாக இருக்கின்ற போதே, சட்டமன்ற உறுப்பினராக இருந்த போதே உங்களது கோரிக்கையை நிறைவேற்றி கொடுத்திருக்கிறேன் என்றால், இப்போது ஆளுங்கட்சியாக இருக்கும்போது, அதுவும் முதலமைச்சர் பொறுப்பில் இருக்கும் போது அதை நிறைவேற்றி தருவேன் என்ற நம்பிக்கை என்னைவிட இப்போது உங்களுக்குத் தான் அதிகமாக இருக்கிறது.

### 3 பேஸ் மின்சாரம்

குறிப்பாக நீங்கள் வைத்த கோரிக்கைகளை சுட்டிக்காட்ட வேண்டுமென்றால், வண்ணமீன்களை விற்பனை செய்கின்ற கடைகள் ஒரே இடத்தில் இயங்க ஏதுவாக கட்டிடம் கட்டித்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கை, வண்ணமீன்கள் உணவு உற்பத்தி பயிற்சி மையம் ஏற்படுத்தி பயிற்சி தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஒரு கோரிக்கை, வண்ணமீன்கள் அங்காடி பண்ணைகளுக்கு, மின் கட்டணம் தொழிற்சாலைகளுக்கும், வணிக நிறுவனங்களுக்கும் விதிப்பது போல் இல்லாமல் கலைஞரின் ஆட்சிக் காலத்தில் வண்ண மீன்கள் உற்பத்தியாளர்களுக்கு 3 பேஸ் மின்சாரம் வழங்கப்பட்டது. அந்த மானிய மின்சாரம் தற்போது தடைப்பட்டு விட்டது என்று சொன்னார்கள்.

### வண்ணமீன்கள் விற்பனையகம்

இதை வழங்க சம்பந்தப்பட்ட துறையோடு கலந்துபேசி நிச்சயமாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும். வண்ணமீன்கள் விற்பனையகம் அமைத்துதர சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளோடு கலந்துபேசி, அதைப்பற்றி ஆய்வு நடத்தி, அதற்குரிய நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும். அதனால்தான், சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளையும் அழைத்து இந்த நிகழ்ச்சியில் அமர வைத்திருக்கிறோம். ஏன் என்றால், இந்த பிரச்சனையில் அவர்களும் அதிக கவனம் செலுத்த போகிறார்கள். அந்த கவனம் செலுத்தும் முயற்சியில் நிச்சயமாக நானும் ஈடுபடுவேன்.

ஆகவே, நீங்கள் வைத்த கோரிக்கைகள் அத்தனையும் நிறைவேற்றப்படும் என்ற உறுதியை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, தொடர்ந்து இந்த அமைப்புகள் என்னென்ன கோரிக்கைகள் வைக்கிறதோ, அதை அரசு வருகின்ற காலக்கட்டங்களில் சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் நிச்சயமாக நிறைவேற்றித் தரும் என்ற நம்பிக்கையை மீண்டும் ஒருமுறை உங்களுக்கு எல்லாம் எடுத்துச்சொல்லி, என்னுடைய நன்றியைதெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறுமுதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கூறினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி சந்தித்து, கொரோனா நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பணியாளர்களின் ஒருநாள் சம்பளத் தொகையான 1 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே. பிரபாகர், டாஸ்மாக் மேலாண்மை இயக்குநர் எல்.சுப்பிரமணியன் ஆகியோர் உடன் உள்ளனர்.

**அடுத்த ஆண்டு நடைபெறும்**

## உத்தரப்பிரதேச சட்டசபை தேர்தலில் தனித்து போட்டி: மாயாவதி அறிவிப்பு

லக்னோ, ஜூன் 27–

**அடுத்த ஆண்டு நடக்கும் உத்தரப்பிரதேசம் மற்றும் உத்தரகாண்ட் சட்டசபை தேர்தலில் பகுஜன் சமாஜ் கட்சி தனித்து போட்டியிடும் என அக்கட்சி தலைவர் மாயாவதி கூறி உள்ளார்.**

உத்தரப்பிரதேசம் மற்றும் உத்தரகாண்ட் மாநிலங்களுக்கு அடுத்த ஆண்டு சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. இதற்காக அரசியல் கட்சிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. பஞ்சாப் மாநிலத்தில், அங்கு முக்கிய எதிர்க்கட்சியான சிரோன்மணி அகாலிதளம் கட்சியுடன், மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சி கூட்டணி அமைத்து உள்ளது. இதனையடுத்து, உத்தரப்பிரதேசம் மற்றும் உத்தரகாண்ட் சட்டசபை தேர்தலில், ஒவைஸியின் ஏஐஎம்ஐஎம் கட்சியுடன் மாயாவதி கூட்டணி அமைப்பார் என தகவல்கள் வெளியாகியது.

இது தொடர்பாக மாயாவதி கூறியிருப்பதாவது:–

வரும் உத்தரப்பிரதேச சட்டசபை தேர்தலில் ஏஐஎம்ஐஎம் மற்றும் பகுஜன் சமாஜ் கட்சிகள் கூட்டணி அமைக்கும் என்ற செய்திகள் ஊடகங்களில் வந்து கொண்டு உள்ளன. இந்த செய்தி முற்றிலும் தவறானது. இந்த செய்தியை பகுஜன் சமாஜ் கட்சி மறுக்கிறது. பஞ்சாபை தவிர, உத்தரப்பிரதேசம் மற்றும் உத்தர்கண்டில் கூட்டணி அமைத்து போட்டியிட மாட்டோம். அங்கு தனித்து போட்டியிட உள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் கா.பாலச்சந்திரன், உறுப்பினர்கள் டாக்டர் பி.கிருஷ்ணகுமார், ஏ.வி. பாலுசாமி, செயலாளர் பி.உமா மகேஸ்வரி, தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் கிரண் குராலா ஆகியோர் சந்தித்து, கொரோனா நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர், உறுப்பினர்கள், உயர் அலுவலர்கள், பணியாளர்கள் சார்பில் அளிக்கப்பட்ட தொகைக்கான காசோலையை வழங்கினர்.

# தமிழகத்தில் பள்ளிகள் எப்போது திறக்கப்படும்?

**அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேட்டி**

திருச்சி, ஜூன் 27–

**கொரோனா தொடர்பாக மருத்துவ வல்லுநர்களின் ஆலோசனை மற்றும் பெற்றோர்களின் அச்சம் குறைந்த பிறகே பள்ளிகள் திறப்பு குறித்து முடிவு எடுக்கப்படும் என்று அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்தார்.**

தமிழகம் முழுவதும் இந்து சமய அறநிலையத்துறை கோவில்களில் மாத சம்பளம் இன்றி பணியாற்றும் அர்ச்சகர்களுக்கு தமிழ்நாடு அரசு சார்பில் கொரோனா கால நிவாரண உதவியாக ரூ.4 ஆயிரம் தொகை, 10 கிலோ அரிசி மற்றும் மளிகைப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் திருச்சி மாவட்டத்தில் 603 பேருக்கு வழங்கப்படுகிறது.



திருச்சி மாவட்ட கோவில்களில் மாத ஊதியமின்றி பணியாற்றி வரும் அர்ச்சகர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நிவாரண நிதி மற்றும் 15 வகையான மளிகைப் பொருட்களை வழங்கினார்.

திருச்சி மலைக்கோட்டை தாயுமானவர் சுவாமி கோவிலில் மாவட்ட வருவாய் அலுவலர் த.பழனிகுமார் தலைமையில் இன்று நடைபெற்ற விழாவில் மாத ஊதியமின்றி பணியாற்றி வரும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், பூசாரிகள் மற்றும் இதரப் பணியாளர்களுக்கு கொரோனா கால நிவாரண நிதியாக ரூபாய் 4,000 மற்றும் 10 கிலோ அரிசி உள்ளிட்ட 15 வகையான மளிகைப் பொருட்களை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழங்கினார்.

மற்றும் இதன் உபகோவில்களான அய்யனார்சுவாமி திருக்கோவில் அர்ச்சகர்களுக்கும் நிவாரண உதவிகளை அமைச்சர் வழங்கினார்.

பின்னர், செய்தியாளர்களிடம் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறியதாவது:–

"பிளஸ் 2 மாணவர்களுக்கு மதிப்பெண் வழங்குவது தொடர்பான வழிக்காட்டல் வெளியிடப்பட்டுள்ளது. பிளஸ் 2 முடித்த மாணவர்களின் 10ம் வகுப்பு, பிளஸ் 1 வகுப்பு மதிப்பெண்கள் பள்ளிக் கல்வித் துறையிடம் உள்ளது. எனவே, பிளஸ் 2 முடித்த மாணவர்களுக்கு மதிப்பெண் வழங்குவது எளிது. மதிப்பெண்கள் வழங்கும் பணி விரைவில் முடிக்கப்பட்டு வெளியிடப்படும்.

கொரோனா தாக்கம் தற்போது குறைந்து வருகிறது. 3வது அலை வரும் என்று கூறப்படுகிறது. எனவே இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் வழிக்காட்டுதல்கள், மருத்துவ வல்லுநர்களின் ஆலோசனைகள் மற்றும் பெற்றோர்களின் அச்சம் குறைந்த பிறகே, அவர்களின் கருத்துகளையும் பெற்று, முதல்வரின் ஆலோசனையைப் பெற்று பிறகே பள்ளிகளைத் திறப்பது குறித்து முடிவெடுக்கப்படும் என்றார்.

நிகழ்ச்சியில் திருச்சி கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் எஸ். இனிகோ இருதயராஜ், வருவாய் கோட்டாட்சியர் விஸ்வநாதன், இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர்கள் எஸ்.மோகனசுந்தரம், த.விஜயராணி, திருச்சி கிழக்கு வட்டாட்சியர் குகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# இந்தியாவில் புதிதாக 50 ஆயிரத்து 40 பேருக்கு கொரோனா

புதுடெல்லி, ஜூன் 27–

**இந்தியாவில் புதிதாக 50 ஆயிரத்து 40 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.**

இந்தியாவில் கொரோனா தொற்றின் 2வது அலை மிக மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தியது. தினசரி பாதிப்பு பல நாட்கள் 4 லட்சத்தை தாண்டியது. தற்போது ஊரடங்கு, பொதுமுடக்கம், கட்டுப்பாடுகளால் 2வது அலை தொடர்ந்து குறைந்து வருகிறது. தினசரி கொரோனா பாதிப்பு விகிதம் 2.82% ஆக உள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் கொரோனா பாதிப்பு குறித்து மத்திய சுகாதாரத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

நாட்டில் புதிதாக 50 ஆயிரத்து 40 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுவரை 3 கோடியே 2 லட்சத்து 33 ஆயிரத்து 183 கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் தினந்தோறும் கொரோனா தொற்றால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கையைக் காட்டிலும், அதில் இருந்து மீட்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்கிறது. ஒரே நாளில் 57 ஆயிரத்து 944 பேர் குணமடைந்துள்ளனர். இதுவரை 2 கோடியே 92 லட்சத்து 51 ஆயிரத்து 29 பேர் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டுள்ளனர். மீட்பு விகிதமும் 96.72 சதவீதமாக அதிகரித்துள்ளது.

இந்தியாவில் கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 3 லட்சத்து 95 ஆயிரத்து 751 ஆக உயர்ந்துள்ளது. ஒரே நாளில் 1,258 பேர் உயிரிழந்துள்ளனர். உயிரிழப்பு விகிதம் 1.31% ஆக உள்ளது. நாடு முழுவதும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட 5 லட்சத்து 86 ஆயிரத்து 403 பேர் சிகிச்சையில் உள்ளனர்.

இந்தியாவில் நேற்று (ஜூன் 26) ஒரே நாளில் 17 லட்சத்து 77 ஆயிரத்து 309 மாதிரிகள் பரிசோதனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதாக ஐ.சி.எம்.ஆர் தெரிவித்துள்ளது. இதுவரை இந்தியாவில் 40 கோடியே 42 லட்சத்து 65 ஆயிரம் மாதிரிகள் சோதனை செய்யப்பட்டுள்ளன.

இந்த தகவல்களை மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்தது.

உலக அளவில் கொரோனாவால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 18.15 கோடியைக் கடந்துள்ளது. கொரோனா வைரஸ் பாதிப்பில் இருந்து 16.60 கோடிக்கும் அதிகமானோர் குணமடைந்துள்ளனர். மேலும், வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 39.32 லட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

## வங்கி ஏடிஎம் மையங்களை கூகுள் மேப் மூலம் கண்டுபிடித்த கொள்ளையர்கள்: போலீஸ் விசாரணையில் பரபரப்பு தகவல்

சென்னை, ஜுலை. 27–

**வங்கி ஏடிஎம் மையங்களை கூகுள் மேப் மூலம் கண்டுபிடித்து கொள்ளையடித்தது போலீஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.**

சென்னையில் எஸ்பிஐ வங்கி ஏடிஎம்களில் நூதன முறையில் கொள்ளையடித்த ஹரியானாவைச் சேர்ந்த அமீர் அர்ஷ் என்பவன் கடந்த வாரமும், வீரேந்தர் நேற்றும் கைது செய்யப்பட்டனர். அமீர் அர்ஷை ராயலாநகர் போலீசார் தற்போது 5 நாட்கள் போலீஸ் காவலில் எடுத்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். அமீர் அர்ஷ் ஹரியானா மாநிலம் மேவாட் மாவட்டம் பல்லப்கர்க் பகுதியில் உள்ள வங்கியில் கணக்கு வைத்துள்ளது தெரியவந்தது. அவன் வைத்திருந்த 3 ஏடிஎம் கார்டுகளின் வங்கி கணக்குகளையும் சென்னை காவல்துறையினர் முடக்கியுள்ளனர்.

அமீரின் செல்போனை காவல்துறையினர் பறிமுதல் செய்து ஆய்வு செய்ததில் அதில் எஸ்பிஐ வங்கி ஏடிஎம் மையங்களை கண்டறிய கூகுள் மேப்பை பயன்படுத்தி உள்ளது தெரியவந்தது. அவன் சென்னைக்கு வந்து கூகுள் மேப்பை பயன்படுத்தி இருப்பதை காவல்துறையினர் கண்டறிந்து ஆதாரங்களை கைப்பற்றி உள்ளனர். விசாரணையில் மேலும் பல பரபரப்புத் தகவல்கள் வெளியாகியுள்ளதாக போலீசார் சார்பில் தெரிவித்துள்ளனர்.

## விரைவில் மத்திய அமைச்சரவையில் மாற்றம்: புதிதாக 27 பேர் இடம்பெற வாய்ப்பு

புதுடெல்லி, ஜூன் 27–

**விரைவில் மாற்றியமைக்கப்பட உள்ள மத்திய அமைச்சரவையில் பாரதீய ஜனதா மூத்த தலைவர்கள் ஜோதிராதித்ய சிந்தியா, சுஷில் குமார் மோடி, சர்பானந்த சோனாவல் உள்ளிட்ட 27 பேர் இடம்பெற வாய்ப்பு இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

கடந்த 2019ம் ஆண்டு 2வது முறையாக பிரதமர் மோடி தலைமையிலான பாரதீய ஜனதா ஆட்சி அமைந்தது. அப்போது அமைக்கப்பட்ட மத்திய அமைச்சரவை தான், எந்த மாறுதலுக்கும் உட்படாமல் 3 ஆண்டுகளுக்கும் மேலாக இன்று வரை தொடர்கிறது.

இந்த சூழலில், மத்திய அமைச்சர்களாக இருந்த சில அமைச்சர்கள் அண்மையில் உயிரிழந்தனர். அதே போல, பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து சிவசேனா, அகாலி தளம் ஆகிய கட்சிகளும் வெளியேறியதால் மத்திய அமைச்சரவையில் பல இலாக்காக்கள் காலியாகின. இந்த இலாக்காக்களை இப்போது உள்ள அமைச்சர்களே கூடுதலாக கவனித்து வருவதால் அவர்களுக்கும் அதிக அளவில் பணிச்சுமை ஏற்பட்டுள்ளது.

இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு, மத்திய அமைச்சரவையை மாற்றியமைக்கவும், விரிவாக்கம் செய்யவும் பிரதமர் நரேந்திர மோடி திட்டமிட்டுள்ளார். இதனை முன்னிட்டு, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாரதீய ஜனதா தேசியத் தலைவர் ஜே.பி. நட்டா ஆகியோருடன் மோடி கடந்த சில வாரங்களாக ஆலோசனையில் ஈடுபட்டு வருகிறார். எந்தெந்த அமைச்சர்களின் செயல்பாடு நன்றாக உள்ளது; எந்த துறைகள் வளர்ச்சித் திட்டங்களில் பின்தங்கி இருக்கிறது உள்ளிட்டவை குறித்தும் அவர்கள் ஆலோசனை நடத்தினர்.

இந்நிலையில், மாற்றியமைக்கப்படவுள்ள புதிய அமைச்சரவையில் இடம்பெறவுள்ள புதிய நபர்கள் யார் யார் என்பது குறித்து அதிகாரப்பூர்வமற்ற தகவல்கள் வெளியாகி உள்ளன.

அதன்படி, காங்கிரசில் இருந்து சமீபத்தில் பாரதீய ஜனதாவில் இணைந்த மத்திய பிரதேசத்தை சேர்ந்த ஜோதிராதித்திய சிந்தியா, பிகார் முன்னாள் துணை முதல்வர் சுஷில் குமார் மோடி, அசாம் முன்னாள் முதல்வர் சர்பானந்த சோனாவல், மகாராஷ்டிரா முன்னாள் முதல்வர் நாராயண் ராணே, மகாராஷ்டிராவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ப்ரீத்தம் முண்டே, உத்தரபிரதேச பாரதீய ஜனதா தலைவர் ஸ்வதந்திர தேவ் சிங், பாரதீய ஜனதா மூத்த தலைவர் வருண் காந்தி, மாநிலங்களவை எம்.பி. அனில் ஜெயின், மேற்கு வங்கத்தைச் சேர்ந்த முன்னாள் ரயில்வே அமைச்சர் தினேஷ் திரிவேதி உள்ளிட்ட 27 பேர் புதிய அமைச்சரவையில் இடம்பெறுவார்கள் என தெரிகிறது.

Edited, Printed and Published by R. Muthu Kumar at No. 1, First Main Road, United India Colony, Kodambakkam, Chennai-600 024 and printed at Print House, 1 First Main Road, United India Colony, Kodambakkam, Chennai 600024 on behalf of M/s. Newsmen Associates Limited
நிர்வாகம், விளம்பரம், சர்குலேஷன் போன்: 24733900, 24733910, E-mail : makkalkural@gmail.com, ஆசிரியர் குழு: 24734700, பேக்ஸ்: 24732700, 24735700 இமெயில்: makkalkural.news@gmail.com நிறுவன ஆசிரியர்: எம். சண்முகவேல். Subject to Madras Court Jurisdiction.